'தமிழன்' பத்திரிகை வீடுகளுக்கு நேரடியாக விநியோகிக்கப்படும். QR ஐ ஸ்கேன் செய்து தகவல்களை பெற்றுக்கொள்ளுங்கள்.




Follow us:

# தமிழன்

THAMILAN

தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்

மலர் : 03, இதழ்: 257 சோபகிருது வருடம், ஆனி மாதம் 04ஆம் திகதி திங்கட்கிழமை (19.06.2023) ஹிஜ்ரி 1444, துல்கஃதா - 29, 0115 886187 - பக்கங்கள் 10

விலை ரூ.50


# ஜெனீவா கூட்டத்தொடர் இன்று ஆரம்பமாகிறது!



## இலங்கை நிலவரம் குறித்து ஐ.நா. மனித உரிமைகள் பேரவை அதிருப்தி வெளியிடுமென தகவல்

நமது விசேட செய்தியாளர்

ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவையின் 53ஆவது அமர்வு இன்று ஜெனீவாவில் ஆரம்பமாகவுள்ளது. ஜூலை 14ஆம் திகதிவரை இந்த அமர்வு இடம்பெறும்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவையின் 53ஆவது அமர்வில் இலங்கையில் பொறுப்புக்கூறல் விடயத்தில் முன்னேற்றம் ஏற்படாதது குறித்து மனித உரிமை ஆணையாளர் அமர்வில் கவலையை... 02 பக்கம்

## பரிகார பூஜை செய்த பெண் திடீர் உயிரிழப்பு

### லக்கலவில் சம்பவம்

லக்கல, தாஸ்கிரிய, ஹத்தொட்டமுன பிரதேசத்தில் பரிகாரப் பூஜை ஒன்றின்போது சுகவீனமடைந்த பெண் ஒருவர் வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்ட பின்னர் உயிரிழந்த சம்பவம் ஒன்று பதிவாகியுள்ளது.

கடந்த வெள்ளிக்கிழமை (16) மாலை முதல் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை (17) காலை வரை இந்த பூஜை இடம்பெற்றதாக பொலிஸார் தெரிவித்தனர். 02 பக்கம்

## ஊழல் எதிர்ப்புச் சட்டமூலத்தை ஏற்றுக்கொள்ள முடியாது

### ஐக்கிய மக்கள் சக்தி அறிவிப்பு

நாட்டிலிருந்து திருடப்பட்ட பணத்தை மீட்பதற்கும் சம்பந்தப்பட்டவர்களுக்கு தண்டனை வழங்குவதற்கும் போதிய ஏற்பாடுகள் உள்ளடக்கப்படாத காரணத்தினால், ஊழல் எதிர்ப்புச் சட்டமூலத்தை ஏற்றுக்கொள்ள முடியாது என ஐக்கிய மக்கள் சக்தி தெரிவித்துள்ளது.

இவ்வாறான காரணங்களால் ஊழலுக்கு எதிரான சட்டமூலத்துக்கு ஆதரவளிக்க தமது கட்சியினால் முடியாது என அதன் தேசிய அமைப்பாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்துள்ளார். 02 பக்கம்

## ஊழ்ஹிய்யாவுக்கான கால்நடைகளை எடுத்துச் செல்வதற்கு அனுமதி

அஷ்ரப் ஏ. சமத்

புனித ஹஜ் பெருநாளை முன்னிட்டு ஊழ்ஹிய்யாவுக்கான கால்நடைகளை எதிர்வரும் 29ஆம் திகதிவரை நாட்டின் பல்வேறு பகுதிகளுக்கும் கொண்டு செல்வதற்கான அனுமதியை பொலிஸ்மா அதிபர் வழங்கியுள்ளார்.

பாராளுமன்ற உறுப்பினர் ஏ.எச்.எம்.பௌஸி மற்றும் முன்னாள் மேல் மாகாண ஆளுநர் அலவி மௌலானாவின் பிரத்தியேக செயலாளர் நக்கீப் மௌலானா ஆகியோர் பொலிஸ்மா அதிபர் விக்கிரமரத்னவை அண்மையில் சந்தித்தனர். இதன்போது இலங்கை முஸ்லிம்கள் ஹஜ் பெருநாள் காலத்தில் நிறைவேற்றும்... 02 பக்கம்

## பணமில்லாதோருக்கு உணவு இலவசம்!

### மாற்றுத்திறனாளிகள், யாசகர்களுக்கு கட்டணமில்லை திருகோணமலை தமிழ்ப்பெண்ணின் கருணை மனம்

பணமின்றி பசி என்று வருபவர்களுக்கு இலவசமாக உணவு வழங்கும் மகத்தான பணியை முன்னெடுத்து வரும் திருகோணமலை பெண் ஒருவரின் செயற்பாடு குறித்து பலரும் பாராட்டு தெரிவித்துள்ளனர்.

லோகவர்த்தினி என்ற இளம் பெண்ணே இந்த செயற்பாட்டை முன்னெடுத்து வருகிறார். 02 பக்கம்





## நயினாதீவு நாகபூசணி அம்மன் ஆலய வளவில் நாகப் பாம்புகள்

யாழ்ப்பாணம் – நயினாதீவு நாகபூசணி அம்மன் வீதியில் சனிக்கிழமை (17) நாகங்கள் தென்பட்டதாகக் கூறி அது தொடர்பான படங்களை சைவ பக்தர்கள் சமூக ஊடகங்களில் பகிர்ந்துள்ளனர். நயினாதீவு நாகபூசணி அம்மன் ஆலய வருடாந்த திருவிழா இன்று 19ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது. 02 பக்கம்



## ஜலனி பிரேமதாசவுக்கு அதியுன்னத விருது

மூன்று பீடங்களினதும் மாகாண மகா சங்கத்தினின் ஆசீர்வாதத்துடன் திருமதி ஜலனி பிரேமதாசவுக்கு 'ஸ்ரீ சுகத சாசன பிரசாதனி' என்ற கௌரவ நாமம் வழங்கல் தியத்தலாவ கஹகொல்ல ஸ்ரீ சுதர்சனா ராமய புராண விகாரையில் சனிக்கிழமை 17) இடம்பெற்றது .

சம்புத்த சாசனத்தின் இருப்புக்கும் அதனை நிலைநிறுத்துவதற்கும் முன்னேற்றுவதற்கும் அவர் ஆற்றிய உன்னத பணியைப் பாராட்டி திருமதி ஜலனி பிரேமதாசவுக்கு இந்த கௌரவ நாமம் வழங்கப்பட்டது. 02 பக்கம்



## அதிவேக நெடுஞ்சாலைகளில் நடத்துநர்கள் இன்றி பஸ்கள்

### ஜூலை முதல் புதிய நடைமுறை

அனைத்து அதிவேக நெடுஞ்சாலைகளிலும் நடத்துநர்களின்றி, இலங்கை போக்குவரத்து சபையின் பஸ்களை எதிர்வரும் ஜூலை 01ஆம் திகதி முதல் இயக்குவதற்கு போக்குவரத்து அமைச்சு தீர்மானித்துள்ளது.

இதன்படி, அதிவேக நெடுஞ்சாலைகளில் பயணிக்கும் இலங்கை போக்குவரத்து சபை பஸ்களின் பயணிகளுக்கு, பயணத்தின் ஆரம்பத்தில் மட்டுமே பயணச்சீட்டு வழங்கப்படும். 02 பக்கம்



## 3 சேவைகளை அத்தியாவசியமாக்கி விசேட வர்த்தமானி வெளியானது

மின்சார விநியோகம், பெற்றோலியம் மற்றும் வைத்தியசாலை சேவைகளை அத்தியாவசிய சேவைகளாக பிரகடனப்படுத்தும் விசேட வர்த்தமானி அறிவித்தலை அரசாங்கம் வெளியிட்டுள்ளது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் உத்தரவுக்கமைய, ஜனாதிபதி செயலாளரினால் இந்த வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது.




அதன்படி, மின் விநியோகம், பெற்றோலியப் பொருட்கள் மற்றும் எரிபொருள் விநியோகம், வைத்தியசாலைகள்,... 02 பக்கம்

### கமெண்ட் கந்தர்...




## கோதுமை மாவை அத்தியாவசிய பொருளாக்கி வெளியானது வர்த்தமானி

கோதுமை மாவினை அத்தியாவசியப் பொருளாக அறிவித்த வர்த்தமானி அறிவித்தல், வர்த்தக மற்றும் உணவுப் பாதுகாப்பு அமைச்சர் நளின் பெர்னாண்டோவினால் வெளியிடப்பட்டுள்ளது.

சந்தையில் கோதுமை மாவின் விலை உயர்வைக் கட்டுப்படுத்தும் நோக்கில் நுகர்வோர் விவகார அதிகார சபை சட்டத்தின்படி, கோதுமை மா கடந்த வெள்ளிக்கிழமை நள்ளிரவு முதல் அத்தியாவசியப் பொருளாக வர்த்தமானி அறிவித்தல் மூலம் பிரகடனப்படுத்தியுள்ளது.

தற்போது கோதுமை மா இறக்குமதி செய்வதற்கு உரிமம் பெறுவதை கட்டாயமாக்க அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது.

இதேவேளை, அத்தியாவசியப் பொருள் பட்டியலில் இருந்து பெற்றோலிய வாயுவை அகற்றும் வர்த்தமானி அறிவித்தலை அமைச்சர் நளின் பெர்னாண்டோ வெளியிட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

## ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு தலைவர் இல்லை

### வவுனியா கூட்டத்தில் தீர்மானம்



02 பக்கம்

### உஷ்



இந்தியாவின் முன்னணி தொழிலதிபர் பிரகாஷ் நாயரது புதல்வியின் திருமணம் அடுத்தமாதம் நடைபெறவுள்ளது.

இதில் கலந்துகொள்ள வருமாறு கூறி அவர் தனது நெருங்கிய நண்பர்களான ரணில், மஹிந்த, தினேஷ், கோட்டா, பெசில் உட்பட்ட முக்கியஸ்தர்களுக்கு இங்கே வந்து திருமண அழைப்பிதழை நேரடியாகவே வழங்கியுள்ளாராம்.

அது மட்டுமல்ல, இவர்கள் சென்றுவர சொகுசு வகுப்பினை கொண்ட விமான பயணச் சீட்டுகளும் அவரால் வழங்கப்பட்டுள்ளனவாம்.

கொச்சின் ஷெரட்டன் ஹோட்டலை முழுமையாக 2 நாட்களுக்கு திருமணத்துக்கென பெற்றுள்ள இவர், இந்திய பிரதமர் மோடி மற்றும் மாநிலங்களின் முதல்வர்கள், தொழிலதிபர்களை திருமணத்துக்கு அழைத்துள்ளாராம்.

இதே காலப்பகுதியில்தான் புதுடில்லியில் ஜனாதிபதி ரணிலை சந்திக்கவுள்ளார் இந்தியப் பிரதமர் மோடி.




# விடுதலைப்புலிகள் அமைப்பை புதுப்பிக்க நடவடிக்கையாம்: இலங்கையை சேர்ந்த 10 பேருக்கு எதிராக குற்றப்பத்திரிகை

விடுதலைப்புலிகள் அமைப்பை புதுப்பிக்க போதைப்பொருள் மற்றும் ஆயுத வர்த்தகத்தில் ஈடுபட்டது தொடர்பான வழக்கில் இலங்கையைச் சேர்ந்த 10 பேர் மற்றும் இந்தியாவைச் சேர்ந்த 3 பேருக்கு எதிராக என்ஐஏ குற்றப்பத்திரிகை தாக்கல் செய்துள்ளது.

இந்தியாவிலும் இலங்கையிலும் தமிழீழ விடுதலைப்புலிகள் (எல்.ரி.ரி.ஈ) அமைப்பை புதுப்பிக்கும் சதிச் செயல் தொடர்பான வழக்கை என்ஐஏ விசாரித்து வருகிறது. இது தொடர்பான வழக்கை என்ஐஏ கடந்த 2022, ஜூலையில் பதிவு செய்து 13 பேரை கைதுசெய்தது. இந்நிலையில் இவர்களுக்கு எதிராக இந்திய தண்டனைச் சட்டம், சட்டவிரோத செயல்கள் தடுப்புச் சட்டம் மற்றும் போதைப் பொருள் தடுப்பு சட்டத்தின் கீழ் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்துள்ளது.

இந்த 13 பேரில் எம்.செல்வகுமார், விக்னேஸ்வர பெருமாள், ஐயப்பன் நந்து ஆகிய மூவரும் இந்தியர்கள். சி.குணசேகரன், புஷ்பராஜா, முஹம்மது ஆஸ்மின் உள்ளிட்ட 10 பேர் இலங்கையை சேர்ந்தவர்களாவர்.

என்ஐஏ தனது குற்றப்பத்திரிகையில் கூறியிருப்பதாவது,

இந்தியா மற்றும் இலங்கையில் விடுதலைப் புலிகள் அமைப்பை புதுப்பிக்கும் நோக்குடன் ஆயுதங்களை வாங்கி பதுக்கி வைப்பதற்காக சட்டவிரோத போதைப் பொருள் வர்த்தகத்தில் இவர்கள் ஈடுபட்டனர். பாகிஸ்தானை சேர்ந்த ஹாஜி சலீம் என்பவரிடம் இருந்து போதைப் பொருள் பெறப்பட்டது. இந்த இரகசிய வர்த்தகத்துக்கு பல்வேறு வெளிநாட்டு வாட்ஸ் அப் எண்களை குற்றவாளிகள் பயன்படுத்தி வந்தனர்.

திருச்சி சிறப்பு முகாமில் கைது செய்யப்பட்டவர்களிடம் நடத்திய விசாரணையில் குற்றச்செயல் மூலம் கிடைத்த பணத்தில் அவர்கள் ஆடம்பர வாழ்க்கை வாழ்ந்து வருவது தெரியவந்தது. பல்வேறு மொபைல் போன்கள் மற்றும் சிம் கார்டுகள் அவர்களிடம் இருந்து பறிமுதல் செய்யப்பட்டன. மேலும் பல்வேறு டிஜிட்டல் சாதனங்கள், போதைப் பொருள் பரிமாற்றம் தொடர்பான ஆவணங்கள் மற்றும் 9 தங்கக் கட்டிகள் விசாரணையின்போது பறிமுதல் செய்யப்பட்டன. போதைப்பொருள் விற்பனை மூலம் கிடைத்த பணமும் தங்கமும் ஹவாலா பரிமாற்றம் மூலம் சென்னைக்கும் இலங்கைக்கும் இடையே அனுப்பப்பட்டன. குற்றவாளிகள் கிரிப்டோ தளங்களை பயன்படுத்தி பல பரிவர்த்தனைகள் மேற்கொண்டதும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு என்ஐஏ தனது குற்றப்பத்திரிகையில் தெரிவித்துள்ளது.

இத்தகவலை என்ஐஏ வெளியிட்ட அறிக்கையில் தெரிவித்துள்ளது. குற்றவாளிகள் கிரிப்டோ தளங்களை பயன்படுத்தி பல பரிவர்த்தனைகள் மேற்கொண்டனர் என்று கூறப்படுகிறது.

# யாழில் சிறப்புற இடம்பெற்ற சரா புவனேஸ்வரனின் மணிவிழா







இலங்கை தமிழர் ஆசிரியர் சங்கத்தின் பொதுச்செயலாளர் சிரேஷ்ட விரிவுரையாளர் எனப் பல தளங்களில் பணி செய்த சரா. புவனேஸ்வரனின் மணிவிழா நேற்று(18) ஞாயிறு காலை 9 .30 மணிக்கு நல்லூர் சயன்ஸ் அக்கடமி மண்டபத்தில் இடம்பெற்றது

லயன் வை. தியாகராஜா தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் ஜனாதிபதியின் மேலதிக செயலாளர் எல். இளங்கோவன், வடக்கு மாகாண கல்விப் பணிப்பாளர் ஜோன் குயின்ரஸ்,யாழ். மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் ம. பிரதீபன், கோப்பாய் ஆசிரியர் கலாசாலை அதிபர் ச. லலீசன், வவுனியா பல்கலைக்கழக வேந்தர் பேராசிரியர் மோகனதாஸ் உள்ளிட்ட பலர் வாழ்த்துரைகளை வழங்கினர்.நிகழ்வில் ஆரம்பக் கல்வி மாணவர்களுக்கென சரா புவனேஸ்வரனால் எழுதப்பட்ட ஐந்து நூல்கள் வெளியிட்டு வைக்கப்பட்டன.

சரா புவனேஸ்வரன் மணிவிழா சபையினரால் பல்துறை வித்தகர் என்ற பட்டம் வழங்கி கௌரவிக்கப்பட்டார்.பல்வேறு ஆக்கங்களைத் தாங்கிய மணிவிழா மலரும் வெளியிட்டு வைக்கப்பட்டது. இதனை லயன் வை. தியாகராஜா , மேலதிக அரச அதிபர் பிரதீபன் , கலாசாலை அதிபர் லலீசன் ஆகியோர் இணைந்து வெளியிட்டு வைத்தனர் . விழா நாயகரின் பேரக்குழந்தை நூலின் முதல் பிரதியை பெற்றுக் கொண்டார்.

### ஊழ்ஹிய்யாவுக்கான...

ஊழ்ஹிய்யா விவகாரம் தொடர்பாக எடுத்துக்கூறினர். அதாவது ஊழ்ஹிய்யாவுக்கான கால்நடைகளை போக்குவரத்து செய்வதற்கு மிருகவதை சட்டத்தின் கீழ் தற்போது விதிக்கப்பட்டுள்ள தடையை நீக்குமாறு வேண்டுகோள் விடுத்தனர்.

இதற்கமைவாக புனித ஹஜ் பெருநாளை முன்னிட்டு ஊழ்ஹிய்யாவுக்கான கால்நடைகளை எதிர்வரும் 29 ஆம் திகதி வரை நாட்டின் பல்வேறு பகுதிகளுக்கும் கொண்டு செல்வதற்கான அனுமதியை பொலிஸ் மா அதிபர் வழங்கியுள்ளார்.

இதற்கிணங்க ஊழ்ஹிய்யாவுக்கான கால்நடைகளை சகல பிரதேசங்களுக்கும் எடுத்துச் செல்வதற்கான அனுமதி தொடர்பாக அனைத்து பொலிஸ் நிலையங்களுக்கும் பொலிஸ் மா அதிபர் அறிவுறுத்தியுள்ளதாக பாராளுமன்ற உறுப்பினர் ஏ.எச்.எம் பௌஸி தெரிவித்தார்.

### ஊழல் எதிர்ப்புச் சட்டமூலத்தை...

ஊழல் எதிர்ப்புச் சட்டமூலத்தை எதிர்வரும் 21 ஆம் திகதி பாராளுமன்றத்தில் விவாதித்து நிறைவேற்றுவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

### ஜெனீவா கூட்டத்தொடர்...

வெளியிடவுள்ளார் என அறியமுடிகின்றது.

இலங்கை குறித்து வாய்மூல அறிக்கையொன்றை வெளியிடவுள்ள ஐக்கிய நாடுகள் மனித உரிமை ஆணையாளர் இலங்கையில் பொறுப்புக்கூறல் விடயத்தில் முன்னேற்றம் ஏற்படாதது குறித்து தனது அதிருப்தியை வெளியிடுவார் என இராஜதந்திர வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவையில் இலங்கை குறித்த தீர்மானத்துக்கு அனுசரணை வழங்கிய நாடுகள் உத்தியோகபூர்வ அறிக்கையொன்றை வெளியிடவுள்ளன என தெரிவித்துள்ள இராஜதந்திர வட்டாரங்கள், இந்த அறிக்கையில் இலங்கையில் ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டவர்கள், தன்னிச்சையாக கைதுசெய்யப்பட்டமை, யுத்த குற்றம் மற்றும் பொருளாதார குற்றங்களில் ஈடுபட்டவர்களை பொறுப்புக்கூறலில் ஈடுபடுத்தும் விடயங்களில் முன்னேற்றம் இன்மை குறித்தும் குறிப்பிடப்படும் என தெரிவித்துள்ளன.

### 3 சேவைகளை...

மருந்தகங்கள் மற்றும் பிற ஒத்த நிறுவனங்கள், நோயாளிகளின் பராமரிப்பு மற்றும் வரவேற்பு, பராமரிப்பு, உணவு மற்றும் சிகிச்சை தொடர்பான அனைத்து சேவைப் பணிகள் அல்லது உழைப்பு தொடர்பான அனைத்து சேவைகளும் அத்தியாவசிய சேவைகளாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ளன.

மக்களின் இயல்பு வாழ்க்கையைப் பேணுவதற்கும் இடையூறு ஏற்படுவதைத் தடுப்பதற்கும் இந்த சேவைகள் அத்தியாவசிய சேவைகளாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ளதாக அந்த அறிவிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### அதிவேக நெடுஞ்சாலைகளில்...

அண்மையில் தெற்கு அதிவேக நெடுஞ்சாலையில், இலங்கை போக்குவரத்து சபை பஸ்சில் 34 பயணிகளுக்கு போலி பயணச்சீட்டுகள் வழங்கப்பட்ட மோசடி அம்பலமானதையடுத்தே பயணத்தின் ஆரம்பத்திலேயே பயணச்சீட்டு வழங்க தற்போது தீர்மானிக்கப்பட்டுள்ளது.

மேற்படி சம்பவம் தொடர்பில் குற்றப் புலனாய்வுப் பிரிவினர் ஏற்கனவே விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். இதேவேளை, அடுத்த மூன்று மாதங்களில் அனைத்து உள்ளூர் பஸ்கள் மற்றும் புகையிரதங்களுக்கான இ-டிக்கெட்டுகளை (இலத்திரனியல் பயணச்சீட்டு) அறிமுகப்படுத்த போக்குவரத்து அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.

### ஜலனி பிரேமதாசவுக்கு...

சங்கைக்குரிய மெத்முனிகம ஸ்ரீசுமண மகாநாயக்க தேரர்,சங்கைக்குரிய கஹத்தேவெல ஸ்ரீ நிவாச மகாநாயக்க தேரர்,நிந்தானே சந்தவிமல மகாநாயக்க தேரர் உள்ளிட்ட மகா சங்கத்தினர் இந்நிகழ்வில் பிரசன்னமாகி இருந்ததோடு மூன்று பீடங்களின் சங்கைக்குரிய மகா சங்கத்தினரின் ஆசிர்வாதங்களுடன் "ஸ்ரீ சுகத சாசன பிரசாதனி" கௌரவ நாமத்தின் சன்னஸ் பத்திரம் திருமதி ஜலனி பிரேமதாசவுக்கு வழங்கி வைக்கப்படது.

### நயினாதீவு நாகபூசணி அம்மன்...

இந்நிலையில் ஆலய வீதியில் துப்புரவுப்பணியில் ஈடுபட்ட நிலையில் மேற்கு வீதி கற்குவியலுக்குள் இருந்து நாக பாம்புகள் வெளிவந்துள்ளன.

மூன்று நாகங்கள் ஆலய வீதியில் ஊர்ந்து சென்றன. இது கண்டிப்பாக அம்மனின் அனுக்கிரகம் என சைவ பக்தர்கள் கூறுகின்றனர்.

# ஊடகவியலாளர்களின் நலன் கருதி அட்டனில் "ஊடக மையம்" அமைக்க நடவடிக்கை

## ஊடகவியலாளர்கள் சந்திப்பில் அமைச்சர் ஜீவன் தொண்டமான்





நுவரெலியா மாவட்ட ஊடகவியலாளர்களின் நலன் கருதி, அவர்களின் வேண்டுகோளுக்கிணங்க அட்டன் பிரதேசத்தில் "ஊடக மையம்" ஒன்று அமைத்துக் கொடுக்கப்படும் என இ.தொ.கா. பொதுச் செயலாளரும் நீர்வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சருமான ஜீவன் தொண்டமான் தெரிவித்தார்.

நுவரெலியா மாவட்ட தமிழ், சிங்கள, முஸ்லிம் ஊடகவியலாளர்களுடனான சந்திப்பு கொட்டகலை ஹில்கூல் விருந்தகத்தில் சனிக்கிழமை (17) இடம்பெற்றது. நுவரெலியா ஊடகவியலாளர் சங்கத்தின் சார்பில் அதன் தலைவர் டக்ளஸ் நாணயக்கார தலைமையில் அமைச்சருக்கு நினைவுப் பரிசு ஒன்றும் கையளிக்கப்பட்டது. சுமார் 40 பேர் கலந்து கொண்ட இச்சந்திப்பில் அமைச்சர் ஜீவன் தொண்டமான் தொடர்ந்து கருத்துத் தெரிவிக்கையில்,

நீண்ட காலத்துக்குப் பிறகு நுவரெலியா மாவட்டத்தில் உள்ள சகல ஊடகவியலாளர்களையும் ஒரே நேரத்தில் சந்திப்பது மகிழ்ச்சியாக இருக்கின்றது. இது தேர்தலுக்காகவோ அல்லது வேறு தேவைகளுக்காகவோ ஏற்படுத்தப்பட்டுள்ள சந்திப்பு அல்ல. நாம் அரசியல் ரீதியில் மேற்கொள்ளும் வேலைத் திட்டங்கள் சரியான முறையில் மக்கள் மத்தியில் சென்றடைய வேண்டும் என்பதற்காகவே ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்திய அரசாங்கத்தின் அழைப்பை ஏற்று ஜனாதிபதி இந்தியா செல்லும் போது நானும் அவருடன் செல்லவுள்ளேன். அப்போது மலையகத்தில் அமைக்கப்படவுள்ள இந்திய வீடமைப்புத் திட்டம் தொடர்பாகவும் மலையகம் 200 சம்பந்தமாகவும் இந்தியப் பிரதமருடன் கலந்துரையாடப்படும். விரைவில் இந்திய வீடமைப்புத் திட்டம் ஆரம்பிக்கப்படவுள்ளது. அதற்கு முன்னதாக ஏற்கனவே பூர்த்தி செய்யப்படாமல் உள்ள குடியிருப்புகளை முழுமையாக்கி மக்களிடம் கையளிக்கப்படும்.

மலையகத்துக்கான நகர பல்கலைக்கழகம் ஒன்றை ஆரம்பிக்கத் தேவையான கட்டிட வசதிகள் உள்ளன. அதற்கான வேலைத் திட்டமும் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது. மேலும், மலையகத்தின் அபிவிருத்தி தொடர்பாக மூன்று மாதங்களுக்கு ஒருமுறை சகல தொழிற்சங்கங்களையும் அழைத்துப் பேசி கருத்துகளைப் பெற்றுக் கொள்ளவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அத்தோடு, ஊடகவியலாளர்கள் சந்திப்பின் போது அவர்களுக்கு தலா 10 – 15 பேர்ச் காணி தேவை என்று கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. இது சம்பந்தமாக சம்பந்தப்பட்ட அமைச்சருடன் தொடர்பு கொண்டு தேவையான நடவடிக்கை எடுக்கத் தயாராகவுள்ளேன். அட்டன் பிரதேசத்தில் அவர்களுக்கான "ஊடக மையம்" ஒன்றை அமைத்துக் கொடுக்க, பொருத்தமான இடத்தைத் தெரிவு செய்து கொடுத்தால், தேவையான உபகரண வசதிகளுடன் அமைத்துக் கொடுக்கப்படும்.

இலங்கை - இந்திய ஊடகவியலாளர்களின் பரிமாற்றத் திட்டம் ஒன்றை ஏற்படுத்தி ஊடக வளர்ச்சிக்கும் நவீன தொழில் நுட்ப வசதிக்கும் நடவடிக்கை எடுக்குமாறு விடுக்கப்பட்டுள்ள வேண்டுகோள் முழுமையாக பரிசீலிக்கப்பட்டு நடைமுறைப்படுத்தவும் ஏற்பாடு செய்யப்படும். எனவே, ஊடகவியலாளர்கள் தமது சமூகத்தின் நலன் கருதி ஒற்றுமையாகவும் நேர்மையாகவும் ஊடக தர்மத்தை உணர்ந்து செயற்பட வேண்டும் என்றார்.

# தலைப்பிறையை தீர்மானிக்கும் மாநாடு இன்று

ஹிஜ்ரி 1444 துல்ஹஜ் மாதத்துக்கான தலைப்பிறையை தீர்மானிக்கும் மாநாடு இன்று (19) மாலை மஹ்ரிப் தொழுகையைத் தொடர்ந்து கொழும்பு பெரிய பள்ளிவாசலில் இடம்பெறவுள்ளது.

இம்மாநாட்டில் அகில இலங்கை ஜம்இய்யதுல் உலமா சபை , கொழும்பு பெரிய பள்ளிவாசல் நிர்வாகிகள், முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்கள உறுப்பினர்கள், கொழும்பு மேமன் சங்க உறுப்பினர்கள், வளிமண்டலவியல் திணைக்கள அதிகாரிகள் மற்றும் உலமாக்கள் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர்.

நாட்டின் எப்பிரதேசத்திலாவது துல்ஹஜ் மாதத்துக்கான தலைப்பிறை தென்பட்டால் தகுந்த ஆதாரங்களுடன் 0112 432110, 0777 316415 என்ற இலக்கங்களுடன் தொடர்புகொண்டு அறிவிக்குமாறு கொழும்பு பெரிய பள்ளிவாசல் முஸ்லிம் மக்களை கேட்டுக்கொள்கின்றது.

# இலங்கையின் மனித உரிமை மீறல்கள் தொடர்பில் ஐ.நா. மீண்டும் வலியுறுத்து

காணாமல் ஆக்கப்படல்கள் மற்றும் தன்னிச்சையான தடுத்து வைப்புக்களை முடிவுக்குக் கொண்டுவர வேண்டும் என்றும் மனித உரிமை மீறல்கள் தொடர்பில் பொறுப்புக் கூறலை உறுதிப்படுத்துமாறும் ஐ.நா. பொதுச்சபை யின் மீளாய்வுக்குழு இலங்கைக்குப் பரிந்துரைத்துள்ளது.

மேலும் காணாமல் போனோரின் குடும்பங்களுக்கு உரிய பதிலைக் கூறுவதுடன் இழப்பீட்டை வழங்கல், பயங்கரவாதத்தடைச் சட்டத்தை முற்றாக நீக்குவதுடன் அதற்குப் பதிலாகக் கொண்டுவரப்படும் புதிய சட்டம் சர்வதேச நியமங்களுக்கு அமைவாக இருப்பதை உறுதிசெய்ய வேண்டும் என்றும் வலியுறுத்தியுள்ளது.

மேலும், அனைத்து விதமான மனித உரிமை மீறல்கள் சம்பவங்கள் குறித்து இராணுவத்தினர் உள்ளிட்ட சகல தரப்பினரிடமும் சுயாதீனமானதும் பக்கச்சார்பற்றதுமான விசாரணைகளை மேற்கொள்ளுமாறும் வலியுறுத்தியுள்ளது.

அதுமாத்திரமன்றி உள்ளகப் பொறிமுறை நிறுவுதல், வெறுப்புணர்வுப் பேச்சு மற்றும் அடக்குமுறைகளை தடுப்பதற்கு ஏற்ற செயன்முறையொன்றை நிறுவுவதன் மூலம் தேசிய நல்லிணக்கம் தொடர்பான கொள்கையை மேலும் வலுப்படுத்துமாறும் அக்குழு தெரிவித்துள்ளது. இலங்கையின் மனித உரிமைகள் நிலைவரம் குறித்த மீளாய்வைக் கடந்த பெப்ரவரி மாதம் முதலாம் திகதி மேற்கொண்டிருந்த நிலையில், இலங்கை மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் பற்றிய பரிந்துரைகளை உள்ளடக்கிய 24 பக்க அறிக்கையிலேயே இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### பரிகார பூஜை செய்த...

கல்கிரியாகம பகுதியைச் சேர்ந்த 48 வயதுடைய பெண் ஒருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

லக்கல, தாஸ்கிரிய பிரதேசத்தில் உள்ள வீடொன்றில், சுகவீனமுற்றிருந்த இரண்டு பெண்கள் மற்றும் ஆண் ஒருவரைக் குணப்படுத்துவதற்காக இந்த பரிகார பூஜை நடத்தப்பட்டுள்ளது. பூஜை செய்தவர் மூவருக்கும் பூசகர் தலா 21 இளநீர்களை அருந்தக் கொடுத்துள்ளார்.இதன்போது, குறித்த பெண் திடீரென உடல்நிலை பாதிக்கப்பட்டுள்ள நிலையில் அவருக்கு மஞ்சள் நீரை பூசகர் அருந்தக் கொடுத்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

அதன் பின்னர் உடல்நிலை மேலும் மோசமடைந்ததையடுத்து தாஸ்கிரிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பெண் மேலதிக சிகிச்சைக்காக தம்புள்ளை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் நேற்று உயிரிழந்துள்ளார்.பூஜை செய்த 25 வயதுடைய நபரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை லக்கல பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

### பணமில்லாதோருக்கு உணவு...

ஒருசமயம் தனது கடைக்கு அருகில் இளைஞர் ஒருவர் நீண்ட நேரம் காத்திருந்ததை ஏன் என்று கேட்டபோது போதிய பணம் இன்மையால் உணவு வாங்க வசதியில்லை என்றும் சரியான பசியில் இருப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இதனால் மனவேதனை அடைந்த நிலையில் லோகவர்தினி அவருக்கு உணவு வழங்கியுள்ளார். இதனையடுத்து பசி என்று வருபவருக்கு தனது கடையில் உணவு உண்டு என பதாகை ஒன்றை அவர் எழுதி வைத்துள்ளார். சிங்கள மொழியிலும் இவர் அவ்வாறு பதாகை வைத்துள்ளமை சிறப்பம்சமாகும்.

தனது கடைக்கு வரும் மாற்றுத்திறனாளிகள், யாசகர்களுக்கு இலவசமாக உணவு வழங்கி வருகிறார்.

இலவசம் என்று பொறுப்பின்றி செயற்படாமல் இயற்கையான முறையில் தயாரித்த உணவுகளை இவர் வழங்கி வருகிறார்.இவரின் செயற்பாட்டுக்கு பலரும் வாழ்த்துத் தெரிவித்துள்ளனர்.

### ஜனநாயக தமிழ்த் தேசியக்...

(வவுனியா நிருபர்)

ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு தலைவர் இல்லை எனவும் இணைத் தலைவர்களாகவே கூட்டணிக் கட்சித் தலைவர்கள் செயற்படுவார்கள் எனவும் நிறைவேற்றுக் குழுக் கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நிர்வாகத் தெரிவு மற்றும் யாப்பு திருத்தம் தொடர்பில் இறுதித் தீர்மானங்களை நிறைவேற்றுவதற்காக குறித்த கட்சியின் நிறைவேற்றுக் குழு கூட்டம் வவுனியா, இரண்டாம் குறுக்குத்தெருவில் உள்ள விருந்தினர் விடுதியில் நேற்று (18) இடம்பெற்றது.

குறித்த கலந்துரையாடலில் ரெலோ அமைப்பின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான செல்வம் அடைக்கலநாதன், புளொட் அமைப்பின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான த.சித்தார்த்தன், ஈபிஆர்எல்எப் கட்சியின் தலைவரும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான சுரேஸ் பிரேமச்சந்திரன், தமிழ்த் தேசிய கட்சியின் தலைவர் சிறிகாந்தா, ஜனநாயக போராளிகள் கட்சியின் தலைவர் வேந்தன் உட்பட நிறைவேற்றுக் குழு உறுப்பினர்கள் 15 பேர் கலந்து கொண்டனர்.

இதன்போது, ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தலைவர் ஒருவரை தெரிவு செய்ய வேண்டும் என அங்கு வருகை தந்த ரெலோ, புளொட், ஈபிஆர்எல்எப் ஆகிய கட்சிகள் யோசனையை முன்வைத்த போது அதனை கடுமையாக எதிர்த்த தமிழ்த் தேசியக் கட்சியின் தலைவர் சட்டத்தரணி சிறிகாந்தா, தலைவர் வேண்டாம் எனவும் இணைத்தலைவர்களாக தொழிற்பட வேண்டும் என வாதிட்டு தனது கருத்தை முன்வைத்தார். இது தொடர்பில் கலந்து கொண்ட கட்சிப் பிரதிநிதிகளுக்கிடையில் பல்வேறு கருத்துப் பரிமாற்றங்கள் இடம் பெற்று இறுதியில் ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு தலைவர் இல்லை எனவும் கூட்டணிக் கட்சிகளின் தலைவர்கள் கட்சியின் இணைத்தலைவர்களாக செயற்படுவர் எனவும் நிறைவேற்றுக் குழுவில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டுள்ளது.

இதன்படி பாராளுமன்ற உறுப்பினர்களான செல்வம் அடைக்கலநாதன், த.சித்தார்த்தன், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்களான சுரேஸ் பிரேமச்சந்திரன், சிறிகாந்தா மற்றும் வேந்தன் ஆகியோர் இணைத் தலைவர்களாக செயற்படுவர் என முடிவு எட்டப்பட்டுள்ளது.

# பௌத்தர்களின் சமூக சமய பணிகளை சீர்குலைக்க சதி

## எதிர்க்கட்சித் தலைவர் சந்தேகம்





பௌத்தர்களை இலக்கு வைத்து அவர்கள் மீது அபத்தமான குற்றச்சாட்டுகளை சுமத்தி அவர்களால் முன்னெடுக்கப்பட்டு வரும் உன்னத சமூக மற்றும் சமயப் பணிகளை சீர்குலைக்கும் ஏதோவொரு சதி நடந்து வருவதாக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச சந்தேகம் தெரிவித்துள்ளார்.

மூன்று பீடங்களினதும் மகா சங்கத்தினரின் ஆசீர்வாதத்துடன் ஜலனி பிரேமதாசவுக்கு 'ஸ்ரீசுகத சாசன பிரசாதனி' கௌரவ பட்டம் வழங்கலும் நயன வாசல திலகவுக்கு தியத்தலாவ கஹகொல்ல ஸ்ரீ சுதர்சனாராம புராண விகாரையின் பஸ்நாயக்க பதவி வழங்கலும் நேற்றுமுன்தினம் (17) இடம்பெற்றன. அந்நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

இந்நாட்டில் புத்தசாசன அமைச்சை நிறுவி குறுகிய காலத்தில் பௌத்த மதத்துக்காக அளப்பரிய பணிகளை ஆற்றியவர் அமரர் ரணசிங்க பிரேமதாச ஆவார். அன்று அவர் விகாரைகளுக்குச் சென்று மலர் விளக்கு ஏற்றி வழிபடுவது கூட சிலருக்கு கேலிக்குரிய விடயமாகவிருந்தது.

பௌத்தர்களை இலக்கு வைத்து அவர்கள் மீது அபத்தமான குற்றச்சாட்டுகளை சுமத்தி அவர்களால் முன்னெடுக்கப்பட்டுவரும் உன்னத சமூக மற்றும் சமயப் பணிகளை சீர்குலைப்பதே சதிகாரர்களின் நோக்கமாகும். பௌத்த எதிர்ப்பு சக்திகள் தலைதூக்கும் போது அவர்களை கட்டுப்படுத்த முடியாவிட்டால் அது பாரதூரமான விளைவுகளை ஏற்படுத்தும்.

இந்நிலையில் பௌத்த மதத்தைப் பாதுகாப்பதற்கு உறுதிமொழி எடுப்பது அனைவரினதும் பொறுப்பாகும்.

குடும்ப அரசியலுக்கு தான் முற்றிலும் எதிரானவன். ஆனால் அவர்களின் சமூக சேவை உரிமையில் தலையிட தாம் ஒருபோதும் தயாராக இல்லை. ஜே.ஆர்.ஜயவர்தனவின் காலத்தில் நடைமுறைப்படுத்தப்பட்ட சேவா திட்டத்தின் மூலம் அரசியல்வாதிகளின் பாரியார்கள் பல்வேறு சமூக சேவைகளை ஆற்றியுள்ளனர்.

ஜனாதிபதி ஜே.ஆர்.ஜயவர்தனவின் பாரியார் கூட இந்த வேலைத்திட்டத்தில் முக்கிய பங்கு வகித்தார். சமூக சேவையென்பது தேர்தலில் போட்டியிடுவதோ அல்லது பாராளுமன்ற உறுப்பினர் பதவியை பெறுவதோ அல்ல. சமூக சேவைக்கான ஒவ்வொருவரினது உரிமையையும் யாராலும் தடுக்க முடியாது என்றும் தெரிவித்தார்.

# தேசிய பௌதீக திட்டமிடல் கொள்கை வரைபு - 2048 ஜனாதிபதியிடம் கையளிப்பு









'தேசிய பௌதீக திட்டமிடல் கொள்கை வரைபு - 2048' ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் உத்தியோகபூர்வமாக கையளிக்கும் நிகழ்வு கடந்த 16ஆம் திகதி ஜனாதிபதி செயலகத்தில் இடம்பெற்றது.

நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் பிரசன்ன ரணதுங்கவினால் மேற்படி வரைவு ஜனாதிபதியிடம் கையளிக்கப்பட்டது.

தேசிய பௌதீக திட்டமிடல் திணைக்களத்தினால் அனைத்து அமைச்சுகள், திணைக்களங்கள் மற்றும் அதன் கீழான ஏனைய நிறுவனங்களினால் முன்னெடுக்கப்படும் பலதரப்பட்ட செயற்றிட்டங்கள் மற்றும் வேலைத்திட்டங்களை உள்ளடக்கியதாக 'தேசிய பௌதீக திட்டமிடல் கொள்கை வரைவு - 2048' தயாரிக்கப்பட்டுள்ளது.

அமைச்சரவை செயலாளர்களின் உப குழுவின் பரிந்துரையைத் தொடர்ந்து ஜனாதிபதியின் பங்கேற்புடன் கூடியதான பௌதீக திட்டமிடல் சபையின் National Physical Planning Council (NPPC) அனுமதிக்காகவே இவ்வாறு கையளிக்கப்பட்டுள்ளது.

தேசிய பௌதீக திட்டமிடல் சபையில் அங்கத்துவம் வகிக்கும் அமைச்சுகளின் செயலாளர்கள், மாகாண ஆளுநர்கள், ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க, பொருளாதார அலுவல்கள் தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகர் ஆர்.எச்.எஸ்.சமரதுங்க ஆகியோருடன் தேசிய பௌதீக திட்டமிடல் சபையை பிரதிநிதித்துவப்படுத்தும் அமைச்சுகளின் செயலாளர்கள் மற்றும் ஏனைய நிறுவனங்களின் பிரதானிகள் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர்.

# ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நிர்வாகிகள்







(வவுனியா நிருபர்)

ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் புதிய நிர்வாகிகள் தெரிவு நேற்று இடம்பெற்றது.

ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நிறைவேற்றுக் குழுக் கூட்டம் வவுனியா விருந்தினர் விடுதியில் நேற்று (18) காலை முதல் பிற்பகல் வரை இடம்பெற்றது.

இதன்போது, கட்சிக்கான நிர்வாகக் குழு தெரிவு இடம்பெற்றது. ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் செயலாளராக தமிழீழ மக்கள் விடுதலை கழகத்தைச் சேர்ந்த (புளொட்) ஆர்.ராகவன், ஊடகப் பேச்சாளராக ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் தலைவர் சுரேஸ் பிரேமச்சந்திரன், தேசிய அமைப்பாளராக தமிழீழ விடுதலை இயக்கத்தின் மட்டக்களப்பு பாராளுமன்ற உறுப்பினர் கருணாகரம், பொருளாளராக ஜனநாயக போராளிகள் கட்சியின் ஊடக பேச்சாளர் க.துளசி ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர்.

இணைத்தலைவர்களாக செல்வம் அடைக்கலநாதன், த.சித்தார்த்தன், க. சுரேஸ் பிரேமச்சந்திரன், என். சிறிகாந்தா, வேந்தன் ஆகியோர் செயற்படுவர் என தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இக்கூட்டத்தில் புளொட், ரெலோ, ஈ.பி.ஆர்.எல்.எப்., தமிழ்த் தேசியக் கட்சி, ஜனநாயக போராளிகள் கட்சி ஆகியவற்றை உள்ளடக்கிய ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நிறைவேற்றுக் குழு உறுப்பினர்கள் 15 பேர் கலந்து கொண்டனர்.

# மக்களுக்கு பாதிப்பில்லாதவாறு விமான நிலைய விஸ்தரிப்பை மேற்கொள்ள வேண்டும்

## யாழ்ப்பாணம் சர்வதேச விமான நிலைய விஸ்தரிப்பு தொடர்பில் டக்ளஸ் வலியுறுத்தல்





மக்களுக்கு பாதிப்பில்லாதவாறு விமான நிலைய விஸ்தரிப்பை மேற்கொள்ள வேண்டுமென அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா வலியுறுத்தியுள்ளார்.

பலாலியில் அமைந்துள்ள யாழ்ப்பாணம் சர்வதேச விமான நிலையத்தின் விஸ்தரிப்பு தொடர்பில் கப்பல்துறை மற்றும் விமான சேவைகள் அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா தலைமையில் கடந்த வெள்ளிக்கிழமை ஆராயப்பட்டது. அதன்போதே அமைச்சர் மேற்கண்டவாறு வலியுறுத்தினார். இக்கூட்டத்தில் கடற்றொழில் நீரியல் வளத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, கிராமிய பொருளாதார இராஜாங்க அமைச்சர் காதர் மஸ்தான், பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன், யாழ்ப்பாண மாவட்ட அரசாங்க அதிபர், யாழ்ப்பாணத்துக்கான இந்திய துணைத் தூதுவர், விமான நிலைய உயர் அதிகாரிகள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

விமான நிலையத்தை வடக்கு பக்கமாக விஸ்தரிப்பதுடன் விமான சேவையை அதிகரிப்பது தொடர்பிலும் இதன்போது விரிவாக கலந்துரையாடப்பட்டது.

பாரியளவிலான விமானங்கள் வந்து இறங்க வேண்டும், அதிகளவான ஆசனங்களை கொண்ட விமானங்களை சேவையில் ஈடுபடுத்துவதன் மூலம் அந்நிய செலாவணியை பெற்றுக் கொள்ளல், யாழ்ப்பாண மக்கள் இலகுவான முறையில் பிரயாணத்தை மேற்கொள்ள ஆவன செய்தல் போன்ற யோசனைகளும் இதன்போது முன்வைக்கப்பட்டன.

இறங்குதளம் விஸ்தரிக்கப்படும்போது மக்களுடைய காணிகளுக்கு பாதிப்பு ஏற்படாதவாறு எவ்வாறு முன்னெடுப்பது என்பது தொடர்பில் இதன்போது ஆராயப்பட்டது.

கூடுதலாக விமான நிலையத்தின் வடக்கு பக்கம் அதாவது கடல் பக்கம், இயன்றளவு ஓடுதளத்தை விஸ்தரித்து, தெற்கு பக்கத்தில் மிக சொற்ப அளவிலான காணிகளை எடுத்து இந்த விஸ்தரிப்பு நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டும் என பாராளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் இதன்போது ஆலோசனைகளை முன்வைத்தார். இதன்போது கருத்துத்தெரிவித்த அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, மக்களுக்கு பாதிப்பில்லாதவாறு விமான நிலைய விஸ்தரிப்பை மேற்கொள்ள வேண்டும் என வலியுறுத்தினார்.

# முறைப்பாடு கிடைத்து குறுகிய நேரத்தில் திருட்டுப் பொருட்கள் மீட்பு

## இருவர் சந்தேகத்தின்பேரில் கைது: சாவகச்சேரி பொலிஸார் அதிரடி



(சாவகச்சேரி நிருபர்)

சாவகச்சேரி பொலிஸாரின் அதிரடி நடவடிக்கை மூலமாக முறைப்பாடு கிடைத்து சில மணி நேரத்தில் 05 இலட்சம் ரூபா பெறுமதியான திருட்டுப் பொருட்கள் மீட்கப்பட்டதுடன் சந்தேக நபர்கள் இருவரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இது தொடர்பாக மேலும் தெரியவருவதாவது, நுணாவில் மேற்கு சாவகச்சேரி பகுதியில் அமைந்துள்ள வெளிநாட்டில் வசிப்பவரின் வீடொன்றில் இருந்த பல இலட்சம் ரூபா பெறுமதியான இலத்திரனியல் பொருட்கள் வீடு உடைத்து திருடப்பட்டிருப்பதாக கடந்த வியாழக்கிழமை வீட்டு பராமரிப்பாளரால் சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டது.

இந்நிலையில் விரைந்து செயற்பட்ட சாவகச்சேரி பொலிஸார் சில மணி நேரங்களில் தொலைபேசி உரையாடல்கள் சிலவற்றை அடிப்படையாகக் கொண்டு நாவற்குழிப் பகுதியில் மறைத்து வைக்கப்பட்டிருந்த நிலையில் மேற்படி பொருட்களை மீட்டதுடன் சந்தேகத்தின்பேரில் இருவரையும் கைது செய்துள்ளனர்.

இதன்போது திருடப்பட்ட பொருட்களான இரண்டு குளிர்சாதனப் பெட்டிகள், குளிரூட்டி, அவுண், தண்ணீர் சுத்திகரிப்பு இயந்திரம், மின் விசிறி மற்றும் மெத்தைகள் ஆகியன மீட்கப்பட்டுள்ளன.

யாழ். மாவட்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர், பிராந்திய பொலிஸ் அத்தியட்சகர் மற்றும் உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் ஆகியோரின் அறிவுரையின் கீழ், சாவகச்சேரி பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரியின் பொலிஸ் குழுவினர் மேற்படி கைது நடவடிக்கையை முன்னெடுத்துள்ளனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்துள்ளனர்.

# பேரினவாதத்தின் கோரமுகம் தமிழர்கள் மீது மீள ஆரம்பம்

## முன்னாள் எம்.பி.சிவசக்தி ஆனந்தன்

(வவுனியா நிருபர்)

தனி நாட்டுக்கான ஆயுதப் போராட்டம் 2009இல் முடிவுக்குக் கொண்டு வரப்பட்ட நிலையில், சிங்கள பௌத்த பேரினவாதம் மீண்டும் தனது கோரமுகத்தை தமிழர்கள் மீது காட்டிவருகிறது என ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் செயலாளரும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான சிவசக்தி ஆனந்தன் தெரிவித்துள்ளார்.

ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் செயலாளர் நாயகம் க. பத்மநாபாவின் 33ஆவது நினைவு தினம் இன்று திங்கட்கிழமை (19) அனுஷ்டிக்கப்படவுள்ளது. இந்நிலையில் அவர் வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. அவ் அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, தனி நாட்டுக்கான ஆயுதப் போராட்டம் 2009இல் முடிவுக்குக் கொண்டு வரப்பட்ட நிலையில், சிங்கள பௌத்த பேரினவாதம் மீண்டும் தனது கோரமுகத்தை தமிழர்கள் மீது காட்டிவருகிறது. 2009ஆம் ஆண்டுவரை வடக்கு-கிழக்கு தமிழர்களின் தாயகம் என்பதை ஏற்றுக்கொண்டு தமிழர்களுக்கெதிரான ஒவ்வொரு வன்முறையிலும் அவர்களை அங்கு அனுப்பிவிட்டு, இப்பொழுது எமது தாயகப் பிரதேசத்திலிருந்தும் எம்மை விரட்டும் அல்லது சிங்கள பௌத்த பேரினவாதத்துடன் கலக்கும் முயற்சிகளை மேலாதிக்க சக்திகள் மேற்கொள்கின்றன.

நாம் இப்பொழுது சர்வதேச சமூகத்தின் அனுதாபத்தைப் பெற்றுக் கொள்பவர்களாக உள்ளோம். இந்நிலையில் எமது இருப்பைத் தக்க வைக்க வேண்டுமாக இருந்தால், நாம் எமது குறுகிய கட்சிசார் அரசியல் நலன்களை முன்னிறுத்தாமல், எமது வருங்கால சந்ததி அச்சமின்றி, தமது தாயகப் பிரதேசத்தில் சகல உரிமைகளுடன் வாழ்வதற்கான சூழலை ஏற்படுத்திக்கொடுக்க வேண்டியது எம் அனைவரதும் தலையாய கடமை. பல்வேறு காரணங்களுக்காக நாம் தனித்தனி அரசியல் கட்சிகளாக மக்கள் சேவை ஆற்றலாம். ஆனால் எமது ஒட்டுமொத்த நோக்கம் அரசியல் கட்சிகளைச் சார்ந்த நாமும் பாதிக்கப்பட்டவர்கள்தான் என்பதை உணர்ந்து, எமது இனத்தின் சமத்துவ சகவாழ்வுக்காக உழைப்பதாகவே இருக்க வேண்டும்.

எமது செயலாளர் நாயகம் தோழர் க. பத்மநாபா சொன்னதைப் போன்று நாம் மக்களுக்காகவே மண்ணை நேசிப்பவர்களாக இருக்க வேண்டும். அதனடிப்படையில் அவரின் மற்றொரு கூற்றின்படி ஐக்கியம் என்னும் தளத்தில் நின்று இறுதி வெற்றிவரை உறுதியுடன் போராடுவோம் என்ற முழக்கத்தை முன்வைத்து நாம் அனைவரும் ஐக்கியமாக எமது இலட்சியமான தமிழ் மக்களின் உரிமைகளை வென்றெடுப்பதற்கு சர்வதேச சமூகத்தின் ஒத்துழைப்பைப் பெற்று எம்மினத்தை அழிவிலிருந்து காப்போம் என்பதை இன்றைய 33ஆவது தியாகிகள் தினத்தில் ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி சபதமேற்கிறது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## பெயர் மாற்றம்

மீராகேணி, சதாம் ஹுஸைன் கிராமம், இல. 122B என்ற முகவரியில் வசிக்கும் 199578604945 எனும் தேசிய அடையாள அட்டை இலக்கத்தையுடைய ரெட்ணம் மரியம் ஆகிய நானும் எனது இரண்டு பிள்ளைகளும் புனித இஸ்லாம் மதத்தைத் தழுவி எங்களுடைய பெயர்களை கீழ் குறிப்பிட்டவாறு மாற்றி பயன்படுத்தி வருகின்றோம் எனவும் இத்தால் இலங்கை சனநாயக சோசலிச குடியரசுக்கும் மக்களுக்கும் அறியத்தருகின்றேன்.

1. ரெட்ணம் அமராவதி - ரெட்ணம் மரியம்
2. ஜெயராஜ் தீபன்- ஜெயராஜ் அப்துல்லாஹ்
3. ஜெயராஜ் ஜெயராச்சன் - ஜெயராஜ் றஹீம்

ரெட்ணம் - மரியம்

ரெட்ணம்- அமராவதி

# நீட்வூட் ஸ்ரீ நாக காளியம்மன் ஆலய மகா கும்பாபிஷேகம்

(பதுளை நிருபர்)

ஹல்துமுல்லை, நீட்வூட் ஸ்ரீ நாக காளியம்மன் ஆலய அஷ்டபந்தன பிரதிஷ்டா மஹா கும்பாபிஷேகப் பெருவிழா எதிர்வரும் 26ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளது.

இதற்கிணங்க 26ஆம் திகதி கிரியாரம்பம், விநாயக வழிபாடு, புண்ணியாகவாஜனம், கணபதி ஓமம், திருக்கண் திறத்தல், தீர்த்த சங்கீரணமும் 27ஆம் திகதி அக்னி காரியம் துவஜம், சுவாமி திருச் சிலைகளுக்கு எண்ணெய்க்காப்பு சாத்துதல் உள்ளிட்ட ஆகம நிகழ்வுகளும் 28ஆம் திகதி காலை 9.15 முதல் 10.15 மணிக்குள் வரும் சுபவேளையில் மகா கும்பாபிஷேகம் நடைபெறும்.

இதையடுத்து, அடியார்களுக்கு அன்னதானம் வழங்கப்படும். மகா கும்பாபிஷேகக் கிரியைகளை களுபானை ஸ்ரீதேவி கருமாரியம்மன் தேவஸ்தான பிரதம குருவான பிரம்மஸ்ரீ பாலமூர்த்தீஸ்வர சிவாச்சாரியார் தலைமையிலான சிவாச்சாரியார்கள் ஆகம விதிப்படி நடத்தி வைப்பர்.

மகா கும்பாபிஷேகத்தை தொடர்ந்து 48 நாட்களுக்கு மண்டலாபிஷேகப் பூஜைகள் இடம்பெறும்.

# தினசரி பலாபலன்கள்

சோபகிருது வருடம் ஆனி மாதம் 04ஆம் நாள்

திங்கட்கிழமை

**மேஷம்:** உங்கள் செயல் திறமையால் அனைத்தையும் வெற்றி கொள்வீர்கள். நண்பர்களால் பாராட்டப்படுவீர்கள்.

**ரிஷபம்:** குடும்பத்துக்கான சுபச் செலவுகள் ஏற்படும். ஆனாலும் தேவைக்கான பணம் நிச்சயம் கிடைக்கப் போவதால் கவலை வேண்டாம்.

**மிதுனம்:** உங்கள் உடல் இன்று ஆரோக்கியமாகவும் மகிழ்ச்சியாகவும் இருக்கும். புகழ், செல்வாக்கு அதிகரிக்கும்.

**கடகம்:** குடும்ப உறவில் அக்கறை காட்டுங்கள். தேவையற்றகருத்து வேறுபாடுகளுக்கு இடம் கொடாதீர்கள்.

**சிம்மம்:** அரசாங்க வகையில் பல சலுகைகளை நீங்கள் அடைவீர்கள். மூத்தவர்களின் உதவிகள் கிடைக்கும்.

**கன்னி:** தொழில் வியாபாரத்தில் உங்கள் முயற்சி பலிக்கும் நாள். உங்கள் தொழில் நிமித்தமான பயணங்கள் அமையும்.

**துலாம்:** தந்தைவழி நன்மைகள் சொத்து சுகங்களை அடைவீர்கள். தான தர்மங்களால் புண்ணியம் சேர்ப்பீர்கள்.

**விருச்சிகம்:** கடவுள் உங்கள் பொறுமையை சோதிக்கும் நாள். மனதைக் கெடுத்துக் கொள்ளாது அமைதியாக இருங்கள்.

**தனுசு:** உங்கள் புகழ், செல்வாக்கு இன்று உயரப் போகின்றது. அரச வகையில் இலாபங்களை அடைவீர்கள்.

**மகரம்:** மனதையும் உடலையும் கெடுத்துக் கொள்ளாதீர்கள். சிரித்துப் பேசும் மறைமுக எதிரிகளிடம் எச்சரிக்கையாக இருங்கள்.

**கும்பம்:** அரச உயர் மட்ட உதவிகள், அழைப்புகள் உண்டு. குழந்தைகளால் அதிக நன்மைகளையும் இலாபங்களையும் பெறுவீர்கள்.

**மீனம்:** தாயின் முழுமையான அன்பும் ஆசியும் கிடைக்கும் நன்நாள். வீடு வாகன வகையில் சுப செலவுகள் உண்டு.

**திதி:** பிரதமை மு.ப.11.25 வரை பின் துவிதியை (வளர்)
**நட்சத்திரம்:** திருவாதிரை பி.ப.8.10 வரை பின் புனர்பூசம்
**யோகம்:** மரண யோகம் முழுவதும்
**வார சூலம்:** கிழக்கு திசை நோக்கி சுபகாரியம் கூடாது
**நல்லநேரம்** :பி.ப. 11.52– 12.22 மணிவரை
**ராகுகாலம்** :7.22– 8.52 மணிவரை
**எமகண்டம்** :10.22– 11.52 மணிவரை
**குளிகை** :1.22– 2.52 மணிவரை
**சந்திராஷ்டமம்:** விருச்சிக ராசியினர் எச்சரிக்கையாக செயல்படவும்
**தனஅதிஷ்டம்:** மிருகசீரிடம்,சித்திரை,அவிட்டம்; (பிறந்தவர்களுக்கு)
**விசேட தினம்:** ------

**கணிப்பு : சிவா பாஸ்கரராவ்**
(ஜோதிடம் மற்றும் வாஸ்து ஆய்வாளர்)
ஸ்தாபகர் - ஓம்சிவ ஜோதிட வித்தியா & வாஸ்து நிலையம்.
தொலைபேசி : 077-0525325
078-6759739

தமிழன்
THAMILAN
தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்

இல. 91. விஜேராம மாவத்தை, கொழும்பு 07.
தொலைநகல் : 0112 67 34 42,
தொலைபேசி : 0115 200 900/ 0115 88 61 87
விளம்பரம் : 0114 846 097
மின்னஞ்சல் : thamilaneditorial@gmail.com/ thamilaneditor@gmail.com

**2023, ஜூன் 19ஆம் திகதி, திங்கட்கிழமை**

# பொருளாதார இடரில் மக்கள்!

ஐக்கிய நாடுகளின் உணவு மற்றும் விவசாய ஸ்தாபனத்தின் 2023ஆம் ஆண்டுக்கான சமீபத்திய அறிக்கைகளின்படி, இலங்கையில் குடும்பமொன்றின் மாதாந்த செலவு இவ்வருடம் 76,124 ரூபாவாக உயர்ந்துள்ளதாக பேராதனைப் பல்கலைக்கழகத்தின் பொருளாதாரம் மற்றும் புள்ளியியல் கற்கைகள் பிரிவின் பேராசிரியர் வசந்த அத்துகோரள தெரிவித்தார்.

கணக்கெடுப்புத் தரவுகளின்படி, கடந்த வருடம் இலங்கையில் ஒரு குடும்பத்தின் மாதாந்தச் செலவு சுமார் 63,820 ரூபாவாகும் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இலங்கை குடும்பம் ஒன்றின் மாதாந்த செலவில் 53 வீதம் அதாவது 40,632 ரூபா உணவுக்காக செலவிடப்பட வேண்டியுள்ளது. மீதமுள்ள 35,492 ரூபா (மொத்த செலவில் 47 சதவீதம்) உணவு அல்லாத தேவைகளுக்காக செலவிடப்படுகிறது. இலங்கையில் 60 வீதமான குடும்பங்களின் மாதாந்த வருமானம் 2022ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் இவ்வருடம் குறைந்துள்ளது. இலங்கை குடும்பங்களின் உணவு அல்லாத தேவைகளுக்காக செலவிடப்படும் பணத்தின் பெரும்பகுதி கடனை மீளச் செலுத்துவதற்கு செலவிட வேண்டியுள்ளதால், இது உணவு அல்லாத செலவினங்களில் 23 வீதமாகும்.

மேலும், உணவு அல்லாத தேவைகளுக்காக செலவிடப்படும் பணத்தில் 14 வீதம் கல்விக்காகவும், 15 வீதம் மருத்துவம் மற்றும் சுகாதாரத்திற்காகவும், 13 வீதம் எரிபொருளுக்காகவும், 10 வீதம் ஆடைகளுக்காகவும், 6 வீதம் போக்குவரத்துச் செலவுகளுக்காகவும் ஒதுக்கப்படுகிறது. இந்த ஆண்டின் முதல் காலாண்டில், இலங்கையின் பொருளாதாரம் 11.5% எதிர்மறையாக இருந்தது. இதன் காரணமாகவே இந்த பணவீக்க நிலைமை ஏற்பட்டுள்ளதாக வசந்த அத்துகோரள மேலும் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை இலங்கை மத்திய வங்கியின் அறிக்கை (2022/2023) ஒரு நபரின் குறைந்தபட்ச அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்ய மாதாந்தம் 13,777 ரூபா தேவை என்று சுட்டிக்காட்டுகிறது. அந்த வருமானத்தை அடையமுடியாதவர்கள் வறுமைக் கோட்டிற்கு கீழ் உள்ளவர்கள் என அடையாளம் காணப்படுவதாக மத்திய வங்கி அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

உணவுப்பொருட்கள், ஆடைகள் போன்றவற்றின் விலைகள் அதிகரிப்பு மற்றும் நாட்டில் பணவீக்க நிலைமைகளின் வளர்ச்சி கடந்த ஆண்டில் இடம்பெற்றமை கவனிக்கத்தக்கது. எனவே, நாட்டின் மொத்த சனத்தொகையில் 14.3% பேர் வறுமைக் கோட்டுக்குக் கீழே உள்ளதாக மத்திய வங்கி அறிக்கை குறிப்பிடுகிறது.

பொருளாதார நெருக்கடியினால் மக்கள் அல்லலுறுவது தொடர்ந்துகொண்டிருக்கிற நிலைமையையே இந்த தரவுகள் சுட்டி நிற்கின்றன. சராசரி குடும்பமொன்று வாழ்க்கை நடத்துவதற்கு அன்றாட செலவுகள், பிள்ளைகளின் கல்வி கற்றலுக்குரிய செலவுகள், உறவினர்களின் விசேட நிகழ்வுகள், இதர மின், குடிநீர், போக்குவரத்து செலவுகள் என்று பட்டியலிட்டால் மேற்சொன்ன தொகைகளை விட அதிகளவான தொகை செலவாகிறது என்பதே உண்மை. வங்கிகளில், கடனட்டைகளின் ஊடாக கடன்களை பெற்றபடியே பெரும்பாலோரின் வாழ்க்கை வண்டி ஓடிக்கொண்டிருக்கிறது. இன்றைய வாழ்க்கைச் செலவுக்கேற்ற ஊதியம் அரச மற்றும் தனியார்துறை பணியாளர்களுக்கு கிடைக்கிறதா என்றால் அதுவும் இல்லை.

சம்பள உயர்வுக்கு பதிலாக பல நிறுவனங்கள் இப்போது இருக்கும் பணியாளர்களையே குறைக்கும் நிலைதான் இருக்கிறது.

நாட்டின் இந்த நிலைமை தொடர்வதன் காரணமாகவே பெரும்பாலானோர் நாட்டிலிருந்து வெளியேறி வெளிநாடு செல்ல முயற்சிக்கின்றனர். பலர் ஏற்கனவே வெளிநாடுகளுக்கு சென்றுவிட்டனர். இவர்களில் கல்வி, மருத்துவம் மற்றும் பொறியியல் துறைசார் நிபுணர்கள் உள்ளனரென்பது மிகவும் துயரமான விடயம்.

இலங்கைக்கு மூன்று வழிகளில் அதிகமான பணம் வருகிறது. ஒன்று தேயிலை; இரண்டாவது ஆடை உற்பத்தி; மூன்றாவது சுற்றுலா. இதை மூன்று T என்கிறார்கள். பொருளாதாரத்தில் இந்த மூன்று துறைகள்தான் பெரும் பங்களிப்பை வழங்குகின்றன. இந்த வழக்கத்தை உடைத்தது 2020ஆம் ஆண்டில் வந்த கொரோனா. 2020 மார்ச் மாதம் முதல் இலங்கையும் அண்டை நாடுகளும் சர்வதேச விமானச் சேவைகளை நிறுத்தின. நாடும் முடங்கியது. பொருளாதாரத்தின் தூண்களாக இருந்த தேயிலை, ஆடை உற்பத்தி, சுற்றுலாத்துறை ஆகிய அனைத்தும் முற்றிலுமாகப் பாதிக்கப்பட்டன. இந்த மூன்றைத் தவிர வேறு எந்த நிரந்த வருமானமும் இல்லாத இலங்கை, படிப்படியாகப் பொருளாதாரப் பின்னடைவை சந்திக்கத் தொடங்கியது.

பிற நாடுகளின் நாணய மதிப்பில் ஒரு நாடு வைத்திருக்கும் பணமே அந்நிய செலாவணி கையிருப்பு எனப்படுகிறது. வங்கிப் பத்திரங்கள், கடன் பத்திரங்கள், வைப்பு நிதி போன்ற பல வழிகளில் அந்நிய செலாவணி சேமிக்கப்படுகிறது. பொதுவாக ஒரு நாட்டின் மத்திய வங்கி இவற்றைப் பேணும். ஒரு குறிப்பிட்ட அளவில் அந்நிய செலாவணியைக் கையிருப்பில் வைத்திருப்பது பாதுகாப்பானது. தங்களது நாட்டின் நாணய மதிப்பு குறைந்தாலோ, வேறு வகையிலான நெருக்கடி ஏற்படும்போதோ இது கைகொடுக்கும்.

பெரும்பாலும் அமெரிக்க டொலர்களிலேயே அந்நிய செலாவணி வைக்கப்படுகிறது. உலகத்திலேயே சீனாதான் அதிக அந்நிய செலாவணியைக் கையிருப்பில் வைத்திருக்கும் நாடாக இருக்கிறது. உலக வங்கியின் மதிப்பீட்டின்படி அந்நாட்டின் அந்நிய செலாவணி கையிருப்பு 3.35 ட்ரில்லியன் டொலர்களாகும்.

இந்த மதிப்பு இலங்கையைப் பொறுத்தவரை 2020 மார்ச் மாதத்தில் 2.3 பில்லியன் டொலர்களாகக் குறைந்தது. இலங்கைக்கான வருமானம் அப்போது முதல் குறையத் தொடங்கியதால், இலங்கை மத்திய வங்கியின் கையிருப்பில் இருந்த அந்நிய செலாவணி தொடர்ச்சியாகவே வீழ்ச்சியடைந்திருக்கிறது.

அந்நிய செலாவணி கையில் இல்லாவிட்டால் எதையும் இறக்குமதி செய்ய முடியாது. இது பொருளாதார நெருக்கடியின் ஆபத்தை உணர்த்தக் கூடியது. அந்நிய செலாவணி இருப்பு குறைந்ததால் இலங்கை நாணயத்தின் நெகிழ்வுத் தன்மையைப் பேணுவதற்காக ரூபாவின் மதிப்பை இலங்கை மத்திய வங்கி குறைத்தது. இதனால் பொருட்களின் மதிப்பு படிப்படியாக உயரத் தொடங்கியது.

இப்போது சர்வதேச நாணய நிதியத்தின் உதவியுடன் நாட்டின் பொருளாதாரம் சற்று தலைதூக்கினாலும் மக்கள் மீதான சுமை என்பது எந்த விதத்திலும் குறையவில்லை. சர்வதேச நாணய நிதியத்தின் நிபந்தனைகள் நிறைவேற்றப்படும்போது இந்த பொருளாதார தாக்கம் மக்களை மேலும் பாதிப்படையச் செய்யும்.

அரசாங்கம் இந்நிலைமையை கவனத்திற்கொள்ளவேண்டும். கருத்தில் எடுத்தல் வேண்டும். மக்கள் பாதிப்பான நிலைமையில் இருப்பார்களாயின் நாடொன்று எந்த வகையில் முன்னேறும் என்பதை அரசாங்கமும் ஆட்சியாளர்களும் சிந்தித்தல் வேண்டும்.

# இலங்கைத் தமிழர்களுக்கு நரகத்தைக் காட்டிய தீவு;

## 20 மாதங்களாகத் தப்பிக்க முடியாமல் தவிப்பது ஏன்?

இந்தியப் பெருங்கடல் பகுதியில் அமைந்துள்ள ஒரு தீவு, புலம்பெயர்ந்த இலங்கைத் தமிழர்களுக்கு நரகத்தைக் காட்டிக் கொண்டிருக்கிறது.

இந்திய பெருங்கடல் பகுதியில் சிக்கிய மீன்பிடிப் படகிலிருந்து மீட்கப்பட்ட புலம்பெயர்ந்தோர், அந்தப் பகுதியில் அமைந்துள்ள பிரிட்டனின் ஆளுகைக்கு உட்பட்ட ஒரு தீவில் மாதக்கணக்கில் சிக்கித் தவித்து வருகின்றனர்.

இந்த வெப்பமண்டல தீவிலிருந்து அவர்கள் பாதுகாப்பான இடத்திற்குச் செல்ல விரும்பினாலும், அங்குள்ள அசாதாரண சட்ட நடைமுறைகள் அவர்களை தீவை விட்டு வெளியேற முடியாதபடி செய்துள்ளன.

இந்நிலை, அவர்களை அச்சத்தில் ஆழ்த்தியுள்ளது. அவர்கள் உதவியற்றவர்களாக உணர்கின்றனர்.

இலங்கைத் தமிழர்களுக்கு நரகத்தைக் காட்டிக் கொண்டிருக்கும் அந்தத் தீவின் பெயர், டியாகோ கார்சியா. அங்கு சிக்கித் தவிக்கும் இலங்கை தமிழர்கள் (புலம்பெயர்ந்தோர்) அனைவரின் பெயர்களும் இந்தக் கட்டுரையில் மாற்றப்பட்டுள்ளன.



### திசைமாறிய பயணம்

கடந்த 2021ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம், ஒரு நாள் அதிகாலை வேளையில் மீன்பிடிப் படகு ஒன்று டியாகோ கார்சியா தீவுக்கு அருகில் சிக்கியது.

பிரிட்டன்- அமெரிக்க இராணுவத்தின் இரகசிய தளம் அமைந்துள்ள அந்த தீவு, மக்கள் நடமாட்டம் உள்ள பகுதியில் இருந்து பல நூறு கிலோ மீற்றர்கள் தொலைவில் அமைந்துள்ளது என்பதுடன், முன் அனுமதி பெறாத நபர்கள் அந்த பகுதிக்குள் பிரவேசிக்க தடையும் விதிக்கப்பட்டுள்ளது. இந்நிலையில், அந்த எல்லைக்குள் நுழைந்த மீன்பிடிப் படகு குறித்த விசாரணையில், அந்த தீவின் நிர்வாகம் உடனடியாக இறங்கியது.

அந்த படகில் மொத்தம் 89 இலங்கை தமிழர்கள் இருந்ததும், அவர்கள் உள்நாட்டில் அனுபவித்த பல்வேறு இன்னல்களில் இருந்து தப்பிப் பிழைத்து அடைக்கலம் தேடி வேறு நாட்டிற்கு செல்வதும் தெரிய வந்தது. அத்துடன் அவர்கள் டியாகோ கார்சியா தீவில் தரையிறங்க விரும்பவில்லை என்பதும் தெரிந்தது.

தஞ்சம் புகுவதற்காக கனடாவை நோக்கி அவர்கள் பயணித்து கொண்டிருந்தபோது, மோசமாக மாறிய வானிலையும், படகில் ஏற்பட்ட இயந்திர தொழில்நுட்ப கோளாறும் அவர்களின் பயணத்தை திசைத் திருப்பின.

படகு ஆபத்தில் சிக்கியதால், நாங்கள் கரை ஒதுங்க அருகில் ஏதேனும் பாதுகாப்பான இடம் கிடைக்குமா என்று தேட ஆரம்பித்தோம். "அப்போது சிறிது தொலைவில் மெல்லிய வெளிச்சம் தென்படவே, டியாகோ கார்சியா தீவை நோக்கி பயணித்தோம்" என்று படகில் இருந்த ஒரு நபர் பிபிசியிடம் கூறினார்.

பிரிட்டன் கடற்படை கப்பல், படகை பத்திரமாக கரை ஒதுங்க செய்தது. மேலும், அதில் இருந்த அனைவரும் ஒரு தற்காலிக இடத்தில் தங்கவைக்கப்பட்டனர்.

20 மாதங்களுக்கு முன் இந்த சம்பவம் நிகழ்ந்தது. "ஆரம்பத்தில் படகின் இயந்திரத்தை பழுது பார்க்கும் வாய்ப்பு குறித்து மட்டும் ஆராய திட்டமிடப்பட்டிருந்தது. ஆனால், புலம்பெயர்ந்த குழுவினர், டியாகோ கார்சியாவில் இருந்து வேறொரு நாட்டிற்கு தஞ்சம் புகுவதற்கு தேவையான முயற்சிகளை எடுக்க தங்களை வலியுறுத்தலாம் என்ற அனுமானத்தையும் நிராகரிக்க முடியாது" என்றும் தீவின் அதிகாரிகள் தெரிவித்தனர்.

அதிகாரிகளின் அனுமானம் அடுத்த நாளே நிஜமானது. தீவில் தஞ்சம் அடைந்திருந்த இலங்கை தமிழர்கள், அங்கிருந்த பிரிட்டிஷ் கடற்படை தளபதியிடம் ஓர் கடிதத்தை தந்தனர். அதில், "உள்நாட்டில் கடும் கொடுமைகளுக்கு ஆளாகி வந்ததால், 18 நாட்களுக்கு முன் இந்தியாவில் உள்ள தமிழ்நாட்டில் இருந்து இந்தப் பயணத்தை தொடங்கினோம். நாங்கள் பாதுகாப்பான ஒரு நாட்டிற்கு செல்ல விரும்புகிறோம்" என்று அந்த கடிதத்தில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

2009இல் இலங்கை இராணுவத்தினருடன் நடைபெற்ற உள்நாட்டு போரில் வீழ்த்தப்பட்ட விடுதலைப்புலிகள் இயக்கத்துடன் தொடர்பில் இருந்ததாக கூறியதன் விளைவாக தாங்கள் பல்வேறு கொடுமைகளுக்கு ஆளாக்கப்பட்டதாக அவர்களில் பலர் கூறினர். பாலியல் வன்கொடுமைக்கு ஆளானதாகவும் சிலர் குற்றம்சாட்டினர்.

### முதன்முறையாக நிகழ்ந்த சம்பவம்

இதனிடையே, வெளிநாட்டு பிராந்தியங்களுக்கான பிரிட்டன் இயக்குநரான பால் கேண்ட்லர் வெளியிட்டிருந்த குறிப்பில், "பிரிட்டிஷ் இந்திய பெருங்கடல் பகுதியில் (BIOT) இதுபோன்றதொரு தஞ்சம் கோரும் சம்பவம் முதன்முறையாக நிகழ்ந்துள்ளது என்று குறிப்பிடப்பட்டிருந்தது. அத்துடன் இலங்கை தமிழர்கள் குழுவின் வருகையை 'எதிர்பாராத வருகை' எனவும் அதில் குறிப்பிடப்பட்டிருந்தது. இந்த சம்பவம் குறித்து பிரிட்டன் அரசாங்கம் நன்கு அறிந்துள்ளது என்றும், நிலைமைக்கு விரைந்து தீர்வு காண்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன" என்றும் பால் கேண்ட்லர் தமது குறிப்பில் தெரிவித்திருந்தார்.

"டியாகோ கார்சியா தீவில் தஞ்சமடைந்துள்ள இலங்கைத் தமிழர்கள் குழு தற்போதைக்கு வெளி உலகுடன் எந்தத் தொடர்பும் இல்லாமல் இருக்கின்றனர். ஆனால், நாளடைவில் இந்தச் செய்தி பரவ வாய்ப்புள்ளது" என்றும் கேண்ட்லரின் குறிப்பில் தெரிவிக்கப்பட்டிருந்தது.




### நரகமாக மாறிய தீவு

இதற்கிடையே, புகலிடம் கோரி எதிர்பாராத விதமாக தீவிற்கு வந்தவர்களுக்கு, தங்களின் யதார்த்த சூழ்நிலை போகப்போக புரிய ஆரம்பித்தது.

"ஆரம்பத்தில் இங்கு நான் மகிழ்ச்சியாகவும் உயிர் தப்பியதாகவும் உணர்ந்தேன். முகாமில் உணவு அளிக்கப்பட்டது. அதுநாள் வரை அனுபவித்து வந்த கொடுமைகளில் இருந்து விடுபட்டதாகவும் உணர்ந்தேன்" என்று முகாமில் இருந்த லெக்ஷானி என்ற இலங்கைத் தமிழரான பெண் ஒருவர் கடந்த மாதம் பிபிசியிடம் கூறி இருந்தார்.

ஆனால், தங்களுக்கு அடைக்கலம் அளித்த இந்த வெப்ப மண்டல தீவு விரைவில் நரகமாக மாறியது என்றும் அவர் கூறினார்.

தன்னுடன் படகில் பயணித்து, தீவு முகாமில் தங்கியிருந்த ஒரு நபரால் தான் கடந்த ஆண்டு ஒக்டோபர் மாதம் பாலியல் துன்புறுத்தலுக்கு ஆளானேன் என்று அந்த பெண் கண்ணீர் மல்க தெரிவித்தார்.

"அப்போது நான் கதறி அழுதேன். ஆனால், யாரும் உதவிக்கு வரவில்லை" என்று லெக்ஷானி கூறினார்.

தனக்கு நேர்ந்த கொடுமை குறித்து, அதிகாரபூர்வமாக புகார் அளிக்க விரும்பியதாக கூறிய அவர், ஆனால், பாலியல் வன்கொடுமையின்போது தான் உடுத்தியிருந்த துணியை துவைத்துவிட்டதன் விளைவாக ஆதாரத்தை சேகரிப்பது கடினம் என்று தான் அறிவுறுத்தப்பட்டதாகவும் தெரிவித்தார்.

தம்மை பாலியல் வன்புணர்வு செய்த நபரை வேறு கூடாரத்திற்கு மாற்ற வேண்டும் என்ற தனது கோரிக்கையை அதிகாரிகள் ஏற்கும் வரை, கிட்டத்தட்ட ஒரு வாரம் அந்த நபருடனேயே ஒரே கூடாரத்தில் தாமும் தங்கியிருக்க வேண்டியிருந்தது என்று பரிதாபமாகக் கூறினார் லெக்ஷானி.

ஆனால், பிரிட்டன் அரசு மற்றும் பிரிட்டிஷ் இந்திய பெருங்கடல் பிராந்திய நிர்வாகங்கள் (பி.ஐ.ஓ.டி.), இந்த குற்றச்சாட்டு தொடர்பான கோரிக்கைகளுக்கு எந்த பதிலும் அளிக்கவில்லை.

### தற்கொலை முயற்சி



"முகாமில் நிலவிய சூழல் காரணமாக, தாங்கள் அல்லது தங்களுக்கு தெரிந்தவர்கள் மன அழுத்தத்திற்கு ஆளாகினர். அதன் விளைவாக அவர்கள் தற்கொலைக்கு முயன்றனர் அல்லது தங்களைத் தாங்களே காயப்படுத்தி கொண்டனர். கூர்மையான ஆயுதங்களை விழுங்கியதன் விளைவாக சிலர் மூச்சுத் திணறலுக்கும் ஆளாகினர்" என்று முகாமில் இருந்த லெக்ஷானி மற்றும் சிலர் பிபிசியிடம் தெரிவித்தனர்.

முகாமிற்குள் குறைந்தது 12 தற்கொலை முயற்சிகள் நடந்திருப்பது குறித்தும், குறைந்தபட்சம் இரண்டு பாலியல் வன்கொடுமை குற்றச்சாட்டுகள் எழுந்தது தொடர்பாகவும் நிர்வாகிகள் நன்கு அறிவார்கள் என்று புலம்பெயர்ந்தோர் தரப்பு வழக்கறிஞர்கள் குற்றம்சாட்டுகின்றனர்.

"நாங்கள் உடல்ரீதியாகவும், மனரீதியாகவும் சோர்வாக உணர்கிறோம். இங்கு நாங்கள் உயிர்ப்பற்ற ஓர் வாழ்க்கையை வாழ்ந்து வருகிறோம். என்னை நான் நடைப்பிணமாக உணர்கிறேன். இதன் விளைவாக இரண்டு முறை என்னை நானே காயப்படுத்திக் கொண்டேன்" என்று பிபிசியிடம் கூறினார் டியாகோ கார்சியா தீவு முகாமில் இருக்கும் மற்றொரு புலம்பெயர்ந்த நபரான விதுஷன்.

பாதுகாப்பு குறித்த தனது கோரிக்கை நிராகரிக்கப்பட்டதை அடுத்து, தான் அனைத்து நம்பிக்கையையும் இழந்து விட்டதாகவும், இத்துடன் வாழ்க்கையை முடித்து கொள்ள முடிவு செய்ததாகவும் கூறினார் முகாமில் இருந்த மற்றொரு நபரான ஆதவன்.

தமது கணவரும் தற்கொலைக்கு முயற்சித்ததாக, சாந்தி என்ற மற்றொரு பெண் கூறினார்.

கூண்டில் அடைக்கப்பட்ட ஒரு விலங்கை போல நான் இங்கு வாழ விரும்பவில்லை என்றும் அவர் மனம் நொந்து கூறினார்.

### அதிகாரிகள் மிரட்டல்

2021இல் இலங்கை இராணுவ வீரர்களால் பாலியல் வன்கொடுமை மற்றும் துன்புறுத்தலுக்கு தான் ஆளாகி இருந்ததாக குற்றஞ்சாட்டி, மீண்டும் இலங்கைக்கு திருப்பி அனுப்பப்படுவேன் என்று முகாமில் இருந்த ஓர் அதிகாரி மிரட்டினார். அதன் விளைவாக தான் தற்கொலைக்குத் தூண்டப்பட்டேன் என்று லக்ஷானி குற்றம்சாட்டினார்.

அவரது இந்த குற்றச்சாட்டு குறித்து, தீவில் உள்ள இலங்கை தமிழர்களின் முகாமிற்கு பாதுகாப்பு அளித்துவரும் பிரிட்டன் அரசு மற்றும் 'G4S' தனியார் நிறுவன நிர்வாகங்கள் பதிலளிக்க மறுத்துவிட்டன.

தீவு முகாமில் உள்ள புலம்பெயர்ந்தவர்களை தங்களது அதிகாரிகள் எல்லா நேரங்களிலும் கண்ணியத்துடனும், மரியாதையுடனும் நடத்தி வருகின்றனர் என்று G4S நிறுவன நிர்வாகம் தெரிவித்திருந்தது.

பி.ஐ.ஓ.டி. முகாமில் தங்கவைக்கப்பட்டுள்ள புலம்பெயர்ந்தோரின் நலன் மற்றும் பாதுகாப்பு மிகவும் முக்கியம். தாங்கள் தரக்குறைவாக நடத்தப்படுவதாக அவர்கள் கூறும் குற்றச்சாட்டுகள் தீவிரமாக கருத்தில் கொள்ளப்பட்டு, அவை குறித்து முழுமையாக விசாரிக்கப்படும் என்று பிரிட்டன் அரசின் செய்தித் தொடர்பாளர் உறுதியளித்திருந்தார்.

பி.ஐ.ஓ.டி. நிர்வாகம் அங்கு முகாமில் உள்ளவர்களுக்கு சிறந்த மருத்துவ உதவிகளை வழங்கி வருவதாகவும் அவர் கூறினார். தீவு முகாமில் உண்ணாவிரதப் போராட்டங்களும் நடந்துள்ளன என்றும், இதில் குழந்தைகளும் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர் எனவும் அரசு வழக்கறிஞர்கள் கூறுகின்றனர்.

### கைபேசிகள் பறிமுதல்

முகாமில் இருந்த புலம்பெயர்ந்தோரின் கைபேசிகள் மற்றும் தொலைபேசி வசதிகளை அதிகாரிகள் பறிமுதல் செய்தனர். தங்களுக்கு மருத்துவ வசதி வேண்டாம் என்று தனிநபர்கள் எழுத்துபூர்வமாக விருப்பத்தை தெரிவிக்காத பட்சத்தில், அவர்களுக்கு அளிக்கப்பட்டு வந்த மருத்துவ சிகிச்சைகளும் திரும்பப் பெறப்பட்டன என்று முகாமில் வசிக்கும் புலம்பெயர்ந்தோர் தரப்பு வழக்கறிஞர் இந்த ஆண்டின் தொடக்கத்தில் குற்றஞ்சாட்டி இருந்தார்.

இந்த குற்றச்சாட்டுகளை நீதிமன்றத்தில் திட்டவட்டமாக மறுத்தது பி.ஐ.ஓ..டி நிர்வாகம். ஓர் உண்ணாவிரதப் போராட்டத்தின் போது பாதுகாப்பு காரணங்களுக்காக முகாமில் இருந்து கூர்மையான ஆயுதங்கள் அகற்றப்பட்டன. இதேபோன்று, முகாமில் இருப்பவர்கள் தங்களைத தாங்களே காயப்படுத்தி கொள்வதை தடுக்கும் விதத்தில்தான் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன என்று பி.ஐ.ஓ.டி. நிர்வாகம் விளக்கம் அளித்தது.

### மொரிஷியஸிடம் இருந்து கைமாறிய தீவு

இராணுவ தளமாக திகழும் டியாகோ கார்சியா தீவு, புகலிடம் கோரி வருவோரை தங்க வைக்கும் இடம் இல்லை என்பதை அனைவரும் ஒப்புக் கொள்ளலாம்.

இந்தியப் பெருங்கடல் பகுதியில் அமைந்துள்ள டியாகோ கார்சியா உள்ளிட்ட தீவுகளை உள்ளடக்கிய சாக்கோஸ் தீவை தனது கொலனி ஆதிக்கத்தில் இருந்த மொரிஷியஸ் வசமிருந்து 1965இல் பிரிட்டன் தனது கட்டுப்பாட்டில் கொண்டு வந்தது. அதன் தொடர்ச்சியாக, டியாகோ கார்சியா தீவில் இராணுவ தளம் அமைப்பதற்காக அங்கிருந்து 1000க்கும் மேற்பட்ட மக்கள் வெளியேற்றப்பட்டனர்.

ஆனால்,1968இல் மொரிஷியஸ் பிரிட்டனிடம் இருந்து விடுதலை பெற்றது.

(05ஆம் பக்கம் பார்க்க...)

## இன்றைய நாளில்...

- 1961 – குவைத் ஐக்கிய இராச்சியத்திடம் இருந்து விடுதலையை அறிவித்தது.
- 1990 – ரஷ்ய - சோவியத் கூட்டு சோஷலிசக் குடியரசின் கம்யூனிஸ்ட் கட்சி ஆரம்பிக்கப்பட்டது.
- 1991 – ஹங்கேரியில் சோவியத் ஆக்கிரமிப்பு முடிவுக்கு வந்தது.
- 2012 – விக்கிலீக்ஸ் நிறுவனர் யூலியன் அசாஞ்சே லண்டனிலுள்ள எக்குவடோர் தூதரகத்தில் அரசியல் தஞ்சம் அடைந்தார். 2019இல் கைது செய்யப்படும் வரை அங்கேயே அவர் தங்கியிருந்தார்.

## நக்கல் நமசிவாயம்



# தென்மராட்சியில் கடற்றொழிலாளர்களுக்கு இலவச மண்ணெண்ணெய் விநியோகம்



(சாவகச்சேரி நிருபர்)

தென்மராட்சி கடற்றொழில் சங்கங்களைச் சேர்ந்த 88கடற்றொழிலாளர்களுக்கு கடந்த வெள்ளிக்கிழமை சாவகச்சேரி பலநோக்குக் கூட்டுறவுச்சங்க எரிபொருள் நிரப்பு நிலையத்தில் வைத்து இலவச மண்ணெண்ணெய் வழங்கிவைக்கப்பட்டுள்ளது.

சீன அரசாங்கத்தின் உதவி மூலம் கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் முயற்சியினூடாக தென்மராட்சி கடற்றொழிலாளர்களுக்கு தலா 75 லீட்டர் மண்ணெண்ணெய் இலவசமாக வழங்கிவைக்கப்பட்டுள்ளது.

இதன்போது அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் முயற்சிக்கு தென்மராட்சி கடற்றொழிலாளர் சங்கங்கள் தமது நன்றியைத் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# சட்டவிரோத மணல் அகழ்வில் ஈடுபட்டோர் யாழில் கைது



(சாவகச்சேரி நிருபர்)

சாவகச்சேரிப் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட கனகம்புளியடிப் பகுதியில் கடந்த வெள்ளிக்கிழமை காலை சட்டவிரோத மணல் அகழ்வில் ஈடுபட்ட இருவர் கைது செய்யப்பட்டிருப்பதுடன் உழவு இயந்திரமும் கைப்பற்றப்பட்டுள்ளது.

சாவகச்சேரிப் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி பாலித செனவிரட்ன தலைமையிலான பொலிஸாரே குறித்த கைது நடவடிக்கையை முன்னெடுத்துள்ளனர்.

கைதான சந்தேக நபர்களை நீதிமன்றில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# பேராதனைப் பல்கலைக்கழக மாணவர் இருவர் உயிரிழப்பு

(கண்டி நிருபர்)

பேராதனைப் பல்கலைக்கழக பொறியியல் பீட முதலாம் வருட மாணவரொருவர் நேற்றுமுன்தினம் (17) தூக்கிட்டு தற்கொலை செய்துகொண்டுள்ளதாக பல்கலைக்கழக நிர்வாகம் தெரிவித்தது.

பேராதனைப் பல்கலைக்கழகத்தின் அக்பர் விடுதியிலுள்ள குளியல் அறையிலேயே தூக்கில் தொங்கிய நிலையில் சடலம் கண்டு பிடிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த, பொறியியல் பீட முதலாம் ஆண்டு மாணவன் ஒருவனே இவ்வாறு தற்கொலை செய்துள்ளதாகதெரிவிக்கப்படுகிறது.

மேற்படி சம்பவம் தொடர்பாக பேராதனைப் பல்கலைக்கழக நிர்வாகமும் பேராதனைப் பொலிஸாரும் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். மேற்படி தற்கொலைக்கான காரணம் இன்னும் தெரியவரவில்லை எனப் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

இதேவேளை, பேராதனைப் பல்கலைக்கழக மேலுமொரு மாணவன் நீர்வீழ்ச்சியில் வீழ்ந்து உயிரிழந்த சம்பவமொன்றும் பதிவாகியுள்ளது.

பேராதனைப் பல்கலைக்கழகத்தின் விஞ்ஞான பீடத்தின் மூன்றாவது வருட மாணவன் ஒருவரே மேற்படி சம்பவத்தில் உயிரிழந்துள்ளார்.

பெலிகுல்ஓயா, பம்பஹின்ன பிரதேசத்தைச் சேர்ந்த எச்.எம்.ஹசங்க விகும் விதாரன என்ற 25 வயதுடைய மேற்படி மாணவன் தனது நண்பர்கள் சிலருடன் பம்பரகந்த நீர்வீழ்ச்சியை பார்வையிடச் சென்றிருந்தவேளை நீர்வீழ்ச்சிக்கு அண்மித்த பகுதியில் வழுக்கி வீழ்ந்து உயிரிழந்துள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர். இது தொடர்பில் மேலதிக விசாரணைகளை ஹல்துமுல்ல பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# கணினி தொழில்நுட்ப நிலையம் திறப்பு





(இக்பால் அலி)

கண்டி டி. பி. கோடினிங் கல்வி நிறுவனத்தின் அனுசரணையுடன் ஒரு கோடி ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்ட புதிய கணினி தொழில்நுட்ப நிலையத் திறப்பு விழாவும் கட்டுக்கலை ஜும்ஆப் பள்ளிவாசலின் விஸ்தரிப்புக்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வும் இலங்கை ஒலிரப்புக் கூட்டுத்தாபனத்தின் பணிப்பாளர் சபை உறுப்பினரும் கண்டி கட்டுக்கலை ஜும்ஆப் பள்ளிவாசல் நிர்வாக சபையின் தலைவருமான அப்சல் மரைக்கார் தலைமையில் கட்டுக்கலை அல் புர்க்கானிய்யா அரபுக் கல்லூரியின் மண்டபத்தில் நடைபெற்றன.

கண்டி மாவட்டப் பள்ளிவாசல்கள் சம்மேளனத்தின் தலைவர் கே. ஆர். ஏ. சித்தீக், கட்டுக்கலை அல்- புர்க்கானிய்யா அரபுக் கல்லூரியின் பணிப்பாளர் ராயிஸ் முஸ்தபா, அகில இலங்கை வை. எம். எம். ஏ. முன்னாள் தேசிய தலைவர் சலீம்டீன், உலமாக்கள், பாடசாலை மாணவர்கள் உள்ளிட்ட பலர் இந்நிகழ்வில் பங்கேற்றனர்.

# பாடசாலை மாணவிக்கு துவிச்சக்கரவண்டி



(சாவகச்சேரி நிருபர்)

தென்மராட்சி கெற்பேலிப் பகுதியில் வசிக்கின்ற பாடசாலை மாணவி ஒருவருக்கு பாராளுமன்ற உறுப்பினர் த.சித்தார்த்தனால் கடந்த வியாழக்கிழமை துவிச்சக்கரவண்டி வழங்கிவைக்கப்பட்டது.

தென்மராட்சியின் விடத்தற்பளை கிராமத்தில் சாவகச்சேரிப் பிரதேச சபையின் முன்னாள் உபதவிசாளர் செ.மயூரன் தலைமையில் இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் வைத்து ஜனநாயக மக்கள் விடுதலை முன்னணியின் லண்டன் கிளை உறுப்பினர் பாலாவின் நிதிப் பங்களிப்பின் மூலம் பெறப்பட்ட துவிச்சக்கரவண்டியே இவ்வாறு மாணவிக்கு வழங்கிவைக்கப்பட்டுள்ளது.

இந்நிகழ்வில் வடக்கு மாகாணசபையின் முன்னாள் உறுப்பினர் பா.கஜதீபன், சாவகச்சேரி நகரசபையின் முன்னாள் உறுப்பினர் ஞா.கிஷோர் மற்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பச்சிலைப்பள்ளி அமைப்பாளர் ஜெயா(சின்னவன்) ஆகியோரும் கலந்துகொண்டனர்.





யா./மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரியின் மாணவத் தலைவர்களுக்கு தலைமைத்துவப் பண்புகளை விருத்தி செய்வதற்கான செயலமர்வு கடந்த வெள்ளிக்கிழமை பாடசாலையில் இடம்பெற்றது. நிகழ்வில் வளவாளராக சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையைச் சேர்ந்த பொதுச் சுகாதாரப் பரிசோதகர் ஆ.ஜென்சன் றொனால்ட் கலந்துகொண்டு மாணவர்களின் தலைமைத்துவப் பண்புகளை விருத்திசெய்யும் ஆற்றுகையுடன் கூடிய பயிற்சிநெறிகளை வழங்கியிருந்தார். (படம்: சாவகச்சேரி நிருபர்)









இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் ஏற்பாட்டில் இந்துசமய அறநெறிப் பாடசாலை மாணவர்களுக்கான தேசிய ஆக்கத்திறன் போட்டிகள் நேற்றுமுன்திம் (17) புத்தளம் இந்து மத்திய கல்லூரியில் புத்தளம் மாவட்ட செயலக அபிவிருத்தி உத்தியோகத்தர் ர.விமலரஞ்சனி தலைமையில் இடம்பெற்றன. (படம்: உடப்பு செய்தியாளர்)

# இலங்கைத் தமிழர்களுக்கு

(4ஆம்பக்கத் தொடர்ச்சி)

அதன்பின் இந்தத் தீவுகளைப் பராமரித்து வரும் மொரிஷியஸ் அரசு, இந்தத் தீவுகள் தங்களுக்கு சொந்தமானவையென்றும் உரிமை கொண்டாடி வருகிறது. ஐ.நா. நீதிமன்றமும் இந்தப் பிராந்தியத்தில் பிரிட்டன் ஆளுகை செலுத்தி வருவது சட்டவிரோதமென்றும் இந்த நடவடிக்கை விரைவில் முடிவுக்கு வரவேண்டுமெனவும் உத்தரவிட்டிருந்தது.

ஆனால், சாக்கோஸ் தீவுகள் விவகாரத்தில் சர்வதேச அழுத்தத்தை விரும்பாத பிரிட்டன், வெளிப்படையான பேச்சுவார்த்தைக்கு தயாராக இருப்பதாக கடந்த ஆண்டு இறுதிவரை கூறி வந்தது.

### அமெரிக்காவின் ஆளுகை

சில தசாப்தங்களாக ஆப்கானிஸ்தான் மற்றும் ஈராக்கின் மீது குண்டுவீசித் தாக்குதல் நடத்த அமெரிக்க போர் விமானங்கள் டியாகோ கார்சியா தீவில் உள்ள இராணுவத் தளத்தைப் பயன்படுத்தி வருகின்றன. அத்துடன், பயங்கரவாதிகளாக சந்தேகிக்கப்படுபவர்களை அமெரிக்க இராணுவம் விசாரிக்கும் இடமாகவும் இத்தீவு திகழ்கிறது.

டியாகோ கார்சியா தீவு முகாம் முன்பு, கொரோனாவால் பாதிக்கப்பட்ட தங்கள் நாட்டு இராணுவ வீரர்களை தனிமைப்படுத்தும் முகாமாகப் பயன்படுத்தப்பட்டு வந்தது என்று லண்டன் நீதிமன்றத்தில் பிரிட்டன் அரசு தெரிவித்திருந்தது.

தற்போது இந்த முகாம் புலம்பெயர்ந்தவர்களுக்கான முகாமாகப் பயன்படுத்தப்பட்டு வருகிறது. முகாம் பகுதியைச் சுற்றி வேலிகள் அமைக்கப்பட்டுள்ளன. முகாமிற்குள் அடிப்படை மருத்துவ வசதிகள் மற்றும் சிற்றுண்டிச் சாலை (கேன்டீன்) வசதியும் உள்ளது.

### கூண்டு கிளிகள்

ஆனால், " நாங்கள் கூண்டில் அடைபட்ட கிளிகளாய், எவ்வித சுதந்திரமுமின்றி இங்கு வாழ்ந்து வருகிறோம்" -என்கிறார் முகாமில் உள்ள சாந்தி.

ஓராண்டுக்கு முன்பு வரை முகாமில் இருப்போருக்கு அடிப்படைக் கல்வி பயிற்றுவிக்கப்பட்டு வந்தது. ஆனால், அந்த நேரத்தில் எலிகளின் தொல்லை காரணமாக வகுப்புகள் பெரும்பாலும் முகாமுக்கு வெளியே திறந்த வெளியில் தான் நடைபெறும் என்று முகாமில் வசிப்போர் தரப்பு வழக்கறிஞர்கள் கூறுகின்றனர்.

முகாமில் இருந்த புலம்பெயர்ந்தோர்களில் சிலர் தங்களது கோரிக்கையை கைவிட்டு அல்லது நிராகரிக்கப்பட்ட பின்னர் வீடு திரும்பியுள்ளனர். இன்னும் பலர் தஞ்சம் கோரி பிரான்ஸ் நாட்டின் ஆளுகைக்கு உட்பட்ட இந்தியப் பெருங்கடல் தீவான ரீயூனியனுக்கு சென்றுள்ளனர் என்று தீவு முகாமில் இருக்கும் இலங்கைத் தமிழர்கள் தரப்பு வழக்கறிஞர்கள் கூறினர்.

தற்போது மீதமுள்ள 60 இலங்கைத் தமிழர்கள் தங்களின் தலைவிதியை தீர்மானிக்கும் முடிவுக்காக டியாகோ கார்சியா தீவு முகாமில் இன்னமும் காத்திருக்கின்றனர்.

### சர்வதேச சட்டங்கள் மீறப்படுகின்றனவா?

அகதிகளை எவ்வாறு நடத்துவது என்பது தொடர்பான சர்வதேச சட்டங்களில் பிரிட்டன் கையெழுத்திட்டுள்ளது. ஆனாலும், இந்தச் சட்டங்கள் பி.ஐ.ஓ.டி. பிராந்தியத்துக்கு பொருந்தாது. ஏனெனில், இந்தப் பிராந்தியம் அரசியலமைப்பு ரீதியாக வேறுபட்டது மற்றும் பிரிட்டனில் இருந்து தனியானது என்று பிரிட்டன் அரசு கூறிவருகிறது.

பல்வேறு இன்னல்களை அனுபவித்து மனிதாபிமானமற்ற முறையில் நடத்தப்படும் நாட்டிலிருந்து வெளியேறியவர்களை மீண்டும் அதே நாட்டிற்கு திருப்பி அனுப்பக்கூடாது என்ற கருத்தின் அடிப்படையில் டியாகோ கார்சியா தீவு முகாமிலுள்ள இலங்கைத் தமிழர்களை மீண்டும் இலங்கைக்கு திருப்பி அனுப்புவதா அல்லது பாதுகாப்பான மூன்றாவது நாட்டிற்கு அனுப்புவதா என்பதைத் தீர்மானிக்க தனி செயற்றிட்டம் நிறுவப்பட்டுள்ளது.

ஆனால், இந்தச் செயற்றிட்டம் அகதிகளுக்கான சட்டத்திற்கு சவால் விடுவதாக இருப்பதாகக் கூறும் வழக்கறிஞர் டிசா கிரிகோரி, இது அடிப்படையில் நியாயமற்ற செயல் என்றும் விமர்சித்துள்ளார்.

லண்டனில் அவர் பணிபுரியும் லீ டே நிறுவனம், புகலிடம் கோரி, டியாகோ கார்சியா தீவில் தவித்து வருபவர்கள் சார்பாக நீதிமன்றத்தில் சீராய்வு மனுவைத் தாக்கல் செய்துள்ளது.

பாதுகாப்பான மூன்றாவது நாட்டை பிரிட்டன் அரசாங்கம் இன்னும் அடையாளம் காணாததால் முகாமில் இருப்பவர்களின் வாழ்க்கை நரகமாக்கப்பட்டுள்ளது என்று டிசா கிரிகோரி குற்றஞ்சாட்டியுள்ளார்.

இதற்கிடையே, பி.ஐ.ஓ.டி. நிர்வாகம் அதன் சட்டத்துக்கு உட்பட்டும் சர்வதேச சட்ட விதிகளுக்கேற்பவும் தீவு முகாமில் உள்ள புலம்பெயர்ந்தோரின் பாதுகாப்பு கோரிக்கைகளைப் பரிசீலித்து வருகிறது என்று பிரிட்டன் அரசு தெரிவித்துள்ளது.

### ஐ.நா. கவலை

டியாகோ கார்சியாவில் உள்ள முகாமில் நிலவும் மோசமான சுகாதார நிலைமை தொடர்பான அறிக்கைகள் குறித்து ஐக்கிய நாடுகளின் அகதிகள் அமைப்பின் (UKHCR) பிரிட்டன் அலுவலகம் பி.பி.சியிடம் கவலை தெரிவித்துள்ளது.

“பிரிட்டனின் கட்டுப்பாட்டில் உள்ள தீவில் தஞ்சமடைந்துள்ளவர்களின் நலன்களை உறுதி செய்வதற்கான அனைத்து அம்சங்களும் கருத்தில் கொள்ளப்பட வேண்டும். அத்துடன், இவர்களின் பாதுகாப்பை பிரிட்டன் அரசு உறுதி செய்ய வேண்டும்” - என்று மனித உரிமைகள் கண்காணிப்பகத்தின் பிரிட்டன் வழக்கறிஞரும், தகவல் தொடர்பு ஒருங்கிணைப்பாளருமான இமைய்லி மெக்டோனல் அண்மையில் வலியுறுத்தியிருந்தார்.

மருத்துவ சிகிச்சைக்காக ருவாண்டாவுக்கு அனுப்பப்பட்ட 5 புலம்பெயர்ந்தோரில் இருவர் டியாகோ கார்சியா தீவிற்கே மீண்டும் திரும்பினர்.

### பிரிட்டன் அரசின் அதிரடி முடிவு

டியாகோ கார்சியாவில் தஞ்சம் புகுந்துள்ளவர்களின் கோரிக்கைகளைக் கருத்தில் கொள்ளப் போவதில்லை என்று பிரிட்டன் முடிவுசெய்துள்ளதாக வழக்கறிஞர்கள் சிலர் தெரிவித்துள்ளனர்.

இந்தத் தீவில் தஞ்சம் புகுந்த தமிழர்களில் மூன்றுபேர் தற்போது மருத்துவ சிகிச்சைக்காக ருவாண்டாவுக்கு அனுப்பப்பட்டுள்ளனர். தற்கொலை முயற்சி மற்றும் தங்களைத் தாங்களே காயப்படுத்திக்கொண்ட குற்றச்சாட்டுகளின் காரணமாக அவர்கள் டியாகோ கார்சியாவில் இருந்து வெளியேற்றப்பட்டுள்ளனர் என்று பிரிட்டன் விளக்கமளித்துள்ளது.

ருவாண்டாவுக்கு மருத்துவ சிகிச்சைக்கு அனுப்பப்பட்டுள்ள மூன்று பேரில் ஒருவருக்கு கடந்த மாதம் பி.ஐ.ஓ.டி. நிர்வாகம் கடிதமொன்றை அனுப்பியுள்ளது. பி.பி.சியின் பார்வைக்கு கிடைத்துள்ள அந்தக் கடிதத்தில், “ருவாண்டாவில் மருத்துவத்துக்கான செலவுடன் அங்கு தனியார் விடுதிகளில் தங்குவதற்கான செலவையும் பி.ஐ.ஓ.டி. நிர்வாகம் ஏற்கும்” என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

“இந்த யோசனை உங்களுக்குதிருப்தி அளிக்காத பட்சத்தில் நீங்கள் மீண்டும் டியாகோ கார்சியாவுக்கு திரும்புவதற்கு ஏற்பாடு செய்யப்படும். தற்போதைய சூழலில் உங்களை வேறு நாட்டிற்கு அனுப்ப வழிகள் எதுவும் இல்லை” என்று அந்தக் கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேபோன்று பாதுகாப்பான மூன்றாவது நாட்டுக்கு தங்களை அனுப்பும்படி கோரியிருந்த இத்தீவில் தஞ்சமடைந்துள்ள நான்கு பேரின் கோரிக்கை ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. இது தொடர்பாக கோரிக்கையாளர்களில் ஒருவருக்கு இரண்டு மாதங்களுக்கு முன் பி.ஐ.ஓ.டி. நிர்வாகம் அனுப்பியிருந்த கடிதம் பி.பி.சியின் கைக்கு கிடைத்துள்ளது. அதில், “உங்களின் இந்தக் கோரிக்கையை நிறைவேற்றுவதற்குத் தேவையான அனைத்து முயற்சிகளும் மேற்கொள்ளப்படும்” - என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

### நீடிக்கும் இழுபறி

இந்த விவகாரம் தொடர்பாக பி.பி.சிக்கு அண்மையில் கிடைத்துள்ள அறிக்கையில் “டியாகோ கார்சியாவில் தஞ்சமடைந்துள்ள புலம்பெயர்ந்தோரின் தற்போதைய நிலைமையை மாற்ற நீண்ட காலத் தீர்வு காணும் நோக்கில் பி.ஐ.ஓ.டி. நிர்வாகத்துடன் பிரிட்டன் அரசு அயராது உழைத்து வருகிறது” என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

ஆனால்,டியாகோ கார்சியா தீவில் தஞ்சமடைந்துள்ள இலங்கைத் தமிழர்களை பாதுகாப்பான மூன்றாவது நாட்டுக்கு அனுப்புவதற்கான தெளிவான காலக்கெடு வரையறுக்கப்படாமலுள்ளதும் இந்த விவகாரத்தில் உள்ள சட்டச்சிக்கலும் இவர்களின் நிலையை தொடர்ந்து இழுபறியாகவே வைத்திருக்கக்கூடும்.

“20 மாதங்கள் நீண்ட காத்திருப்புக்கு பிறகு நாங்கள் அனைவரும் நம்பிக்கை இழந்துவிட்டோம்” என்று விரக்தியுடன் கூறுகிறார் டியாகோ கார்சியா தீவில் தஞ்சமடைந்துள்ள இலங்கைத் தமிழர் ஒருவர்.

நன்றி - பி.பி.சி

ජාතික ලොතරැයි මණ්ඩලය
தேசிய லொத்தர் சபை
National Lotteries Board
வெள்ளிக்கிழமை 2023.06.16
உத்தியோகபூர்வ முடிவுகள்
www.nlb.lk
NLB

| | | |
|---|---|---|
| மஹஜன சம்பத | சீட்டிழுப்பு இலக்கம் 5147 | அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ.14,891,680.00 |
| ஆங்கில எழுத்து C | வெற்றி இலக்கங்கள் | 7 7 5 1 4 5 |
| கொவிசெத | சீட்டிழுப்பு இலக்கம் 3389 | அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ.63,437,637.60 |
| ஆங்கில எழுத்து P | வெற்றி இலக்கங்கள் | 06 28 43 74 |
| ஜாதிக சம்பத | சீட்டிழுப்பு இலக்கம் 1602 | அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ.12,534,249.52 |
| வெற்றி இலக்கினம் | வெற்றி இலக்கங்கள் | 9 8 9 4 4 1 |
| தன நிதானய | சீட்டிழுப்பு இலக்கம் 1177 | அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ.95,107,543.20 |
| ஆங்கில எழுத்து O | வெற்றி இலக்கங்கள் | 07 21 22 59 |
| ராசி சுப பலன் Handahana | சீட்டிழுப்பு இலக்கம் 456 | அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ.2,670,216.60 |
| வெற்றி இலக்கினம் கடகம் | வெற்றி இலக்கங்கள் | 08 15 18 59 (விசேட இலக்கினம் கடகம்) |
| Mega Power | சீட்டிழுப்பு இலக்கம் 1495 | அடுத்த மெகா சுப்பர் பரிசு ரூ.330,196,810.00 |
| ஆங்கில எழுத்து O, சுப்பர் இலக்கம் 02 | வெற்றி இலக்கங்கள் | 17 30 31 32 (அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ.10,000,000.00; அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ.10,000,000.00) |

ජාතික ලොතරැයි මණ්ඩලය
தேசிய லொத்தர் சபை
National Lotteries Board
சனிக்கிழமை 2023.06.17
உத்தியோகபூர்வ முடிவுகள்
www.nlb.lk
NLB

| | | |
|---|---|---|
| மஹஜன சம்பத | சீட்டிழுப்பு இலக்கம் 5148 | அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ.15,947,870.00 |
| ஆங்கில எழுத்து O | வெற்றி இலக்கங்கள் | 3 0 9 8 7 3 |
| கொவிசெத | சீட்டிழுப்பு இலக்கம் 3390 | அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ.63,882,794.40 |
| ஆங்கில எழுத்து H | வெற்றி இலக்கங்கள் | 01 06 20 65 |
| ஜாதிக சம்பத | சீட்டிழுப்பு இலக்கம் 1603 | அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ.12,597,187.52 |
| வெற்றி இலக்கினம் | வெற்றி இலக்கங்கள் | 0 4 1 6 5 9 |
| தன நிதானய | சீட்டிழுப்பு இலக்கம் 1178 | அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ.95,280,077.60 |
| ஆங்கில எழுத்து H | வெற்றி இலக்கங்கள் | 07 39 50 68 |
| ராசி சுப பலன் Handahana | சீட்டிழுப்பு இலக்கம் 457 | அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ.2,697,161.20 |
| வெற்றி இலக்கினம் கடகம் | வெற்றி இலக்கங்கள் | 25 34 37 52 (விசேட இலக்கினம் கடகம்) |
| Mega Power | சீட்டிழுப்பு இலக்கம் 1496 | அடுத்த மெகா சுப்பர் பரிசு ரூ.330,502,026.00 |
| ஆங்கில எழுத்து Q, சுப்பர் இலக்கம் 18 | வெற்றி இலக்கங்கள் | 15 44 50 55 (அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ.10,000,000.00; அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ.10,000,000.00) |

# வலி. வடக்கு காணி அளவீடு தொடர்பில் மக்கள் பரபரப்படையத் தேவையில்லை

## அமைச்சர் டக்ளஸ் தெரிவிப்பு

வலி. வடக்கில் உள்ள தனியார் காணிகளை சட்ட ரீதியாக மக்களிடம் கையளிக்கும் நோக்கில் மேற்கொள்ளப்படவுள்ள காணி அளவீடுகள் தொடர்பில் மக்கள் எதுவித பரபரப்பும் அடையத்தேவையில்லை என்று அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

கடந்த வெள்ளிக்கிழமை (16.06.2023) நடைபெற்ற கோப்பாய் ஆசிரியர் கலாசாலையின் நூற்றாண்டு தொடக்க விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு நூற்றாண்டுச் சின்னத்தை திறந்துவைத்து உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும், "2013 ஆம் ஆண்டு இராணுவத்தினரின் பயன்பாட்டிற்காக அரசுடைமையாக்கும் நோக்கில் வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்ட சுமார் 6,300 ஏக்கர் காணிகளில் கணிசமானவை தற்போது விடுவிக்கப்பட்டு காணி உரிமையாளர்களிடம் கையளிக்கப்பட்டுள்ளன.

எனினும், குறித்த காணிகள் சட்ட ரீதியாக அரச காணிகளாகவே இப்போதும் காணப்படுகின்றமையால், 2013 ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட சட்ட வர்த்தமானியை மீளப் பெறுகின்ற வகையில் புதிய வர்த்தமானி வெளியிட வேண்டியிருக்கின்றது.

இதுதொடர்பாக அண்மையில் ஜனாதிபதி செயலகத்தில் விரிவாகக் கலந்துரையாடப்பட்ட நிலையில், 2013 வர்த்தமானியை மீளப்பெறுவதற்கும், தற்போதும் விடுவிக்கப்படாமல் இருக்கின்ற காணிகளில் முடிந்தளவு காணிகளை விடு விப்பதற்கும் காணி அளவீடுகளை மேற்கொள்ளத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. எனவே, காணி அளவீ டுகள் மேற்கொள்ளப்படும்போது மக்கள் பரபரப்படையத் தேவையில்லை.

அதேபோன்று, போதைப் பொருள் பாவனை மற்றும் சமூகச் சீர்கேடுகள் எங்களுடைய சமூகத்தில் அச்சுறுத்தும் விவகாரங்களாக மாறியிருக்கின்றன. இதிலிருந்து எமது சமூகத்தைப் பாதுகாக்கவேண்டிய பாரிய சமூகக் கடமை - பொறுப்பு எங்கள் எல்லோருக்கும் இருக்கின்றது.

இதுதொடர்பான விசேட கலந்துரையாடல் யாழ்ப்பாணம் மாவட்ட செயலகத்தில் நேற்று இடம்பெற்றிருந்தது. குறித்த கலந்துரையாடலில் எமது சமூகத்தில் வாழ்ந்துகொண்டிருக்கின்ற பல்வேறு தரப்பினரும் கலந்துகொண்டு தங்களின் கருத்துகளை வெளியிட்டிருந்தனர். அவ்வாறு கருத்து வெளியிட்டவர்களில் பெரும்பாலானவர்கள் எமது பிரதேசத்தில் புனர்வாழ்வு மையம் ஒன்றின் அவசியத்தை வலியுறுத்யிருந்தனர்.

என்னுடைய நிலைப்பாடும் அதுவாகவே இருக்கின்றது. இந்நிலையில், குறித்த விடயம் தொடர்பாக ஜனாதிபதியுடன் கலந்துரையாடி உரிய நடவடிக்கை மேற்கொள்ள எதிர்பார்த்துள்ளேன்.

இங்கு கூடியிருக்கின்ற ஆசிரிய மாணவர்களுக்கு ஒரு கோரிக்கையை முன்வைக்க விரும்புகின்றேன். அதாவது, நீங்கள் எல்லோரும் கற்றல் - கற்பித்தல் என்பதற்கப்பால் எமது சமூகத்தை ஆரோக்கியமாக முன்கொண்டு செல்வதற்கான விழிப்புணர்வு மற்றும் தெளிவூட்டல் பயிற்சிகளிலும் ஈடுபட வேண்டும் என்று தெரிவித்தார்.










# விடைத்தாள் திருத்தும் பணி தாமதமடையலாம்







(யாழ்.நிருபர்)

யாழ்ப்பாண மாவட்டத்தில் சிறுவர் பாதுகாப்பு தொடர்பாக மதகுருமார்களுக்கான விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டம் மாவட்ட அரசாங்க அதிபர் அம்பலவாணர் சிவபாலசுந்தரனின் தலைமையில்(15) மாவட்ட செயலக கேட்டோர் கூடத்தில் நடைபெற்றது.

இதில், தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையின் நோக்கத்தைத் தெளிவுபடுத்தல், சிறுவர் துஷ்பிரயோகம் மற்றும் அதனுடன் தொடர்புடைய சகல விதமான துஷ்பிரயோகத்தில் இருந்தும் பிள்ளைகளைப் பாதுகாத்தல், மதநிலையங்களில் சிறுவர்களின் பாதுகாப்பிற்காக மேற்கொள்ளக்கூடிய நடவடிக்கைகள் தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டது. இக் கலந்துரையாடலில் உதவி மாவட்ட செயலாளர் எஸ்.சி.என். கமலராஜன், ஆர்.ராஜன் (வட மாகாண சிறுவர் நன்னடத்தை திணைக்களம்) மற்றும் மாவட்ட உள சமூக உத்தியோகத்தர், மும்மதகுருமார்கள் உள்ளிட்டோர் கலந்துகொண்டிருந்தார்கள்.

# மன்னார் அச்சங்குளத்தில் இளம் குடும்பஸ்தர் வெட்டிக் கொலை!

(மன்னார் நகர் நிருபர்)



மன்னார்- நானாட்டான் பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள அச்சங்குளம் கிராமத்தில் சனிக்கிழமை (17) காலை இடம்பெற்ற தாக்குதல் சம்பவத்தில் இளம் குடும்பஸ்தரொருவர் உயிரிழந்துள்ள நிலையில் குறித்த கொலைக்கான காரணமும் வெளியாகியுள்ளது.

தாக்குதல் சம்பவத்தின்போது உயிரிழந்த 25 வயதுடைய இளம் குடும்பஸ்தரின் 23 வயதுடைய சகோதரர் ஒருவர் அச்சங்குளம் கிராமத்தில் யுவதி ஒருவரைக் காதலித்து வந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

சனிக்கிழமை காலை யுவதியின் வீட்டுக்குச் சென்ற குறித்த இளைஞனை அந்த யுவதியின் உறவினர்கள் கடுமையாகத் தாக்கியுள்ளனர்.

இதன்போது காயமடைந்த குறித்த இளைஞன் மன்னார் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

தனது சகோதரர் தாக்கப்பட்ட விடயம் குறித்து அறிந்துகொண்ட 25 வயதுடைய இளம் குடும்பஸ்தர் குறித்த யுவதியின் வீட்டுக்குச் சென்றுள்ளார்.

இதன்போது குறித்த யுவதியின் உறவினர்களுக்கும்,தாக்குதலுக்குள்ளான இளைஞனின் சகோதரனுக்குமிடையில் ஏற்பட்ட வாய்த்தர்க்கம் முற்றி பின்னர் அது கை கலப்பாக மாறியது.

இதன்போது குறித்த இளம் குடும்பஸ்தர் மீது கூரிய ஆயுதத்தினால் தலையில் தாக்கியுள்ளனர்.

இதன்போது படுகாயமடைந்த குடும்பஸ்தர் நானாட்டான் பிரதேச வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் உயிரிழந்துள்ளார்.

மரணித்தவர் அச்சங்குளம் கிராமத்தில் வசிக்கும் 25 வயதுடைய ஒரு குழந்தையின் தந்தை எனத் தெரியவருகிறது.

உயிரிழந்தவரின் சடலம் நானாட்டான் பிரதேச வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது. கொலை தொடர்பில் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளதாகப் பொலிஸார் குறிப்பிட்டனர்.

சம்பவ இடத்திற்கு விரைந்த முருங்கன் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# யாழில் இரத்ததானம்







யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கலைப்பீடத்தைச் சேர்ந்த பொருளியல் துறையின் இளம் பொருளியலாளர் மன்றத்தினால் ஜூன் 14 ஆம் திகதி உலகக் குருதிக்கொடைத் தினத்தையொட்டி குருதிக்கொடை நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

பெரும் பொருளாளர் டெல்சியா கிறிஸ்டியன் மற்றும் துறைத் தலைவர் கலாநிதி க.கருணாநிதி ஆகியோரின் வழிகாட்டலில் யாழ். போதனா வைத்தியசாலையைச் சேர்ந்த வைத்தியர்கள் மேற்பார்வையில் நடந்தேறிய இந்நிகழ்வில் நூற்றுக்கும் மேற்பட்ட மாணவர்கள் கலந்துகொண்டார்கள்.

அனைத்துப்பீடங்களையும் சேர்ந்த மாணவ, மாணவியர் இன, மத, மொழி பேதமின்றிக் கலந்துகொண்டமையும் அரியவகைக் குருதியினங்களைப் பெற்றுக்கொள்ளக் கூடியதாக இருந்தமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.

# ஆபத்தை எதிர்நோக்கியுள்ள நுவரெலியா தபால் நிலையம்






(செ,திவாகரன்)

இலங்கையின் பழமையான கட்டடங்களில் ஒன்றான நுவரெலியா தபால் நிலையம் அழிவின் விளிம்பிலுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அதிகளவில் சுற்றுலாப் பயணிகளைக் கவர்ந்த இடம் நுவரெலியா. இங்கு ஆங்கிலேயர்களின் நுட்பத்தின்படி சிவப்பு செங்கல் கொண்டு நுவரெலியா பிரதான நகரின் மையத்தில் நுவரெலியா பிரதான தபால் நிலையம் அமைக்கப்பட்டுள்ளது. இது இலங்கையின் பழமையான கட்டடங்களில் ஒன்று.

விடுமுறை நாட்களில் அதிகமான சுற்றுலாப் பயணிகள் நுவரெலியா நகருக்குப் படையெடுத்து வரும் நிலையில், குறித்த தபால் நிலையத்தை சுற்றிப்பார்க்கவும் தவறுவதில்லை.

இந்நிலையில், அழகிய இயற்கை சுற்றுச்சூழலுக்கு நடுவில் அமைந்துள்ள இந்தப் பிரதான தபால் நிலையம் அழிவை எதிர்நோக்கியுள்ளமை அனைவரையும் கவலையடையச் செய்துள்ளது.

விலைமதிப்பற்ற வளமாகக் கருதப்பட்ட நுவரெலியா தபால் நிலையத்தை இலங்கையின் முதன்மை சுற்றுலா ஊக்கு விப்பு நிறுவனமான 'ஜெட்வின்' நிறுவனத்திடம் ஒப்படைக்க யோசனைகள் முன்வைக்கப்பட் டுள்ளன.

இதற்கு பலரும் எதிர்ப்புத் தெரிவித்துள்ளநிலையில், பிரதானமாக 'நுவரெலிய மக்கள் குரல்' எனும் தன்னார்வத் தொண்டு நிறுவனம் பல்வேறு வழிகளில் தமது எதிர்ப்பைத் தெரிவித்துள்ளது.

அத்துடன், தபால் நிலைய ஊழியர்கள் பணிப் பகிஷ்கரிப்பிலும் ஈடுபட்டமை குறிப்பிடத்தக்கது .

மீண்டும் இப் பழமையான கட்டடத்தை தன்வசமாக்குவதற்கு முயற்சிகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

# பசறை - மீதும்பிட்டிய பகுதியில் பொதுச் சுகாதார பரிசோதகர் மீது தாக்குதல் - சந்தேக நபர் கைது

(பதுளை நிருபர்)

மீதும்பிட்டிய பகுதியிலுள்ள வர்த்தக நிலையங்களை பசறை பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் விசேட சோதனைக்குட்படுத்தியிருந்த வேளை, பொதுச் சுகாதாரப் பரிசோதக உத்தியோகத்தர் ஒருவர் மீது தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது. நேற்றுமுன்தினம் (17) இடம்பெற்ற இச்சம்பவத்தில் வர்த்தக நிலையம் ஒன்றின் உரிமையாளரின் மகனை பசறைப் பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.

சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது:-

மீதும்பிட்டிய பகுதியிலுள்ள வர்த்தக நிலையங்களில் சோதனை நடவடிக்கைகளை நிறைவுசெய்த சந்தர்ப்பத்தில் குறித்த வர்த்தக நிலையத்திலுள்ள களஞ்சிய அறையில் மக்கள் பாவனைக்குதவாத உணவுப் பொருட்கள் களஞ்சியப்படுத்தப்பட்டிருப்பதாகவும் அதனை பரிசோதனைக்குட்படுத்துமாறும் சுகாதார அதிகாரிகளுக்கு இரகசியத் தகவலொன்று கிடைக்கப்பெற்றுள்ளது.

சோதனைக்காக குறித்த களஞ்சிய அறையை திறக்குமாறு சுகாதார அதிகாரிகள் வேண்டுகோள் விடுத்த நிலையில் அதற்கு மறுப்புத் தெரிவித்த வர்த்தக நிலைய உரிமையாளரின் மகன் திடீரென பொதுச் சுகாதார அதிகாரியொருவர் மீது தாக்குதல் மேற்கொண்டுள்ளார்.

தாக்குதலால் பாதிக்கப்பட்ட சுகாதார அதிகாரி பசறை ஆதார வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பாக பசறை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டதை த்தொடர்ந்து சந்தேக நபர் உடனடியாக கைதுசெய்யப்பட்டதையடுத்து அவர் நேற்று(18) பசறை நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்ப்படுத்தப்பட்டார். குறித்த தாக்குதல் சம்பவம் தொடர்பாக தமது கடுமையான எதிர்ப்பை வெளியிட்டுள்ள பொதுச் சுகாதாரப் பரிசோதக சங்கத்தினர் சந்தேக நபருக்கு எதிராக சட்டத்தைக் கடுமையாக நடைமுறைப்படுத்துமாறும் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# நுவரெலியாவில் மண்மேடு சரிந்து வீழ்ந்து இருவர் பலி!

(ஆ.ரமேஸ், செ.திவாகரன்)



நுவரெலியா பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பழைய கச்சேரி அமைந்துள்ள லெமனன் வீதி பகுதியில் 25 அடி உயர மண்மேடு சரிந்து வீழ்ந்ததில் மண்ணுக்குள் புதையுண்டு இருவர் உயிரிழந்துள்ளதாக நுவரெலியா பொலிஸார் தெரிவித்தனர்.

விபத்தில் மரான்கொட மஸ்தெக எம்பிலிப்பிட்டிய பிரதேசத்தைச் சேர்ந்த பி.எம்.சி.ருக்ஷானா (வயது 21) மற்றும் கே.நிலந்த (வயது 42) ஆகிய இருவரே பரிதாபகரமாக உயிரிழந்துள்ளதாக அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது:-

மேற்குறித்த பகுதியில் கட்டடப் பணிக்கான தடுப்புச்சுவர் கட்டும் பணியில் இரண்டு தொழிலாளர்கள் ஈடுபட்டிருந்தனர். அப்போது திடீரென அவர்கள் மீது மண்திட்டு இடிந்து வீழ்ந்துள்ளது. கடந்த வெள்ளிக்கிழமை(16) இடம்பெற்ற இவ்விபத்தில் காலி, ஹில்பிட்டிய பகுதியைச் சேர்ந்த பீ . எம். சீ. ருக்ஷான் (வயது 23), ஏ.கே.நிலந்த (வயது 43) ஆகியோர் உயிரிழந்துள்ளனர்.

அவர்களை மீட்கும் பணியில் ஏனைய தொழிலாளர்களும்,அப்பகுதிவாசிகளும் ஈடுப்பட்டிருந்த நிலையில், சுமார் ஒன்றரை மணிநேரத்துக்குப் பின்னர் மண்ணில் புதையுண்ட இருவரும் சடலங்களாக மீட்கப்பட்டுள்ளனர்.

பிரேத பரிசோதனைக்காக சடலங்கள் நுவரெலியா மாவட்ட பொது வைத்தியசாலைக்கு கொண்டுசெல்லப்பட்டுள்ளது. பிரேத பரிசோதனையின் பின்னர் சடலங்கள் காலி, எல்பிட்டிய பகுதிக்கு கொண்டுசெல்லப்படும் என நுவரெலியா பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

# இரும்புக் கம்பம் தலையில் வீழ்ந்து சிறுமி படுகாயம்





(கண்டி நிருபர்)

குருணாகல் பகுதியில் இரும்பு கம்பமொன்று சரிந்து வீழ்ந்ததில் சிறுமியொருவர் படுகாயமடைந்துள்ளார்.

குருணாகல், வாரியபொல பிரதேசத்தில் லொறியொன்று குறிப்பிட்ட உயரத்துக்கும் மேலாக அதிகமான பொருட்களை ஏற்றிக் கொண்டு சென்றவேளை குறித்த பகுதியில் கட்டடம் ஒன்றுக்கான மின் இணைப்பு வழங்கப்பட்டிருந்த மின்சார வயரில் லொறியின் மேற்பகுதி மோதியுள்ளது. இதனால் கட்டடத்தில் பொருத்தப்பட்ட மின் இணைப்புக்கான இரும்புக் கம்பம் கழன்று இப்பாதையூடாக மேலதிக வகுப்புக்குச் சென்றுகொண்டிருந்த 13 வயது சிறுமி ஒருவரின் தலையில் வீழ்ந்துள்ளது.

சம்பவத்தில் படுகாயமடைந்த சிறுமி வாரியபொல மாவட்ட வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட நிலையில் மேலதிக சிகிச்சைகளுக்காக குருணாகல் போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளார்.

குருணாகல் பிரதேசத்திலுள்ள கோனகம, அலுபொத்தகம என்ற இடத்தைச் சேர்ந்த சிறுமியே படுகாயமடைந்துள்ளார். சம்பவம் தொடர்பில் குருநாகல் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.



கோவிலூர் செல்வராஜனின் பொன்விழாவும் இலக்கிய தென்றல் பொன்விழா மலர் அறிமுகம், நல்லது நடக்கட்டும் சிறுகதைத் தொகுப்பு ஆகிய இரண்டு நூல்களின் வெளியீட்டு விழாவும் சதீஷ்குமார் சிவலிங்கம் தலைமையில் கொழும்பு தமிழ்ச் சங்கத்தில் (17) சனிக்கிழமை மாலை இடம் பெற்றது. இந்நிகழ்வில் பிரதம அதிதியாகக் கலந்துகொண்ட இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் ஆலோசகர் புரவலர் ஹாஷிம் உமர் இரு நூல்களின் முதல் பிரதிகளை நூலாசிரியரிடமிருந்து பெற்றுக்கொண்டார். நிகழ்வில் தே.செந்தில் வேலவர், அறிவிப்பாளர்களான பீ.எச். அப்துல் ஹமீத்,நாகபூஷணி, ஞானம் சஞ்சிகையின் ஆசிரியர் ஞானசேகரன் உட்படப் பலர் கலந்துகொண்டனர்.

# மூவின மக்களும் விரும்பி எதிர்பார்க்கும் தலைவராக ஜனாதிபதி விளங்குகின்றார்

## முன்னாள் அமைச்சர் அகிலவிராஜ் காரியவசம் புகழாரம்



(இக்பால் அலி)

தற்போதைய அரசியல் சூழ்நிலையில் சிங்கள, தமிழ் மற்றும் முஸ்லிம் மக்கள் விரும்பி எதிர்பார்க்கின்ற தலைவராக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க காணப்படுகின்றார்.இதில் இருவேறு கருத்துகளுக்கிடமில்லை என்று ஐக்கிய தேசியக் கட்சியின் உப தலைவரும் குருநாகல் மாவட்ட அமைப்பாளரும் முன்னாள் அமைச்சருமான அகிலவிராஜ் காரியவசம் புகழ்ந்து கூறினார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் மாவத்தகம தேர்தல் தொகுதிக்கான பொதுக் கூட்டம் மாவத்தகம சாமோதய மண்டபத்தில் தொகுதி அமைப்பாளர் ரணில் எதிரிமான தலைமையில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் பிரதம அதிதியாகக் கலந்துகொண்ட அவர் தொடர்ந்தும் உரையாற்றுகையில்,

ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன கட்சியினர் ஜனாதிபதியின் தலைமைத்துவத்தை மனப்பூர்வமாக ஏற்றுக்கொண்டுள்ளனர்.

1970,1994,2004 ஆம் ஆண்டு காலப் பகுதிகளில் இடம்பெற்ற தேர்தல்களில் ஐக்கிய தேசியக் கட்சி தோல்வியடைந்தது. இந்நிலையில், இறுதியாக இடம்பெற்ற பொதுத் தேர்தலில் படுதோல்வியடைந்தது. அத்தேர்தலில் போனஸ் ஆசனம் ஒன்று கிடைத்தது. இவ்வாறான நிலையில், ஐக்கிய தேசியக் கட்சி மீண்டும் மக்களிடையே செல்வாக்குப்பெற்று வருகிறது.

கல்வி, சுகாதாரம், பொருளாதாரம் போன்றவை யூடாக எழுச்சியுடன் வாழ்வதற்கான ஓர் அடித்தளத்தை இடுவதற்கு மக்கள் தயாராக வேண்டும். பல இலட்சக்கணக்கான ஆதரவாளர்களைக் கொண்ட கட்சிதான் ஐக்கிய தேசியக் கட்சி. நாட்டின் ஜனாதிபதியின் முன்மாதிரியான நடவடிக்கைகளைக் கண்டு பொதுஜன பெரமுன கட்சியினர் ஒவ்வொரு தொகுதிகளிலும் எமது கட்சியுடன் இணைந்து வருகின்றனர்.

2015 களில் ஆட்சிக்கு வந்தபோது எரிபொருட்களின் விலைகளைக் குறைத்தோம்? மின்கட்டணத்தைக் குறைத்தோம், அரச உத்தியோகஸ்தர்களின் சம்பளத்தை அதிகரித்தோம், நான் கல்வி அமைச்சராக இருந்தபோது 'அருகிலுள்ள பாடசாலை சிறந்த பாடசாலை' வேலைத்திட்டத்தின் கீழ் கிடுகு ஓலையினால் வேயப்பட்டிருந்த பாடசாலைகள், உடைந்து விழும் நிலையிலிருந்த - பழைமை வாய்ந்த ஆயிரக்கணக்கான பாடசாலைகள் அனைத்துக்கும் கட்டடங்களை வழங்கினோம், ஆசிரியர் நியமனம், அதிபர் நியமனம், கல்வி நிர்வாக சேவையாளர்கள், விளையாட்டுத் துறை பயிற்றுவிப்பாளர்கள் போன்ற பாரியளவிலான வேலைகள் செய்யப்பட்டன் மடிக் கணனிகள் வழங்கவிருந்தோம். அவற்றை வழங்க விடவில்லை. அவற்றைப் பிள்ளைகளுக்கு வழங்கியிருந்தால் கொரோனா காலத்தில் அவையெல்லாம் எவ்வளவோ பயனுள்ளதாக அமைந்திருக்கும்.

அரசியல், சமயத் தலைவர்கள் ஊடகங்களின் வாயிலாக எங்களை தோல்வியடையச் செய்தார்கள். நாடுமிகவும் இக்கட்டான சூழ்நிலைக்குள் இருந்த நேரத்தில் நாட்டைப் பொறுப்பேற்க எவருமே முன்வராத நிலையில் ரணில் விக்கிரமசிங்க நாட்டைப் பொறுப்பேற்று குறுகிய காலத்துக்குள் நாட்டை மீளவும் கட்டியெழுப்பினார். எரிபொருள், எரிவாயு விலை குறைக்கப்பட்டுள்ளன. இன்னும் ஓரிரு மாதங்களில் மின்சாரக் கட்டணமும் குறைக்கப்படலாம். வட்டி வீதம் குறைக்கப் படும். இப்படி படிப்படியாக நாடு சீர்செய்யப் படுகிறது. இதற்கு மக்கள் அனைவரும் ஆதரவளிக்க வேண்டும்.என்றார்

இந்நிகழ்வில் தொடங்கஸ்லந்த தேர்தல் தொகுதியின் அமைப்பாளர் ராஜபுத்திர வீரசிங்க உள்ளிட்ட பலர் உரையாற்றினர்.

# வவுனியாவில் கறுவா செய்கை ஊக்குவிப்பு



வவுனியாவில் கறுவாச் செய்கை ஊக்குவிக்கப் படவுள்ளது.

இது தொடர்பாக பயனாளிகளுக்கு விளக்கமளிக்கும் நிகழ்வு நேற்று இடம்பெற்றது.

புலம்பெயர் வாழ் தமிழரான சுந்தரமூர்த்தி புவனகுமாரினால் வட. பகுதியில் கறுவா செய்கை ஊக்குவிப்பு செயற்றிட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

இதன் ஓர் அங்கமாக வவுனியா மாவட்டத்தில் கறுவா செய்கையை ஊக்குவிப்பதற்காக அது தொடர்பில் பயிற்சி வழங்கப்படவுள்ளது.

இந்நிலையில், நேற்று வவுனியா வைரவபுளியங் குளத்தில் கறுவா செய்கை குறித்தும் அதன் பலன்கள் தொடர்பிலும்செய்கையாளர்களுக்கு விரிவான விளக்கமளிக்கப்பட்டது.

கறுவா பயிர்ச்செய்கையில் ஈடுபட ஆர்வமுள்ளவர்கள் சுந்தரம் சுரேஷ்குமாருடன் 0770743133 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளுமாறு வேண்டப்படுகின்றனர்.

# சிறந்த சமூக செயற்பாட்டாளராக விளங்கியவர் அஷ்ரப் அஸீஸ்

## முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ஹக்கீம் அனுதாபம்

மலையகத் தோட்டத் தொழிலாளர்களின் விடிவுக்காக தன் இறுதி மூச்சுவரை குரல் கொடுத்த நாடறிந்த பிரபல தொழிற்சங்கவாதி, ஜனநாயகத் தொழிலாளர் காங்கிரஸின் ஸ்தாபகர் மர்ஹூம் ஏ. அஸீஸின் புதல்வர் அஷ்ரப் அஸீஸின் மறைவு ஆழ்ந்த கவலையளிப்பதாக முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான ரவூப் ஹக்கீம் தெரிவித்துள்ளார்.

அஷ்ரப் அஸீஸின் மறைவு குறித்து அவர் விடுத்துள்ள அனுதாபச் செய்தியிலேயே மேற்கண்டவாறு தெரிவித்திருந்தார்.

அச்செய்தியில் மேலும் தெரிவிக்கப் பட்டுள்ளதாவது:-

தனது அன்புத் தந்தையின் அடிச்சுவட்டைப் பின்பற்றி - தோட்டத் தொழிலாளர்களின் நலனை முன்னிலைப்படுத்தி அதில் அதிக ஈடுபாடு கொண்டிருந்த அவர், அஸீஸ் மன்றத்தின் ஊடாகவும் அளப்பரிய பணிகளை ஆற்றியிருக்கிறார். சிறந்த சமூக செயற்பாட்டாளராக விளங்கிய அஷ்ரப் அஸீஸ், தீவிர அரசியலில் ஈடுபடுவதிலிருந்து ஒதுங்கியிருந்தார்.

எப்பொழுதுமே ஆரவாரம் அற்றவராக - அமைதியான சுபாவத்தைக் கொண்டிருந்த அவர், மறைந்த தந்தையின் வாரிசாக மதிக்கப்பட்டு வந்தார். பல்வேறு பொது நிகழ்வுகளிலும் அவரைக் காணக்கூடியதாக இருந்தது.

அன்னாரது பிரிவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு தனிப்பட்ட முறையிலும் முஸ்லிம் காங்கிரஸ் சார்பிலும் ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன். அத்துடன், எல்லாம் வல்ல அல்லாஹ்விடம் அன்னாரின் ஆன்மீக ஈடேற்றத்துக்கும் சிறப்பான மறுமை வாழ்வுக்கும் பிரார்த்திக்கின்றேன என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# மர்ஹூம் நளீம் ஹாஜியாரின் பணிகள் மகத்தானவை

## மேல்மாகாண சபை முன்னாள் உறுப்பினர் அம்ஜாத்









(பேருவளை நிருபர்)

முஸ்லிம்களுக்காக பாரிய இஸ்லாமிய கலாபீடமொன்றை பேருவளையில் ஸ்தாபித்து சமூகத்தின் கல்வி மறுமலர்ச்சிக்காக மர்ஹும் எம்.ஐ.எம். நளீம் ஹாஜியார் ஆற்றிய பணிகள் அளப்பரியவை என்று மேல் மாகான சபை முன்னாள் உறுப்பினர் எம்.எம்.எம். அம்ஜாத் கூறினார்.

தர்கா நகர் இஸ்லாமிய நலன்புரிச் சங்கத்தின் ஏற்பாட்டில் தர்கா நகர் முஸ்லிம் மகளிர் தேசிய பாடசாலையில் இடம்பெற்ற கல்விச் சாதனையாளர்களை கௌரவிக்கும் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

சங்கத்தின் தலைவர் ஏ.பீ.எம் ஸுஹைர் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில், ரூமி ஹாஷிம் பவுண்டேஷன் ஸ்தாபகர் கலாநிதி ரூமி ஹாஷிம், அதன் செயலாளர் ஜெஸுக் அஹம்மட், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் எம்.எஸ்.எம். அஸ்லம், பேருவளை பிரதேச சபை முன்னாள் தலைவர் ஏ.ஆர்.எம். பதியுதீன் உட்படப் பலர் கலந்து கொண்டனர்.

தர்கா நகர் அல் - ஹம்றா மகா வித்தியாலயம், தர்கா நகர் ஸாஹிரா ஆரம்பப் பாடசாலை, அழுத்கம முஸ்லிம் மகளிர் தேசிய பாடசாலை ஆகியவற்றிலிருந்து 2019, 2020, 2021, 2022 ஆகிய வருடங்களில் தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சைக்குத் தோற்றி சித்தியடைந்த 253 மாணவ - மாணவிகள் இதன்போது கௌரவிக்கப்பட்டனர்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில், இந்நாட்டு முஸ்லிம் அரசியல் தலைவர்களாகத் திகழ்ந்த மர்ஹூம்களான கலாநிதி டீ.பீ ஜாயா, கலாநிதி பதியுதீன் மஹ்மூத் உட்பட ஏனைய தலைவர்கள் முஸ்லிம்களின் கல்வி மேம்பாட்டுக்காகப் அளவிலா சேவைகளைப் புரிந்தார்கள்.

அதே போன்று கொடை வள்ளல் மர்ஹூம் நளீம் ஹாஜியார் சமூகத்தின் கல்வி விமோசனத்துக்காக தனது சொந்த நிதியை வழங்கினார்.

அதன் ஓர் அங்கமே ஜாமியா நளீமியாக் கலாபீடமாகும். இக்கலாபீடம் இப்பொழுது 50 ஆவது வருட பூர்த்தி விழாவை விமரிசையாகக் கொண்டாடுகிறது. இக்கலாபீடம் கடந்த ஐந்து தசாப்த காலத்தில் சமூகத்துக்குத் தேவையான தலைசிறந்த புத்திஜீவிகளை உருவாக்கித் தந்துள்ளது.

மர்ஹூம் நளீம் ஹாஜியாரின் சேவைகளை சமூகம் என்றும் மறந்துவிடக் கூடாது. அதேபோல் மர்ஹூம் ஸேம் றிபாய் ஹாஜியாரும் சமூகத்தின் கல்வி முன்னேற்றத்துக்காகப் பெரும் பங்களிப்புச் செய்தவர். இதுபோன்ற பரோபகாரிகள் சமூகத்தில் மேலும் உருவாக வேண்டும்.

தர்கா நகர் இஸ்லாமிய நலன்புரிச் சங்கம் பிரதேச கல்விச் செயற்பாடுகளுக்கு ஊக்கமளித்து வருகிறது. நாம் ஒவ்வொருவரும் கல்வி முன்னேற்றத்துக்காக எம்மால் முடியுமான பங்களிப்பைப் பெற்றுக் கொடுக்க முன்வர வேண்டும் என்றார்.

இந்நிகழ்வில் கலாநிதி ரூமி ஹாஷி , முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் எம்.எஸ்.எம். அஸ்லம் ஆகியோரும் உரையாற்றினர். இந்நிகழ்வில் மாணவர்களின் கலைநிகழ்ச்சிகளும் இடம் பெற்றன.

# பெயர் மாற்றப்படவுள்ள கண்டி விவேகானந்தா

கண்டி விவேகானந்தா தமிழ் மகா வித்தியாலயம் பெயர் மாற்றப்படவுள்ளதாக பாடசாலை அதிபர் ஆர்.கலையரசி தெரிவித்தார்.

இது தொடர்பான நிகழ்வு எதிர்வரும் 22ஆம் திகதி காலை 9.00 மணிக்கு இடம்பெறவுள்ளதாகத் தெரிவித்த அதிபர், இந் நிகழ்வில் பிரதம அதிதியாக மத்திய மாகாண ஆளுநர் லலித் யூ கமகே கலந்துகொண்டு பெயர்ப்பலகையை திரை நீக்கம் செய்யவுள்ளதாகவும் கூறினார்.

இந்நிகழ்வில் கண்டி மாவட்ட அரசாங்க அதிபர் சந்தன தென்னக்கோன், மத்திய மாகாண பிரதம செயலாளர், கல்விச் செயலாளர், கல்விப் பணிப்பாளர்கள்,கல்வி அதிகாரிகள், பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள், பெற்றோர் மற்றும் பழைய மாணவர்கள் எனப் பலர் கலந்து கொள்ளவுள்ளனர்.

# கப்பம் கோரிய மூவர் கைது

மருந்து உற்பத்தி நிறுவன உரிமையாளரிடம் 10 இலட்சம் ரூபா கப்பம் கோரினார்கள் என்ற சந்தேகத்தின்பேரில் மூவர் கைது செய்யப்பட்டுள்ளதாக மீகொட பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேக நபர்கள் குறித்த மருந்து உற்பத்தி நிறுவனத்தை நடத்துபவரின் உற்பத்தி மற்றும் வர்த்தக நடவடிக்கைகளை குறைத்து மதிப்பிடும் வகையில் விளம்பரம் செய்து சமூக ஊடகங்களில் வெளியிடுவதாக அச்சுறுத்தியே கப்பம் கோரியுள்ளதாக பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

தாம் கூறிய தொகையுடன் பண்டாரகம நகருக்கு வருமாறு குறித்த நபருக்கு கப்பம் கோருபவர்கள் அறிவித்திருந்தனர். இதன்போதே, கப்பம் பெற வந்த மூன்று சந்தேக நபர்களும் பண்டாரகம நகரில் கத்தியுடன் கைது செய்யப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவத்துடன் தொடர்புடைய பிரதான சந்தேக நபர் அலுபோமுல்ல பிரதேசத்தை வசிப்பிடமாகவும் ஏனைய இரண்டு சந்தேக நபர்களும் பாணந்துறை பிரதேசத்தை சேர்ந்தவர்கள் எனவும் பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

# கைதடியில் கடை உடைத்து பணமும் பொருட்களும் திருட்டு





சாவகச்சேரிப் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கைதடிச் சந்திக்கு அருகாமையில் அமைந்துள்ள சுப்பர் மார்க்கெட்டை உடைத்து உள்நுழைந்த திருடர்கள் அங்கிருந்த பணம் மற்றும் பெறுமதியான பொருட்கள் என்பவற்றை கொள்ளையிட்டுச் சென்றிருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

16/06 வெள்ளிக்கிழமை இரவு சுப்பர் மார்க்கெட்டின் கூரையை பிரித்து உள்நுழைந்த திருடர்கள் மூன்று இலட்சம் ரூபாய் பணம்,குளிர்பான வகைகள் மற்றும் பால் மா பைக்கற்றுகள் என்பவற்றை திருடிச் சென்றிருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

மேற்படி திருட்டுக் காட்சி அங்கிருந்த பாதுகாப்புக் கமராவில் பதிவாகியுள்ள நிலையில் சாவகச்சேரி பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

# பேருவளைக்கான ஜனாஸா சேவை வாகனம் கையளிப்பு



(பேருவளை நிருபர் )

பேருவளைக்கான ஜனாஸா சேவை வாகனம் பொதுமக்கள் பாவனைக்கு கையளிக்கும் நிகழ்வு பேருவளை மருதானை அல்- பாஸியதுல் நஸ்ரியா பெண்கள் பாடசாலையில் வெள்ளிக்கிழமை(16) நடைபெற்றது.

பேருவளை பிரதேச செயலாளர் ரஞ்சன் பீ. பெரேரா, பேருவளை திடீர் மரண விசாரணை அதிகாரி முஹம்மத் நஸ்ரின் உட்பட பலர் இந் நிகழ்வில் பங்குபற்றினர்.



# முள்ளிப்பொத்தானையில் இலவச நடமாடும் சேவை



(கிண்ணியா செய்தியாளர்)

கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமானின் அறிவுறுத்தலுக்கமைய மாகாண சுகாதார அமைச்சு, மாகாண சமூக சேவைகள் திணைக்களம் இணைந்து தம்பலகாமம் பிரதேச செயலகமும் முள்ளிப்பொத்தானை ஆரம்ப சுகாதார வைத்திய அதிகாரி பிரிவும் இணைந்ததாக நடத்தும் நடமாடும் சேவை சனிக்கிழமை(17) முள்ளிப்பொத்தானை திஸ்ஸபுர ஹமீதியா முஸ்லிம் மகாவித்தியாலயத்தில் இடம்பெற்றது.

தம்பலகாமம் பிரதேச செயலாளரின் வழிகாட்டுதலுக்கிணங்க இடம்பெற்ற குறித்த நடமாடும் சேவையில் இரத்தப் பரிசோதனை, கண் பரிசோதனை, பற்சிகிச்சை, மாற்றுத் திறனாளிகளுக்கான உபகரணம் வழங்கல் உள்ளிட்ட பல சேவைகளும் இடம்பெற்றன.

இதில் தம்பலகாமம் உதவிப் பிரதேச செயலாளர் இரா.பிரசாந்தன், திருகோணமலை பிராந்திய சுகாதார சேவைகள் திணைக்கள வைத்தியர்கள், முள்ளிப்பொத்தானை ஆரம்ப சுகாதார வைத்தியசாலை வைத்தியர் வி.ரன்ஜித், கப்பல்துறை சுதேச மருத்துவ வைத்தியசாலை வைத்தியர்கள், மாவட்ட சமூக சேவைகள் உத்தியோகத்தர் எம்.எஸ்.ஹபீபுள்ளா, தம்பலகாமம் பிரதேச செயலக சமூக சேவை உத்தியோகத்தர் ப.சுதன், மாவட்ட மேலதிக பதிவாளர் அஸ்வர், பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள், பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

# ஊடக நெறிமுறை தொடர்பான பயிற்சிப் பட்டறை





(பாறுக் ஷிஹான், எஸ்.அஷ்ரப்கான், மாளிகைக்காடு செய்தியாளர்)

'சமூக ஊடகங்களில் கருத்துகளைப் பகிரும்போது ஊடக நெறிமுறைகளைப் பின்பற்றுவதில் ஒன்றிணைதல்' எனும் தொனிப்பொருளிலான ஒருநாள் பயிற்சிப் பட்டறை மாளிகைக்காடு பாவா றோயலி வரவேற்பு மண்டபத்தில் சனிக்கிழமை(17) இடம்பெற்றது.

பெண்களின் மேம்பாட்டுக்காகப் பணியாற்றும் இலங்கை முஸ்லிம் பெண்கள் ஆராய்ச்சி செயல் முன்னணியின் ஏற்பாட்டில் சுவீடனை தலைமையகமாகக் கொண்ட சர்வதேச தொண்டு நிறுவனமான டயகோனியா அனுசரணையில் தமிழ்மொழி மூலமாக இடம்பெற்றது.

அம்பாறை மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளையும் சேர்ந்த சமூகம், சமயம், அரசியல் மற்றும் ஏனைய விடயங்களில் சமூக ஊடகங்களில் தங்களது ஆக்கங்களைப் பகிர்ந்துவரும் சமூக ஆர்வலர்கள் மற்றும் ஊடகவியலாளர் என பல்லின ஆண்கள், பெண்கள் பங்குபற்றுனர்களாகக் கலந்துகொண்ட இந்நிகழ்வில், உள்ளூர் மற்றும் சர்வதேச ரீதியான நிகழ்வுகளில் வளவாளராகப் பணியாற்றும் கலாநிதி எம்.சி.றஸ்மின் வளவாளராகவும் விடிவெள்ளி பத்திரிகை ஆசிரியர் எம்.பி.எம்.பைறூஸ் துணை வளவாளராகவும் பங்கேற்றிருந்தனர்.

இந்நிகழ்வுக்கு இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழக பொறியியல் பீட சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி அஸ்லம் சஜா தலைமை தாங்கினார். கருத்து வேற்றுமை, தனியுரிமை, பரபரப்பு, அநாமோதய தகவல் மூலங்கள், சமூக ஊடகம் மற்றும் உறுதிப்படுத்தல் போன்ற விடயங்களை மையமாக வைத்து இதன்போது வளவாளரால் விளக்கமளிக்கப்பட்டது.

மேலும், சமூக ஊடகம் மற்றும் இலத்திரனியல் ஊடகம் போன்றவற்றின் நெறிமுறைகள் குறித்தான விரிவான விடயங்கள் ஆராயப்பட்டதுடன் மேற்படி நெறிமுறைகள் தொடர்பில் பங்குபற்றியோரிடமிருந்து கருத்துகள் பெறப்பட்டு எதிர்காலத்தில் பிராந்திய ரீதியாக ஊடக நெறிமுறைகளை ஊக்குவிக்கும் செயற்றிட்டமும் வரையப்பட்டது.

தவறான தகவல், பரபரப்புத் தகவல், புனைதல், போலியான தகவல், சரிபார்ப்பு இல்லாமை, தகவல்களை உறுதிப்படுத்தாமை, வெறுக்கத்தக்க பேச்சுகளைப் பரப்புதல், சிறுவர் துஷ்பிரயோகம் மற்றும் இன்னோரன்ன விடயதானங்களை நோக்காகக்கொண்டு நடத்தப்பட்ட இப்பயிற்சிப் பட்டறையில் நெறிமுறை உட்குறிப்பு, ஊடக நெறிமுறையில் வித்தியாசமான அணுகுமுறைகளைக் கையாளுதல், நெறிமுறையைப் பின்பற்றுவதில் எதிர்கொள்ளப்படும் சவால்கள் மற்றும் அதற்கு முன்னோக்கியதான பாதை அத்துடன் எதிர்காலத்துக்கான சிபாரிசுகள் போன்ற விடயங்களில் பங்குபற்றுனர்களின் கருத்துகள் உள்வாங்கப்பட்டு அவை குறித்து விரிவாகப் பேசப்பட்ட சிறப்பான ஊடக நெறிமுறை தொடர்பான பயிற்சிப் பட்டறையாக இது அமைந்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

அம்பாறை மாவட்டத்தில் இப்பயிற்சிப் பட்டறையை நடத்துவதற்கான ஏற்பாட்டை சமூக அபிவிருத்தி மன்றம் முன்னெடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது.





சாய்ந்தமருது லீடர் எம்.எச்.எம்.அஷ்ரப் வித்தியாலய வசதி குறைந்த மாணவர்களுக்கு பாடசாலை பாதணிகள் வழங்கும் நிகழ்வும் தெரிவு செய்த மாணவர்களின் பெற்றோர்கள் சந்திப்பும் பாடசாலை மண்டபத்தில் அதிபர் எம்.ஐ.சம்சுதீன் தலைமையில் வெள்ளிக்கிழமை(16) இடம்பெற்றன வெளிநாட்டில் பணிபுரியும் இலங்கை (சாய்ந்தமருது) சகோதரி ஒருவரின் உதவியினால் கிடைக்கப்பெற்ற இந்தப் பாடசாலை பாதணிகள் வழங்கும் நிகழ்வில் பிரதி அதிபர் எஸ்.எம்.சுஜான், அல்- மீஸான் பௌண்டேஷன் தவிசாளர், ஊடகவியலாளர் யூ.எல்.என்.நூருல் ஹுதா, பாடசாலை அபிவிருத்தி நிறைவேற்றுக்குழுச் செயலாளர், பகுதித் தலைவர்கள், ஆசிரிய ஆசிரியைகள், மாணவர்கள், பெற்றோர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.
(மாளிகைக்காடு செய்தியாளர்)

கிழக்கு செய்திகள்
eastthamilan@gmail.com

# திருட்டுச் சம்பவங்களில் ஈடுபட்ட சந்தேகநபர் கைது

## ஒருதொகை பொருட்களும் மீட்பு

(கனகராசா சரவணன்)

மட்டக்களப்பு, திருகோணமலை, கல்முனை உட்பட பல பிரதேசங்களில் மோட்டார் சைக்கிள் மற்றும் வீடுடைப்பு போன்ற 10 திருட்டுச் சம்பவங்களின் பிரதான சந்தேக நபர் ஒருவரை கிளிநொச்சியில் வைத்து சனிக்கிழமை(17) கைதுசெய்ததுடன் திருடப்பட்ட தங்க ஆபரணங்கள், கையடக்கத் தொலைபேசிகள், மடிக்கணினி, மோட்டார் சைக்கிள் என்பவற்றையும் மீட்டுள்ளதாக மட்டு. தலைமையகப் பொலிஸார் தெரிவித்தனர்.

கடந்த சில மாதங்களாக தொடர்ச்சியாக மட்டக்களப்பில் மோட்டார்சைக்கிள் திருட்டு மற்றும் வீடுடைத்து திருடப்பட்ட சம்பவங்கள் தொடர்பாக பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்ட நிலையில், பிரதான சூத்திரதாரியை அடையாளம் கண்டுகொண்ட பொலிஸார் மட்டு. தலைமையகப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி பிரியந்த பண்டாரவின் ஆலோசனைக்கமைய பெரும் குற்றத்தடுப்புப் பிரிவுப் பொறுப்பதிகாரி ஜி.எம்.எஸ். கஜநாயக்கா தலைமையிலான குழுவினர் சந்தேக நபரை கைதுசெய்தனர்.

இதனைத் தொடர்ந்து கைதுசெய்யப்பட்டவரிடம் மேற்கொண்ட விசாரணையில் திருகோணமலை நிலாவெளியைச் சேர்ந்த 29 வயதுடைய சந்தேக நபர் திருகோணமலை, கல்முனை, மட்டக்களப்பு, பாரதிவீதி மற்றும் றொசாறியா ஆகிய வீதிகளில் இரு மோட்டார்சைக்கிள் உட்பட ஐந்து மோட்டார் சைக்கிள்களைத் திருடியதுடன் களுவாஞ்சிக்குடி, காத்தான்குடி மற்றும் மட்டக்களப்பு தலைமையக பொலிஸ் பிரிவிலுள்ள சின்னஉப்போடை, பாரதிலேன், கதிர்காமர்வீதி ஆகியவற்றில் உள்ள ஐந்து வீடுகள் உடைத்து தங்க ஆபரணங்கள் மற்றும் கையடக்கத் தொலைபேசி, மடிக்கணினி மேலும் மோட்டார் சைக்கிளில் சென்று மட்டு. ஜீ.வி.வைத்தியசாலை பகுதியில் வீதியால் சென்ற பெண் ஒருவரின் கழுத்தில் இருந்த தங்கச் சங்கிலியை அறுத்துச் சென்ற சம்பவம் போன்ற திருட்டுச் சம்பவங்களில் ஈடுபட்டுள்ளார்.

திருடிய தங்க ஆபரணங்களை விற்று மகேந்திர ரக கப் வாகனம் ஒன்றை வாங்கியுள்ளதாகவும் பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது.இதில் கைதுசெய்யப்பட்டவரிடமிருந்து ஒரு மோட்டார் சைக்கிள், மடிக்கணினி ஒன்று, 07 கையடக்கத் தொலைபேசிகள் மற்றும் உருக்கிய நிலையில் ஒரு தொகை தங்கத்தை மீட்டுள்ளதுடன் திருடிய பணத்தில் வாங்கிய மகேந்திர ரக கப் வாகனத்தை மீட்பதற்கான நடவடிக்கையை மேற்கொண்டுள்ளதாகவும் இவரை நீதிமன்றில் ஆஜர்ப்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை மட்டு. தலைமையக பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.



திருகோணமலை மாவட்டத்திலிருந்து தரம் ஐந்து புலமைப்பரிசில் பரீட்சைக்கு தோற்றும் குச்சவெளிக் கோட்டத்தில் உள்ள கோணேசபுரி அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை, பெரியகுளம் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை ஆகியவற்றில் கல்வி பயிலும் மாணவர்களுக்கு ஞானோதயம் புலமைப்பரிசில் தேர்வு வழிகாட்டி நூல் அண்மையில் வழங்கப்பட்டது. திருகோணமலை மாவட்ட நலன்புரிச் சங்கத் தலைவர் சண்முகம் குகதாசன் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள் மற்றும் பெற்றோர் கலந்துகொண்டனர். இந் நூல் வழங்கலுக்கான அனுசரணையைச் சுவிட்ஸர்லாந்து நாட்டில் வாழும் கனகசபை யோகானந்தன் என்பவர் வழங்கியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (அப்துல்சலாம் யாசீம்)





சம்மாந்துறை பிரதேச செயலகப் பிரிவில் தீர்வின்றி இருந்த காணிகளுக்கான உறுதிப் பத்திரங்களும் அனுமதிப் பத்திரங்களும் சம்மாந்துறை பிரதேச செயலாளர் எஸ்.எல்.முஹம்மட் ஹனீபா தலைமையில் பிரதேச செயலகத்தில் வியாழக்கிழமை(15) வழங்கப்பட்டன. இதன்போது 75 பேருக்கு காணி உறுதிப் பத்திரமும் இன்னும் 75 பேருக்கு காணி அனுமதிப்பத்திரமும் வழங்கப்பட்டுள்ளன. இந்நிகழ்வில் கிழக்கு மாகாண காணி ஆணையாளர் டி.எம்.ஆர்.சி.தகாநாயக்க, அம்பாறை மாவட்ட காணி ஆணையாளர் திருமதி இப்திகார் பானு, அம்பாறை மாவட்ட கச்சேரியின் சிரேஷ்ட காணி உத்தியோகத்தர் கே.எல்.எம்.முஸம்மில், சம்மாந்துறை பிரதேச செயலகத்தின் உதவிப் பிரதேச செயலாளர் யூ.எம்.அஸ்லம் உட்பட பல உயரதிகாரிகள் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர். (சம்மாந்துறை செய்தியாளர்)

# பஸ் தரிப்பிட புனர்நிர்மாண அடிக்கல் நடும் நிகழ்வு



(சம்மாந்துறை செய்தியாளர்)

முதலாம் வருட உயர் தேசிய ஆங்கில டிப்ளோமா பகுதிநேர மாணவர்களின் ஒத்துழைப்புடன் சம்மாந்துறை உயர் தொழில்நுட்பவியல் கல்வி நிறுவனத்தின் முன்பாக பிரதான பாதையில் அமைந்துள்ள பஸ் தரிப்பிட புனர்நிர்மாணத்துக்கான அடிக்கல் நடும் நிகழ்வு ஞாயிற்றுக்கிழமை(18) இடம்பெற்றது.

சம்மாந்துறை உயர் தொழில்நுட்பவியல் கல்வி நிறுவனத்தின்(ATI) பணிப்பாளர் எஸ்.எல்.முஸ்தபாவின் ஆலோசனையின் கீழ் நஜா பவுண்டேசன் அமைப்பின் நிதிப்பங்களிப்புடன் இடம்பெற்ற இந்நிகழ்வில் சம்மாந்துறை உயர் தொழில்நுட்பவியல் பணிப்பாளர் எஸ்.எல்.கல்வி நிறுவனத்தின் முஸ்தபா, நஜா பவுண்டேசன் அமைப்பின் தலைவர் எஸ்.எம்.நபீல், சம்மாந்துறை உயர் தொழில்நுட்பவியல் கல்வி நிறுவனத்தின் ஆங்கில கற்கைத்துறைப் பொறுப்பாளர் எம்.பி.நௌசாட், கணக்கியல்துறை பொறுப்பாளர் பெரோஸ், அதிபர்கள், நஜா பவுண்டேசன் அமைப்பின் உயர்பீட உறுப்பினர்கள், கல்விசாரா ஊழியர்கள் மற்றும் மாணவர்கள் எனப் பலர் கலந்துகொண்டனர்.

முதலாம் வருட உயர் தேசிய ஆங்கில டிப்ளோமா மாணவர்களின் பாடத்திட்டத்தில் உள்ள சமூகப் பொறுப்புணர்வு குறித்த குழு செயற்றிட்டத்துக்கேற்ப இவ்வேலைத்திட்டம் முன்னெடுக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.



மட்டக்களப்பு - புன்னைச்சோலை ஸ்ரீ பத்திரகாளியம்மன் ஆலய தீ மிதிப்பு நிகழ்வு வெள்ளிக்கிழமை(16) இடம்பெற்றது. இதன்போது அடியார்கள் கலந்துகொண்டு தமது நேர்த்திக்கடன்களை நிறைவேற்றினர். (கனகராசா சரவணன், வெல்லாவெளி, மட்டக்களப்பு செய்தியாளர்கள்)



அம்பாறை மாவட்ட கல்முனை பிரதேச செயலகப் பிரிவின், கல்முனை வங்கிச் சங்கத்தின் முகாமைத்துவப் பணிப்பாளராக சிரேஷ்ட சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் என்.எம்.நௌசாத், பிரதேச செயலாளர் ஜே.லியாகத் அலி முன்னிலையில் தனது கடமையை வெள்ளிக்கிழமை(16) பொறுப்பேற்றுக் கொண்டார். இதன்போது கல்முனை பிரதேச செயலக சிரேஷ்ட தலைமை சமுர்த்தி முகாமையாளர் ஏ.ஆர்.எம்.சாலிஹ், சிரேஷ்ட கருத்திட்ட முகாமையாளர் ஏ.எம்.எஸ்.நயீமா, மகாசங்க சிரேஷ்ட உதவி முகாமையாளர் எம்.எம்.எம்.மன்சூர், சமுர்த்திப் பிரிவில் கடமையாற்றும் ஏனைய உத்தியோகத்தர்கள் கலந்துகொண்டனர். (கல்முனை செய்தியாளர்)





சம்மாந்துறை சபூர் வித்தியாலய மாணவர்களின் சிறுவர் சந்தை பாடசாலை அதிபர் எம்.பி.எம்.சாபிர் தலைமையில் ஆரம்பப்பிரிவு பகுதித் தலைவர் மருதூர் ஏ.ஹஸன் வழிகாட்டுதலின் கீழ் ஆசிரியர்கள் மற்றும் பெற்றோர்களின் பங்களிப்புடன் வியாழக்கிழமை(15) பாடசாலை வளாகத்தில் இடம்பெற்றது. இதன்போது பிரதம அதிதியாக சம்மாந்துறை ஆதார வைத்தியசாலையின் வைத்திய அத்தியட்சகர் டாக்டர் அஸாத் எம்.ஹனிபா கலந்துகொண்டதோடு சம்மாந்துறை நம்பிக்கையாளர் சபைத் தலைவர் றம்சின் காரியப்பர், நம்பிக்கையாளர் சபைச் செயலாளர் எம்.ஐ.எம்.இஸ்ஹாக், அதிபர்கள் எனப் பலர் கலந்துகொண்டனர். (சம்மாந்துறை, மாளிகைக்காடு செய்தியாளர்கள்)





காரைதீவு பிரதேச செயலாளர் சிவஞானம் ஜெகராஜனின் வழிகாட்டுதலின் கீழ் நடராஜானந்தா மாதர் கிராம அபிவிருத்தி சங்கத்தின் ஏற்பாட்டில் பிரதேச செயலக நிர்வாக உத்தியோகத்தர் த.கமலநாதனினால் மரக்கன்றுகள் நாட்டி வைக்கப்பட்டன. இதன்போது அங்கத்தவர்கள் 24 பேருக்கு ரூபா 1,750,000 கடன் வழங்கியதுடன், 24 பழ மரக்கன்றுகளும் வழங்கப்பட்டன. இதன்போது ஐந்தாம் தரப் புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியெய்திய மாணவியும் கௌரவிக்கப்பட்டார்.

அதிகரித்துவரும் டெங்கு; கட்டுப்படுத்த விசேட செயலணி

# மட்டக்களப்பில் ஆறுமாத காலத்துக்குள் ஆயிரத்து 219 டெங்கு நோயாளர்கள்

## அரச அதிபர் திருமதி கலாமதி பத்மராஜா



(மட்டக்களப்பு)

ஜனவரி மாதம் முதல் ஜூன் மாதம் 15ஆம் திகதிவரை மாவட்டத்தில் ஆயிரத்து 219 டெங்கு நோயாளர்கள் பதிவுசெய்யப்பட்டுள்ளதாகவும் அதனைக் கட்டுப்படுத்த விசேட செயலணி உருவாக்கப்பட்டுள்ளதாகவும் மட்டக்களப்பு மாவட்ட அரச அதிபர் திருமதி கலாமதி பத்மராஜா தெரிவித்தார்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருகின்றது. இதனைக் கட்டுப்படுத்த கிழக்கு மாகாண ஆளுநரினால் அண்மையில் விசேட செயலணி ஒன்று உருவாக்கப்பட்டது. இச்செயலணியின் விசேட கலந்துரையாடல் மாவட்ட செயலக மாநாட்டு மண்டபத்தில் வெள்ளிக்கிழமை(16) இடம்பெற்றபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும், தற்போதைய தரவுகளின் மூலம் மாவட்டத்தில் டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரித்துக் காணப்படுவதை சுட்டிக்காட்டியதுடன் அனைவரும் ஒன்றிணைந்து டெங்கை ஒழிக்க முன்வரவேண்டும் எனவும் கேட்டுக்கொண்டார்.

ஏறாவூர், செங்கலடி, கோரளைப்பற்று மத்தி, ஓட்டமாவடி, காத்தான்குடி பிரதேசங்களில் டெங்கின் பரவல் அதிகரித்துக் காணப்படுகின்றது. இதேவேளை, மாவட்டத்தின் பல பாகங்களிலும் பிரதேச சுகாதார அதிகாரி அலுவலகம், பிரதேச செயலகம், மாநகர சபை, பொலிஸார், முப்படையினர் இணைந்து டெங்கு ஒழிப்பு நடவடிக்கையில் ஈடுபட்டு வருகின்றனர்.

டெங்கு பரவக்கூடிய ஆபத்தான இடங்கள், வீடுகள், நீர் தேங்கும் இடங்கள் என்பவற்றை அடையாளம் கண்டு அவற்றுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் - என்றார்.

பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், சுகாதார உத்தியோகத்தர்கள், விளையாட்டுக் கழகம் மற்றும் இளைஞர் கழகங்கள், சமுர்த்தி பயன்பெறுனர், பொதுமக்கள் அனைவரும் ஒன்றிணைந்து டெங்கை கட்டுப்படுத்த நடவடிக்கை மேற்கொள்ள வேண்டியதன் அவசியம் தொடர்பாக இதன்போது மாவட்ட அரச அதிபரினால் சுட்டிக்காட்டப்பட்டது.

இக்கலந்துரையாடலில் மாவட்ட மேலதிக அரச அதிபர் திருமதி சுதர்சினி ஸ்ரீகாந்த், பிரதேச செயலாளர்கள், உதவிப் பிரதேச செயலாளர்கள், வைத்தியர்கள், முப்படையினர், பொலிஸார், சுகாதார அதிகாரிகள், துறைசார் நிபுணர்கள் எனப் பலரும் கலந்துகொண்டிருந்ததுடன், தமது ஆக்கபூர்வமான கருத்துகளையும் தெரிவித்துள்ளனர்.

# புனித ஹஜ் யாத்திரைக்கு இலங்கையின் 10 பேருக்கு அழைப்பு

## சவூதி மன்னரின் ஏற்பாடு

(பொலிவேரியன் செய்தியாளர்)

சவூதி அரேபிய மன்னர் சல்மான் அப்துல் அஸீஸின் ஏற்பாட்டில் இம்முறை இலங்கையிலிருந்து 10 பேர் புனித ஹஜ் கடமையை நிறைவேற்றத் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

இவர்கள் இன்று 19ஆம் திகதி திங்கட்கிழமை புனித ஹஜ் கடமையை நிறைவேற்ற மக்கா பயணமாகவுள்ளனர். ஒவ்வொரு வருடமும் மன்னரின் விசேட அழைப்பின் பேரில் சகல நாடுகளிலும் இருந்து ஹஜ் யாத்திரைகளுக்காக சமூகத்தின் முக்கிய பிரமுகர்கள் பலரும் தெரிவு செய்யப்படுவார்கள். அதன்படி இம்முறை 10 பேர் தெரிவுசெய்யப்பட்டிருக்கிறார்கள்.

தெரிவுசெய்யப்பட்டவர்களின் பெயர்கள் பின்வருமாறு:- தென்கிழக்குப் பல்கலைக்கழக உபவேந்தர் அபூபக்கர் றமீஸ், ஊடகவியலாளர் முஹம்மட் அமீன் முஹம்மட் அஸ்ஸாம் உட்பட முஹம்மட் றிஸ்வான் அப்துல் றசாக் (ஒருங்கிணைப்பாளர்), ஜமால்டீன் முஹம்மட் நிஸாம், முஹம்மட் நஸீர் முஹம்மட் மபாஸ், முஹம்மட் மௌஜூத் முஹம்மட் முபீஸ், முஹம்மட் மூசின் முஹம்மட் சுபைன், அப்துல் ஸலாம் முஹம்மட், பக்கீர் மொஹிடீன் முஹம்மட் காஸிம், உமர்லெப்பை உஸனார் ரஹீம் ஆகியோரே தெரிவுசெய்யப்பட்ட சமூகத்தின் முக்கிய 10 பிரமுகர்களுமாவர்.

# ஹோட்டல் உரிமையாளர்களுக்கு சிறுவர் பாதுகாப்பு தொடர்பான விழிப்புணர்வு




(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள ஹோட்டல்களில் தங்குமிட வசதிகளை வழங்கும் விடுதி உரிமையாளர்கள் மற்றும் சிறுவர் அபிவிருத்தி நிலைய முகாமையாளர்களுக்கு சிறுவர் பாதுகாப்பு தொடர்பாக விழிப்புணர்வூட்டும் நிகழ்வு வியாழக்கிழமை(15) நடைபெற்றது.

இவ்விழிப்புணர்வூட்டல் மாவட்ட அரச அதிபர் திருமதி கலாமதி பத்மராஜாவின் வழிகாட்டுதலின் கீழ் உதவி மாவட்ட செயலாளர் ஆ.நவேஸ்வரன் தலைமையில் மாவட்ட செயலக மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்றது.

மாவட்ட செயலகம் மற்றும் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை இணைந்து ஏற்பாடு செய்த இந்நிகழ்வில் சிறுவர் பாதுகாப்பு, சிறுவர் உரிமை மற்றும் அவர்களின் நலன் சார்ந்த விடயங்கள் தொடர்பாகக் கலந்துரையாடப்பட்டன.

இதன்போது மாவட்டத்தில் தங்குமிட வசதிகளை வழங்கும் தனியார் ஹோட்டல் மற்றும் விடுதி உரிமையாளர்களுக்கு சிறுவர் பாதுகாப்பு என்றால் என்ன, அது தொடர்பான கொள்கை, சட்டம், ஹோட்டல்களில் சிறுவர்கள் தங்கும்போது அல்லது அவ்வாறான சம்பவங்களை எவ்வாறு கையாளுதல், எதிர்காலத்தில் 18 வயதுக்குக் குறைவானவர்களை எவ்வாறு அடையாளம் காணுதல், ஹோட்டல்களுக்கு சிறுவர்கள் வரும்போது அவர்களின் எதிர்கால நலன் குறித்து எவ்வாறு செயற்பட வேண்டும் என்பன போன்ற விடயங்கள் தொடர்பாக சிறுவர் அபிவிருத்தி அதிகாரசபை அதிகாரிகளினால் தெளிவுபடுத்தப்பட்டது.

இந்நிகழ்வில் மட்டக்களப்பு சிறுவர், பெண்கள் பொலிஸ் பிரிவின் பொறுப்பதிகாரி சந்துனிக்கா எதிரிசிங்க, மாவட்ட சிறுவர் பாதுகாப்பு அதிகாரி நிஷா ரியாஸ், சிறுவர் நன்னடத்தைக் காரியாலய நன்னடத்தை அதிகாரி வரதராஜன், மாவட்ட உளசமூக உத்தியோகத்தர் பிரபாகரன், மாவட்ட செயலக உத்தியோகத்தர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

# வாகரையில் நடமாடும் சேவை



(மட்டக்களப்பு)

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் ஆலோசனைக்கிணங்க கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமானின் வழிகாட்டலில் கிழக்கு மாகாண சுகாதார சமூக சேவைகள் மற்றும் சுதேச மருத்துவ அமைச்சினால் ஏற்பாடு செய்யப்பட்ட நடமாடும் சேவை கோறளைப்பற்று வடக்கு வாகரை பிரதேச செயலகத்தில் மாவட்ட அரச அதிபர் திருமதி கலாமதி பத்மராஜா தலைமையில் நேற்று (15) இடம்பெற்றது.

பிரதேச செயலாளர் ஜி.அருணனின் ஏற்பாட்டில் நடைபெற்ற இந்நிகழ்வில் அம்மந்தனாவெளி கிராம சேவகர் பிரிவுக்குட்பட்ட 220 நபர்களுக்கான காணி அனுமதிப்பத்திரம், போஷாக்கு அடைவு மட்டத்தில் குறைந்தவர்களுக்கான உலருணவுப்பொதிகள், விசேட தேவையுடையவர்களுக்கான உபகரணம் மற்றும் முதியோர் அமைப்புகளுக்கான கதிரைகள் போன்றன அதிகாரிகளினால் கையளிக்கப்பட்டன.

இந்நிகழ்வில் மாவட்டத் திட்டமிடல் பணிப்பாளர் சசிகலா புண்ணியமூர்த்தி, மாவட்ட சமூக சேவை உத்தியோகத்தர், உதவிப் பிரதேச செயலாளர், ஏனைய உத்தியோகத்தர்கள் மற்றும் மாவட்ட ஆயுர்வேத வைத்திய அதிகாரி, வாகரை சுகாதார வைத்திய அதிகாரிகள், பொலிஸ் அதிகாரிகள் எனப் பலர் கலந்துகொண்டனர்.




கிழக்கு மாகாண மக்களின் பிரச்சினைகளைக் கேட்டறிந்து உடனுக்குடன் தீர்வு வழங்கும் 'ஆளுநரின் பொது மக்கள் குறைதீர்க்கும் பிரிவு' உத்தியோகபூர்வமாக வெள்ளிக்கிழமை(16) ஆளுநர் செந்தில் தொண்டமானால் திறந்துவைக்கப்பட்டது. இந்நிகழ்வில், கிழக்கு மாகாண பிரதம செயலாளர், பிரதிப் பிரதம செயலாளர்கள், அமைச்சுகளின் செயலாளர்கள், திணைக்களத் தலைவர்கள் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டிருந்தனர். (மீனோடைக்கட்டு செய்தியாளர்)

# கிழக்கு பல்கலை சித்த மருத்துவ அலகு சித்த மருத்துவ பீடமாகத் தரமுயர்வு

கிழக்குப் பல்கலைக்கழகத்தின் திருகோணமலை வளாகத்தில் அமைந்துள்ள சித்த மருத்துவ அலகு சித்த மருத்துவ பீடமாகத் தரமுயர்த்தப்பட்டுள்ளது.

இந்த அறிவித்தல் கல்வியமைச்சர் சுசில் பிரேம ஜயந்தவினால் கையொப்பமிடப்பட்டு 12ஆம் திகதி அதிசிறப்பு வர்த்தமானி அறிவித்தலாக வெளியிடப்பட்டுள்ளது.

இந்தப் பிரகடனத்தின்படி இதுவரை காலமும் பிரயோக விஞ்ஞான பீடத்தின் கீழிருந்த சித்த மருத்துவ அலகு சித்த மருத்துவ பீடமாகத் தரமுயர்த்தப்பட்டுள்ளது. அடிப்படைத் தத்துவம், குணபாடம், நோய் நாடல் மற்றும் சிகிச்சை ஆகிய மூன்று கற்றல் துறைகள் சித்த மருத்துவ பீடத்தினுள் உள்வாங்கப்பட்டுள்ளன.

தமிழர்களின் பாரம்பரிய வைத்திய முறைமையான சித்த வைத்தியத்தை முறையாகக் கற்பித்து அங்கீகரிக்கும் முனைப்புடன் கிழக்கு மாகாண சித்த வைத்தியர்கள் சங்கத்தினால் சித்த மருத்துவ பீடத்தை ஆரம்பிப்பதற்கான கோரிக்கை 2004ஆம் ஆண்டு கிழக்கு பல்கலைக்கழகத்திடம் முன்வைக்கப்பட்டது.

அதன் தொடர்ச்சியாக கிழக்குப் பல்கலைக்கழகத்தின் திருகோணமலை வளாகத்தில் சித்த மருத்துவ பீடத்தைத் ஸ்தாபிப்பதற்கு கிழக்கு பல்கலைக் கழகப் பேரவை தீர்மானித்ததுடன், அதற்கான நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்காக திருகோணமலை, கப்பல்துறை ஆயுர்வேத வைத்திய சாலையில் விசேட சித்தமருத்துவ நிபுணர் வைத்தியர் என்.வர்ணகுலேந்திரன் கல்விசார் ஆலோசகராகவும் நியமிக்கப்பட்டார்.

அதன்பின் 2007ஆம் ஆண்டு பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் சுதேச வைத்தியத்துக்கான நிலையியற் குழு, கிழக்குப் பல்கலைக்கழகத்தின் திருகோணமலை வளாகத்தில் சித்த மருத்துவ, சத்திர சிகிச்சைமாணி பட்டத்தை வழங்குவதற்கான அனுமதியை வழங்கியது. அதன்படி 20 மாணவர்கள் சித்த மருத்துவத்தில் பட்டப்படிப்பை மேற்கொள்வதற்கு அனுமதிக்கப்பட்டனர்.

2010ஆம் ஆண்டளவில் இந்திய அரசாங்கத்திடம் விடுக்கப்பட்ட வேண்டுகோளுக்கிணங்க, சித்த மருத்துவ பீடத்துக்குத் தேவையான சகல பௌதீக வளங்களும் இந்திய அரசாங்கத்தினால் வழங்கப்பட்டதோடு ஆறு ஆய்வுகூடங்களும் அமைக்கப்பட்டன. அத்துடன் சித்த மருத்துவ அலகில் கற்கின்ற மாணவர்களின் பயிற்சிகளுக்காக கோணேசர்புரியில் அரசாங்கத்துக்குச் சொந்தமான 7 ஏக்கர் காணியில் சித்த மருத்துவ போதனா வைத்தியசாலையும் அமைக்கப்பட்டது. இதன் மூலம் சித்த மருத்துவ, சத்திர சிகிச்சைமாணிப் பட்டதாரிகள் ஒரு வருட உள்ளகப் பயிற்சியையும் பெற்றுக்கொள்ள முடிந்தது.

உள்ளகப் பயிற்சியை வெற்றிகரமாக நிறைவு செய்யும் சித்த மருத்துவ சத்திர சிகிச்சைமாணி பட்டதாரிகள் இலங்கை ஆயுர்வேத மருத்துவப் பேரவையில் பதிவுசெய்து அங்கீகரிக்கப்பட்ட சித்த மருத்துவர்களாக சிகிச்சையில் ஈடுபட வழிசெய்யப்பட்டது. இந்நிலையில், கிழக்குப் பல்கலைக்கழகத்தின் திருகோணமலை வளாகத்தில் சித்த மருத்துவ பீடத்தைத் தாபிப்பதற்கு முன்வைக்கப்பட்ட கோரிக்கை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் விதந்துரைக்கப்பட்டு அமைச்சரவையினால் அங்கீகரிக்கப்பட்டு கல்வியமைச்சரினால் வர்த்தமானி அறிவித்தல் மூலம் பீடமாகப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

# தென்கிழக்கு பல்கலை ஊழியர் சங்கத் தலைவராக தாஜுதீன் தெரிவு

(மாளிகைக்காடு செய்தியாளர்)



தென்கிழக்கு பல்கலைக்கழக ஊழியர் சங்கத்தின் 23ஆவது வருடாந்த ஒன்றுகூடல் ஒலுவில் வளாக தொழில்நுட்ப பீட கேட்போர் கூடத்தில் சங்கத்தின் தலைவர் எம்.எம்.நௌபர் தலைமையில் வியாழக்கிழமை(15) இடம்பெற்றது.

இந்நிகழ்வுக்கு பிரதம அதிதியாக உபவேந்தர் பேராசிரியர் றமீஸ் அபூபக்கர் கலந்துகொண்டு உரையாற்றினார். நிகழ்வில் கௌரவ அதிதிகளாக பிரதிப் பதிவாளர் எஸ்.சிவக்குமார் மற்றும் பதில் நிதியாளர் சீ.எம்.வன்னியாராச்சி ஆகியோர் கலந்துகொண்டிருந்தனர்.

இரண்டு அமர்வுகளாக இடம்பெற்ற இந்நிகழ்வின் முதல் அமர்வில் பல்கலைக்கழகத்தில் தாங்களது 25 வருடகால சேவையைப் பூர்த்திசெய்தவர்களும் சேவைக்காலத்தின்போது மிகக் குறைந்த அளவான விடுமுறையை எடுத்தவர்களும் இங்கு கடமையாற்றி வேறு பல்கலைக்கழகங்களுக்கு பதவியுயர்வு பெற்றுச்சென்றவர்களும் ஊழியர் சங்கத்தால் பாராட்டி நினைவுச்சின்னம் வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.

நிகழ்வின் இரண்டாவது அமர்வின்போது புதிய ஆண்டுக்கான நிர்வாகத் தெரிவும் இடம்பெற்றது. குறித்த தெரிவில் சில பதவிகளுக்காக உறுப்பினர்கள் ஏற்கனவே தெரிவுசெய்யப்பட்டிருந்தனர். சில பதவிகளுக்கு ஒன்றுக்கு மேற்பட்டவர்கள் விண்ணப்பித்திருந்ததன் காரணமாக குறித்த பதவிகளுக்கு உறுப்பினர்களைத் தெரிவதற்காக இடம்பெற்ற தேர்தலின்போது அதிகப்படியான வாக்குகளைப் பெற்று புதிய தலைவராக சிரேஷ்ட உத்தியோகத்தர் எம்.ரீ.முஹம்மது தாஜுதீனும் செயலாளராக எம்.எம்.முஹம்மது காமில் உள்ளிட்டவர்களும் தெரிவாகினர்.

# விவசாய தொழில்நுட்ப விழிப்பூட்டல் நிகழ்வு



(வாழைச்சேனை மேலதிக செய்தியாளர்)

நெற்செய்கையில் சிறந்த விவசாய நடைமுறைகளைப் பின்பற்றி SL-GAP தரச் சான்றிதழ் பெறுவதற்கான ஒருங்கிணைந்த விவசாய தொழில்நுட்ப விழிப்பூட்டல் நிகழ்வு வாகரை பிரதேச செயலாளர் பிரிவு ரிதிதென்ன கிராமத்தில் நடைபெற்றது.

மட்டக்களப்பு விவசாய வியாபார ஆலோசனைப் பிரிவு விவசாயத் திணைக்களத்தினால் விவசாயிகளின் நன்மை கருதி மேற்படி நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. குறித்த நிகழ்வானது பல்வேறுபட்ட மாதிரி செய்கை முறையுடன் கூடிய விவசாய விழிப்பூட்டல் நிகழ்வுகளாக இடம்பெற்றன.

அதிலும் குறிப்பாக, விவசாயிகளுக்கான நிரந்தர பயிர் சிகிச்சை முகாம் மூலம் விவசாயிகளுக்கான பீடைகள் தொடர்பான மாதிரிகளை நேரடியாகக் காண்பித்து அவர்களுக்கான தீர்வுகளும் ஆலோசனைகளும் வழங்கப்பட்டன.

மண் வளப் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டு விவசாயிகளின் சந்தேகங்கள் தீர்க்கப்பட்டன. பரசூட் முறை நெல் விதைப்பு முறை, புதிய இயந்திரப் பாவனை, அளவுக்கதிகமான இரசாயனப் பாவனையால் ஏற்படும் பாதிப்புகள், அதற்கான தீர்வுகள், சிறந்த விவசாய முறைகளைப் பின்பற்றி தயாரிக்கப்படும் பண்ணை உற்பத்திகள், உலர் நிலை பண்படுத்தல், நெற் பயிர்களுக்கான பசளை சிபாரிசு போன்ற விடயங்களுடன் நெற்செய்கை ஏற்றுமதி நோக்கத்துக்கான தரச் சான்றிதழ் வழங்கல் தொடர்பான பல்வேறு விழிப்பூட்டல் நிகழ்வுகள் வழங்கப்பட்டன.

நிகழ்வில் நெற்செய்கையை தரப்படுத்துவதற்காக SL-GAP தரச் சான்றிதழ் பெற்றுக்கொள்வதற்கான தெளிவூட்டல் நிகழ்வு நடைபெற்றது. இச் தரச் சான்றிதழ் உள்ளூர் மற்றும் வெளிநாட்டு சந்தைவாய்ப்புக்கும் உத்தரவாதமளிப்பது மற்றுமொரு நன்மையாகும்.

இந்நிகழ்வில் மட்டக்களப்பு உதவி விவசாயப் பணிப்பாளர் சி.சித்திரவேல், மாவட்ட விவசாய வியாபார போதனாசிரியர் எச்.எம்.றியாழ் மற்றும் வாகரை, வாழைச்சேனை, வந்தாறுமூலை பிரிவுகளுக்கான விவசாயப் போதனாசிரியர்களும் கலந்துகொண்டனர்.

# கோழிச்சண்டையில் ஈடுபட்ட எழுவர் கைது

(கனகராசா சரவணன்)

மட்டக்களப்பு, வாழைச்சேனை பொலிஸ் பிரிவிலுள்ள நாவலடி பிரதேசத்தில் பணத்துக்காக கோழிச்சண்டை சூதாட்டத்தில் ஈடுபட்டுக் கொண்டிருந்த 07 பேரை சனிக்கிழமை(17) மாலை கைதுசெய்துள்ளதாகவும் 06 சண்டைக் கோழிகள் மற்றும் பணம் என்பவற்றை மீட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

பொலிஸாருக்கு கிடைத்த தகவலொன்றையடுத்து நாவலடி பிரதேசத்தில் சம்பவதினம் மாலை 06 மணியளவில் கோழிச் சண்டை நடத்திவந்த பகுதியை சுற்றிவளைத்த பொலிஸார், அங்கு கோழிச் சண்டையில் ஈடுபட்டிருந்த 06 பேருடன் கோழிச் சண்டையை பார்த்துக்கொண்டிருந்த ஒருவர் உட்பட 07 பேரை கைதுசெய்ததுடன் 6 கோழிகளையும் ஒரு தொகை பணத்தையும் மீட்டனர்.

இதில் கைதுசெய்யப்பட்டவர்கள் நாவலடி பிரதேசத்தைச் சேர்ந்த 26 தொடக்கம் 30 வயதுக்குட்பட்டவர்கள் எனவும் இவர்களை நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

கிழக்கு செய்திகள்
eastthamilan@gmail.com

## போடியார் புலம்பல்!



இங்கிலீச தேசிய மொழியாக ஆக்கப்போறதாக ஜனாதிபதி ரணில் அம்மாச்சி சொல்லியிருக்காரு எலுவா. போறபோக்கப்பார்த்தா வாற வருஷம் சீன மொழியையும் தேசிய மொழியாக ஆக்கினாலும் ஆச்சரியம் இல்ல. ஏனென்டா இப்ப நாட்டில எங்க பார்த்தாலும் சீனா ஆக்களும் அவங்க போய் சந்திக்கிற எங்கட ஆக்களையும்தான் எல்லாப்பக்கமும் காணக்கூடியதாக இருக்கு எலுவா, ஆங்கிலத்த தேசிய மொழியாக மாற்றினா நம்மட தமிழ்மொழிக்குத்தான் இலங்கயில ஆபத்து வரும். இருந்து பாருங்கவன்.....

# உலக செய்திகள்

## வட இந்தியாவை வாட்டும் வெப்பம்: உ.பி. - பீஹாரில் 98 பேர் பரிதாபப் பலி


வெயில் தாங்க முடியாமல் குளத்தில் இறங்கிய புலி ... (இடம்- ராஜஸ்தான்)

வட இந்தியாவை வெயில் வாட்டி வதைக்கும் சூழலில் பீஹார் மற்றும் உத்தரப் பிரதேசத்தில் வாட்டும் வெப்பத்தால் 98 பேர் உயிரிழந்துள்ளனர்.

இவர்களில் உத்தரப் பிரதேசத்தில் 54 பேர் உயிரிழந்துள்ளதுடன், காய்ச்சல், மூச்சுத்திணறல், வயிற்றுப்போக்கு போன்ற வெப்பம் சார்ந்த உடல் உபாதைகளால் பாதிக்கப்பட்ட 400 பேர் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

மேலும் பீஹாரில் 44 பேர் உயிரிழந்துள்ளனர். பீஹாரில் 11 மாவட்டங்களில் வெப்பநிலை 44 டிகிரி செல்சியஸுக்கு மேல் பதிவாகியுள்ளது. கடுமையான வெப்பம் காரணமாக தலைநகர் பாட்னாவில் ஜூன் 24 வரை பாடசாலைகளுக்கு விடுமுறை அறிவிக்கப்பட்டுள்ளது.

## உகண்டா பாடசாலைக்குள் தீவிரவாதிகள் வெறியாட்டம்

### 38 மாணவர்கள் உட்பட 42 பேர் கொலை



உகண்டா பாடசாலையொன்றில் ஐ.எஸ். தீவிரவாதிகள் மேற்கொண்ட தாக்குதலில் 38 மாணவர்கள் உட்பட 42 பேர் உயிரிழந்துள்ளனர்.

ஐ.எஸ். பயங்கரவாதிகளுடன் தொடர்பிலுள்ள ஏ.டி.எஃப். அமைப்பினர் அண்டை நாடான கொங்கோவில் பதுங்கியபடி உகண்டாவில் அவ்வப்போது தாக்குதல் நடத்தி வருகின்றனர்.

இந்நிலையில் கொங்கோ எல்லையையொட்டி அமைந்துள்ள கஸஸே மாவட்டத்திலுள்ள பாடசாலையொன்றில் புகுந்த தீவிரவாதிகள் துப்பாக்கியால் சுட்டும் கத்தியால் வெட்டியும் கண்மூடித்தனமாகத் தாக்குதலில் ஈடுபட்டனர். இந்த தாக்குதலில் மாணவர்கள் 38 பேரும் பொதுமக்கள் 03 பேரும் உயிரிழந்தனர்.

மாணவர் விடுதிக்கு தீ வைத்த போராளி குழுவினர், ஏராளமான மாணவர்களை அங்கிருந்து கடத்திச் சென்றுள்ளனர். தற்போது அவர்கள் கொங்கோவின் Virunga உயிரியல் பூங்காவில் பதுங்கியுள்ளதாக உகண்டா இராணுவம் தெரிவித்துள்ளது.

## ஐ.நா. தலைமையகத்தில் சர்வதேச யோகாதினம்

### 180 நாடுகள் பங்கேற்பு


''யோகாவை அன்றாட வாழ்வின் அங்கமாக மாற்றிக்கொள்ள வேண்டும்''
- பிரதமர் மோடி

சர்வதேச யோகா தினம் எதிர்வரும் 21ஆம் திகதி கடைப்பிடிக்கப்படுகிறது. அந்தவகையில் இம்முறை ஐ.நா. தலைமையகத்தில் இடம்பெறவுள்ள 9ஆவது சர்வதேச யோகா நிகழ்வுகளில் தூதுவர்கள், கலைஞர்கள், கல்வியாளர்கள் மற்றும் தொழில்முனைவோர்கள் என 180இற்கும் மேற்பட்ட நாடுகளைச் சேர்ந்தவர்கள் பங்கேற்கவுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

இதற்காக இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி நாளை 20ஆம் திகதி முதல் 23ஆம் திகதிவரை அமெரிக்காவுக்கு அரசுமுறை சுற்றுப்பயணம் மேற்கொள்ளவுள்ளார். அந்தப் பயணத்தின்போது அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன், துணை ஜனாதிபதி கமலா ஹரிஸ் ஆகியோரை சந்திக்கவுள்ளார்.

## முதலில் வந்தது கோழியா? முட்டையா?



பண்டைய கிரேக்க தத்துவஞானிகள் காலத்தில் இருந்தே, கோழி முதலில் வந்ததா, முட்டை முதலில் வந்ததா? என்ற கேள்வி இன்றுவரை எழுப்பப்பட்டு வருகிறது. பரிணாம வளர்ச்சியில் மரபணு மாற்றத்தால் முதலில் கோழியே பிறந்திருக்கும் என்று விஞ்ஞானிகள் கூறி வருகின்றனர்.

இந்நிலையில் பிரிஸ்டல் பல்கலைக்கழக ஆராய்ச்சியாளர்கள், முதலில் வந்தது கோழியா, முட்டையா? கேள்விக்கான பதிலை தங்களது ஆராய்ச்சி மூலம் கண்டுபிடித்து வெளியிட்டுள்ளனர்.

'நேச்சர் எக்காலஜி அண்ட் எவல்யூஷன்' என்ற மருத்துவ இதழில் வெளியான ஆய்வறிக்கையில், 'பாலூட்டிகள், பறவைகள், ஊர்வன வகையை சேர்ந்த விலங்குகளுக்கு முதுகெலும்பு முக்கியமானது.

அப்போது தான் இனப்பெருக்கம் செய்ய முடியும். விலங்குகள் வகையை சேர்ந்த 'அம்னியோட்'யின் பரிணாம வளர்ச்சியை பார்த்தால், அவை முட்டைகளை ஈனும் தகுதி படைத்தவையாக இருக்கலாம். நீரில் வாழும் அம்னோடிக் வகை விலங்குகள், அவை முட்டையை ஈன்று பின்னர் நிலத்தில் வாழ்ந்திருக்கலாம். அதன் மூலம் பறவையினங்கள் தோன்றியிருக்கலாம்' என்று தெரிவித்துள்ளனர். இருந்தாலும் ஆய்வறிக்கையின் முடிவுகள் மழுப்பும் வகையில் உள்ளதாக விமர்சனங்கள் எழுந்துள்ளன.

## சட்டவிரோத குடியேறிகளை கண்டறியும் பணியில் ரிஷி சுனக்

### 20 நாடுகளைச் சேர்ந்த 105 பேர் கைது



பிரித்தானிய பிரதமர் ரிஷி சுனக், அந்நாட்டு உள்துறை அமைச்சக அதிகாரிகளுடன் இணைந்து சட்டவிரோதமாக குடியேறியவர்களை கண்டுபிடிக்கும் பணியில் ஈடுபட்டார். இதில் 20 நாடுகளைச் சேர்ந்த 105 பேர் சிக்கியுள்ளனர்.

பிரித்தானியாவில் சட்டவிரோதமாக குடியேறியவர்களை கண்டறியும் பணிக்கு ரிஷி சுனக் தலைமையிலான அரசு முக்கியத்துவம் அளித்து வருகிறது. அவர்களை கண்டறியும் பணியில் உள்துறை அமைச்சக அதிகாரிகள் ஈடுபட்டுள்ளனர். லண்டனின் வடக்கு பகுதியிலுள்ள பிரெண்டில் என்ற இடத்தில் அதிகாரிகள் சட்டவிரோதமாக குடியேறியவர்களை தேடினர். ரிஷி சுனக்கும் குண்டு துளைக்காத ஆடையுடன் வந்து, தேடும் பணியில் ஈடுபட்டார்.

ஹோட்டல்கள், மதுபானசாலைகள், கடைகள் என பல இடங்களில் நடந்த இந்த தேடுதல் வேட்டையில், உரிய ஆவணங்கள் இல்லாமல் வேலை செய்த 20 நாடுகளைச் சேர்ந்த 105 வெளிநாட்டினர் கைது செய்யப்பட்டனர். 40இற்கும் மேற்பட்டவர்களை பிரிட்டனிலிருந்து வெளியேற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து அதிகாரிகள் தெரிவிக்கையில், ''சட்டவிரோதமாக வருபவர்களால் பல பாதிப்பு ஏற்படுகிறது. நேர்மையான தொழிலாளர்களுக்கு வேலை கிடைப்பது பாதிக்கிறது. அவர்கள் வரி செலுத்துவது கிடையாது என்பதால், மக்களும் பாதிக்கிறார்கள்'' எனத் தெரிவித்துள்ளனர்.

## துளிச் செய்திகள்



★ அமெரிக்காவின் முதல் முஸ்லிம் பெண் நீதிபதியாக வங்கதேச வம்சாவளியைச் சேர்ந்த நுஸ்ரத் சௌத்திரி தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

★ அசாமில் பெய்து வரும் கடும் மழையால் 11 மாவட்டங்கள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன. இதனால் சுமார் 34,000இற்கும் அதிகமானோர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

★ சூடான் தலைநகர் கார்ட்டூமில் நடத்தப்பட்ட வான்வழித் தாக்குதலில் 05 சிறுவர்கள் உட்பட பொதுமக்கள் 17 பேர் கொல்லப்பட்டுள்ளனர்.

## முன்னாள் சம்பியன் ரோயலுக்கு அதிர்ச்சியளித்த பீட்டர்ஸ் கல்லூரி



பாடசாலை அணிகளுக்கிடையிலான டயலொக் பாடசாலை ரக்பி லீக் - 2023 போட்டிகள் கடந்த புதன்கிழமை முதல் பல மைதானங்களில் நடைபெற்று வருகிறது. கண்டி போகம்பறை மைதானத்தில் நடைபெற்ற முதல் ஆட்டத்தில் குழு 1 ஏ பிரிவில் இடம்பெற்றுள்ள கொழும்பு புனித ஜோசப் கல்லூரி - புனித அந்தோனியார் கல்லூரி பலப்பரீட்சை நடத்தின. இதில் புனித அந்தோனியார் கல்லூரி 22 - 12 புள்ளிகள் கணக்கில் வெற்றியீட்டியது.

வெள்ளிக்கிழமை இதே மைதானத்தில் கண்டி வித்யார்த்த கல்லூரி - விஞ்ஞான கல்லூரி ஆகிய அணிகளுக்கிடையில் நடைபெற்ற ஆட்டத்தில் வித்யார்த்த கல்லூரி 26 - 19 என்ற புள்ளிகள் கணக்கில் விஞ்ஞான கல்லூரியை வீழ்த்தியது. முன்னாள் சம்பியனான ரோயல் கல்லூரி மற்றும் புனித பீட்டர்ஸ் கல்லூரிகளுக்கிடையில் சனிக்கிழமை நடைபெற்ற ஆட்டத்தில் புனித பீட்டர்ஸ் கல்லூரி 11 - 05 ரோயல் கல்லூரியை வீழ்த்தி அதிர்ச்சியளித்தது.

தர்மராஜ கல்லூரி - ட்ரினிட்டி கல்லூரிகளுக்கிடையில் நடைபெற்ற ஆட்டத்தில் தர்மராஜ கல்லூரி 17 - 15 என்ற புள்ளிகள் கணக்கில் வெற்றியீட்டியது.

Dialog SCHOOLS RUGBY


புத்/கட்டைக்காடு றோமன் கத்தோலிக்க தமிழ் மகா வித்தியாலயம் புத்தளம் தெற்கு கோட்டத்தில் நடைபெற்ற 16 வயதின் கீழ் கரப்பந்தாட்ட போட்டிகளில் வெற்றி பெற்று, கடந்த புதன்கிழமை ஆனமடுவ பிரதேசத்தில் இடம்பெற்ற வலயமட்ட போட்டிகளிலும் வெற்றி பெற்று மாகாண மட்டத்துக்கு தெரிவு செய்யப்பட்டது. பாடசாலையின் உப அதிபர் ச.கோபாலனுடன் மாணவர்களை படத்தில் காணலாம். (உடப்பு செய்தியாளர்)

## தகுதிகான் ஆட்டத்தில் இன்று ஐக்கிய அரபு இராச்சியத்தை எதிர்கொள்ளும் இலங்கை



இந்தியாவில் ஒக்டோபர் மாதம் ஆரம்பமாகவுள்ள ஐ.சி.சி உலகக்கிண்ண கிரிக்கெட் தொடருக்கான இரு அணிகளை தெரிவுசெய்யும் தகுதிகாண் தொடரில் தசுன் சானக்க தலைமையிலான இலங்கை அணி இன்று தங்களது முதல் ஆட்டத்தில் ஐக்கிய அரபு இராச்சிய அணியை எதிர்கொள்கிறது. இந்த ஆட்டம் இலங்கை நேரப்படி பகல் 12.30 மணிக்கு புலவாயோ நகரில் ஆரம்பமாகிறது.

ஜூன் 18 முதல் ஜூலை 9ஆம் திகதிவரை நடைபெறும் தகுதி சுற்றில் மொத்தமாக 10 அணிகள் போட்டியிடுகின்றன. இதில் குழு ஏ, பி என இரு பிரிவுகள் காணப்படுகிறது. ஒவ்வொரு பிரிவிலும் முதல் இடத்தை பெறும் இரு அணிகள் இந்தியாவில் ஒக்டோபர் 5ஆம் திகதி முதல் நவம்பர் 19ஆம் திகதி வரை நடைபெறவுள்ள உலகக்கிண்ணத்துக்கு தகுதிபெறும்.

இலங்கை அணி தங்களது இரண்டாவது ஆட்டத்தில் எதிர்வரும் வெள்ளிக்கிழமை ஓமான் அணியை இதே மைதானத்தில் எதிர்த்தாடுகிறது.

## மூன்றாமிடத்தை பிடித்த இலங்கை அணி



தென்கொரியாவில் நடைபெற்ற 2023ஆம் ஆண்டுக்கான ஆசிய இளையோர் வலைப்பந்தாட்ட சம்பியன்ஷிப் தொடரின் மூன்றாமிடத்துக்கான ஆட்டத்தில் ஹொங்கொங் அணியை 46-32 என்ற புள்ளிகள் கணக்கில் வீழ்த்தி இலங்கை அணி மூன்றாவது இடத்தை பிடித்துக்கொண்டது.

மலேசிய அணிக்கு எதிராக நடைபெற்ற அரையிறுதிப்போட்டியில் இலங்கை இளையோர் அணி 77-36 என்ற புள்ளிகள் கணக்கில் படுதோல்வியடைந்து இறுதிப்போட்டிக்கு தகுதிபெறும் வாய்ப்பை இழந்தது.

## அக்கரைப்பற்று கிழக்கு மேற்கு சமுர்த்தி வலயங்களுக்கு இடையிலான மென்பந்து கிரிக்கெட் போட்டி

(திராய்க்கேணி செய்தியாளர்)



'இளைஞர்களுக்கான ஓர் இனிய அழைப்பு' என்ற தொனிப்பொருளில் சமுர்த்தி சமுதாய அடிப்படை அமைப்பின் அங்கத்தவர்களுக்கு இடையிலான 08 ஓவர்கள் கொண்ட மென்பந்து சுற்றுப்போட்டியின் இறுதி நிகழ்வு அண்மையில் அக்கரைப்பற்று அதாஉல்லா விளையாட்டு அரங்கில் நடைபெற்றது.

இந்நிகழ்வின் பிரதம அதிதியாக உதவி பிரதேச செயலாளர் எஹியா றாஸித், பிரதி திட்டமிடல் பணிப்பாளர் ஏ.எம். தமீம் மற்றும் தலைமை பீட முகாமையாளர் எம்.ஜே.எம். நிஃமத்துல்லாஹ், முகாமைத்துவ பணிப்பாளர் எம்.சி.எம். தஸ்லீம், திட்ட முகாமையாளர் என்.ரி.மசூர், மேற்கு வங்கி முகாமையாளர் யூ.கே.நளிம், கிழக்கு வங்கி முகாமையாளர் கே.சத்தியப்பிரியன், சமுர்த்தி பிரதேச அமைப்பின் தவிசாளர் எம்.ஜி.எம். பஹ்றுதீன் மற்றும் சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், பார்வையாளர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

நடுவர்களாக இர்சாத் மற்றும் பர்ஹான் ஆகியோர்கள் கலந்து கொண்டு மிகச் சிறப்பாக செயற்பட்டனர். இப்போட்டியில் அக்கரைப்பற்று மேற்கு வலய அணி வெற்றியீட்டியது. இவ் அணியானது மாவட்ட மட்டப் போட்டியில் கலந்து கொள்ளவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# விளையாட்டு செய்திகள்

thamilansports@gmail.com

## எல்.பி.எல். தொடரின் போட்டி அட்டவணை அறிவிப்பு

### முதல் ஆட்டத்தில் மோதும் ஜவ்னா - கொழும்பு

இலங்கை கிரிக்கெட் சபையின் ஏற்பாட்டில் நான்காவது தடவையாக நடைபெறவுள்ள லங்கா ப்ரீமியர் லீக் (எல்.பி.எல்) தொடருக்கான போட்டி அட்டவணை நேற்று உத்தியோகபூர்வமாக வெளியிடப்பட்டது. அதன்படி அடுத்த மாதம் 30ஆம் திகதி நடைபெறவுள்ள முதல் ஆட்டத்தில் நடப்பு சம்பியன் ஜவ்னா கிங்ஸ் - கொழும்பு ஸ்ட்ரைக்கர்ஸ் அணிகள் கொழும்பு ஆர். பிரேமதாச மைதானத்தில் பலப்பரீட்சை நடத்துகின்றன.

போட்டிகள் கொழும்பு ஆர். பிரேமதாச மற்றும் கண்டி பல்லேகல சர்வதேச கிரிக்கெட் மைதானம் ஆகிய இரு இடங்களில் நடைபெறவுள்ளன. லீக் சுற்றுப் போட்டிகள் ஓகஸ்ட் 15ஆம் திகதியுடன் நிறைவுக்கு வருகிறது. ஓகஸ்ட் 17, 19ஆம் திகதிகளில் ப்ளேஓப் போட்டிகளும் 20ஆம் திகதி இறுதிப்போட்டியும் நடைபெறவுள்ளன. இறுதிப்போட்டி மழையால் பாதிக்கப்படுமிடத்து 21ஆம் திகதி மேலதிக நாளாக ஒதுக்கப்பட்டுள்ளது.

Printed by the Kalukodayawa, Malwana Press & Published by Liberty Publishers (Pvt.) Ltd. 91, Wijerama Mawatha, Colombo 7